32°c
கூடிய வெப்பநிலை 40°c
குறைந்த வெப்பநிலை 27°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 146 வள்ளுவர் ஆண்டு: 2045

சித்திரை 08, திங்கள் 21.04.2014

வலி. தெற்கு பிரதேச சபை
21 APR 2014
பொது சன நூலகம்
ஏழாலை

# எட்டிய இணக்கம் அமுலானால் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு

## பெயரைக் கேட்டாலே நாமொன்றும் தெறித்தோடவில்லை என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்க மாட்டோம் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை. நாம் அதில் பங்கெடுக்க வேண்டுமானால் எமக்கும் அரசுக்கும் இடையேயான பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விளக்கினார் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தென்னாபிரிக்க அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. அது தொடர்பில் இலங்கை அரச தரப்பினருடனும், தமிழர் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் அந்த நாடு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. இந்த நிலையில் இம்மாத ஆரம்பத்தில் தென்னாபிரிக்கா சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினர்கள் அங்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தி னர்.

அதன் பின்னர் தென்னாபிரிக்க அனுசரணையுடன் இலங்கை அரசுடனான பேச்சில் ஈடுபடுவதற்கு தாம் தயார் என்றும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

அதேவேளை, நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்து கொள்வதே சிறந்த வழியாகும் என்று கூறியிருந்தது இலங்கை அரசு.

நிலைமை இவ்வாறிருக்க நேற்றுமுன்தினம் கொழும்பு ஊடகங்களில் வெளியான

“ தென்னாபிரிக்க அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசுடனான பேச்சில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தபோதும், தெரிவுக் குழு ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருக்கின்றது இலங்கை அரசு. ”

23ஆம் பக்கம் பார்க்க

தென்னாபிரிக்க முயற்சியில் அரசுக்கு சற்று ஆறுதல்
பக்கம் 14

## விசாரணைக் குழுவை அறிவிக்க முன் மூனுடன் பேசுவார் நவநீதம்பிள்ளை

கொழும்பு, ஏப்.21

இலங்கையில் இடம்பெற்றது என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்படவுள்ள ஐ.நா. விசாரணைக் குழுவின் நியமனத்தை அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னதாக ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனை, ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சந்திக்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## கேபியின் குற்றங்களில் இலேசான மாற்றங்கள்

### ஆனாலும் அவர் தொடர்ந்தும் தேடப்படுகிறாராம்

கொழும்பு, ஏப்.21

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி.க்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

கேபிக்கு எதிரான சிவப்பு அறிக்கை நீக்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசால் கூறப்பட்டிருந்த போதும், அவரது பெயர் சர்வதேச பொலிஸாரின் (இன்றபோல்) இணையத்தளத்தில் தொடர்ந்தும் பதிவேற்றப் பட்டுள்ளது. ஆயினும் தேடப்படுவது தொடர்பான குற்றங்களில் தற்போது மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதம், வெடிபொருள் மற்றும் ஆயுத பயன்பாடு தொடர்பில் தேடப்பட்டு வரும் நபராக குமரன் பத்மநாதனின் பெயர் இணைக்கப்பட்டிருந்

23ஆம் பக்கம் பார்க்க

## இணைத்தலைமையின் கீழ் இணைப்பு குழு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைத்தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்குரிய இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப் படவில்லை என்ற காரணத்தினால் குறித்த கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்தது.

இந்த நிலையில் இந்த ஆண்டுக்குரிய ஒருங்கிணைப்புக்

23ஆம் பக்கம் பார்க்க

பின்தொடருங்கள் எம்மை...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## இருநாட்டு மீனவர் பிரச்சினையில் அமைச்சு மட்டப் பேச்சு

கொழும்பு, ஏப்.21

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் பேச்சு நடத்தப்படுவதற்கு முன்னதாக அமைச்சு மட்டப் பேச்சு நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார் மீன்பிடித்துறை மற்றும் கடல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன.

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்க ஆயர்களுக்கு தடை

### விளக்கம் கேட்கின்றார் இராயப்பு ஜோசப் ஆண்டகை

கொழும்பு, ஏப்.21

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அனுமதியுடன், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்குச் சென்ற மன்னார் மற்றும் அநுராதபுரம் மறை மாவட்டங்களுக்கான ஆயர்களுக்கு நேற்றுத் திடீரென அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு, தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து அவர்களுக்கு உதவிப்பொருள்களை வழங்கும் நோக்குடன் இவ்விரு ஆயர்களும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தனர். அதற்கு அமைச்சும் உரிய அனுமதியை வழங்கியிருந்தது.

இதன்படி நேற்றுக் காலை

23ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக பணியாளர்களால் மாதம் ரூ.20 மில்லியன் செலவு

### வடமாகாண கல்வித் திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.21

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட வெற்றிடங்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளமையால், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலும் பார்க்க 20 மில்லியன் ரூபா நிதி மேலதிகமாக ஒவ்வொரு மாதமும் செலவிடப் படுகின்றது என்று தெரிவிக்கப் படுகின்றது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு 17 ஆயிரத்து 443 ஆளணி வெற்றிடங்கள் உள்ளன. இந்த ஆளணிக்கு அமையவே, அதற்குரிய வேதனங்களை வழங்கும் பொருட்டே வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப் பட்ட வரவு - செலவுத் திட்டத்திலும் அவ்வாறே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும் இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க ஒவ்வொரு மாதமும் 20 மில்லியன் ரூபா

23ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை வளையத்துக்குள் டக்ளஸ், கருணா, பிள்ளையான்

### காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.21

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற காணாமற் போகச் செய்யப் பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் குணதாஸா.

காணாமற்போனோர் தொடர்பில் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் வழங்கிய பலர் ஈ.பி.டி. பியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழீழ விடுதலைப் புலிகள்

23ஆம் பக்கம் பார்க்க

ஆபத்தான கட்டத்துக்கு செல்கின்றது இந்தியா



பக்கம் 06

## சிறைக் காவலர் தாக்குதலில் கைதி படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.21
யாழ். சிறைச்சாலையில் வாகன மோசடிக் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறைக்காவலரால் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தென்பகுதியிலிருந்து வடக்கைகு வாகனங்களை அமர்த்திக் கொண்டு வந்து வடபகுதியில் அவற்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் அண்மையில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த நபர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி நபர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் குறித்த நபர் மீது சிறைக் காவலர் ஒருவர் கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளார். அதனால் குறித்த கைதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த கைதியை தாக்கிய சிறைக்காவலரை சிறைச்சாலை நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட போதும், அதுதொடர்பில் சிறைச்சாலை அத்தியட்சகரின் கருத்தை உடனடியாக அறிய முடியவில்லை. (ற-5-4)

## தீர்வையற்ற வாகன இறக்குமதி சான்றிதழுக்கு வரி

கொழும்பு, ஏப்.21
தீர்வை வரியற்ற வாகன இறக்கமதிக்கான சான்றிகழ் வழங்கப்படும் போது 10 சதவீத வரியை அறவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் நிதி அமைச்சினால் புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியீடப்பட்டுள்ளது. அதன்படி, வாகன இறக்குமதி சான்றிதழை விற்பனை செய்யும் போது, ஏனைய வரிகளுக்கு மேலதிகமாக ஐந்து லட்சம் ரூபா மேலதி கமாக செலுத்தப்பட வேண் டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# வெறும் வாய்ப்பேச்சால் நல்லிணக்கம் ஏற்படாது

## செயற்பாட்டில் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கிறார் மன்னார் மறைமாவட்ட ஆயர்

மன்னார், ஏப்.21
ஒற்றுமை, நல்லிணக்கம் என்பன குறித்து வெறும் வாய்ப் பேச்சுகளால் எந்தப் பயனும் இல்லை. செயற்பாட்டிலேயே அது உறுதி செய்யப்பட வேண்டும். உண்மைகளை ஒப்புக் கொண்டு நடந்த விடயங்களுக்கு பொறுப்பு கூறப்படும் பட்சத்திலேயே உண்மையான சமாதானம், நல்லிணக்கம் உருவாகும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு திருப்பலியினை ஒப்புக்கொடுத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொய் உள்ள இடத்தில் உண்மையான அமைதி பிறக்காது. நீதி இல்லாத இடத்திலும் அவ்வாறான குழப்பமான சூழ்நிலை ஏற்படும். எமது நாட்டிற்கு மாற்றம் தேவை. அதனை உலக நாடுகள் அறிந்திருக்கின்றன. எமக்கு உதவி செய்ய வேண்டும் என அந்த நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன. அவற்றைஎமது நாடு ஏற்றுக்கொள்ளுவதாக இல்லை. இதனால் பல ஆண்டுகளுக்கு பின் நீதி இல்லாமல், உண்மை இல்லாமல் சமாதானம் இன்றி தவித்த மக்களாக எமது நாட்டு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை நீதியுடன் கூடிய சமாதானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வீதி அமைக்கப்படலாம், கட்டடங்கள் கட்டப்படலாம் அவை மட்டுமல்ல எங்கள் தேவை. உண்மையான தேவை உலகத்தில் உள்ள அனைத்து மனிதர்களும் உண்மையான சமாதானத்துடன், ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே. கவலைகள், கஷ்டங்கள், வறுமைகள் இருக்கலாம். ஆனால் நீதியுடன் கூடிய சமாதானமே இந்த மக்களுக் குத் தேவை.

1920ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களை முடித்து நல்ல தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க உலக நாடுகள் எங்களுடன் சேர்நது குரல் கொடுத்து வருகின்றன. சமாதானம் என்பது கடவுளின் உண்மையான கொடை. இந்த நாட்டின் சமாதானத்திற்காகவும், எங்களுக்காகவும் கேட்கப்படுகின்ற இந்த மன்றாட்டுக்கள் நிறைவேற்றப்பட வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற)

## பாக். பாதுகாப்பு பல்கலையின் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு

கொழும்பு, ஏப்.21
பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் 21 உறுப்பினர்களைக் கொண்ட குழு இந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது என்று பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேஜர் ஜெனர் நோல் ஸ்ரேல் தலைமையிலேயே இந்தக் குழுவினர் இலங்கைக்கு இன்றைய தினம் வரவுள்ளனர். ஒரு வார காலம் இலங்கையில் தங்கி நிற்கும் இவர்கள் இந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குச் செல்லவுள்ளனர்.

**ஒரு வார காலம் இலங்கையில் தங்கி நிற்கும் இவர்கள் இந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர்.**

பாதுகாப்புப் பொருளாதாரம், உள்ளக மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பில் அறிவதற்காகவே இவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் பல்வேறு தரப்பினரையும் இலங்கையில் தங்கி நிற்கும் காலப் பகுதியில் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்றும் பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பாகிஸ்தானின் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் ரசாத் கடந்த 7 ஆம் திகதி முதல் ஒரு வார காலப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்ததுடன், யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்தே பாது காப்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வரவுள்ளதுடன் யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். இந்தச் செயற்பாடுகள் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இராணுவ உறவுகள் நெருக்கமடைந்து செல்வதையே எடுத்துக்காட்டுகின்றன என்று இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-5)

# மூன்று மணி நேரத்தில் முடிக்கப்பட்டது விவசாய அமைப்புகளின் போராட்டம்

கிளிநொச்சி, ஏப்.21
இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கோரி கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புகள் மேற்கொண்ட அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் மூன்று மணி நேரத்தில் முடிவுக்கு வந்தது.

வட மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துச் சில உறுதிமொழிகளை வழங்கியதையடுத்தே உணவு தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.


போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ். குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்வது தொடர்பாக தயாரிக்கப்பட்ட திட்டம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், குறித்த திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று கோரி 22 விவசாய அமைப்புகள் இணைந்து நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "நீர் வழங்கல் திட்டத்தை முழுமையாக நிறுத்தி எமது குளத்தை எமக்காக புனரமைத்துத் தாருங்கள்", உயிரையும் இழந்து உடமைகளையும் இழந்த எமக்கு இரணைமடு பிடிமானம். அதையும் பறித்து விடாதீர்கள்.", "தான் எதற்கு கையொப்பமிடுகின்றேன் என்பதே விளங்காமல் கையொப்பமிட்டவர்கள், தத்துவம் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவது போன்றது.", "நீர் வழங்கும் கிளிநொச்சி மக்களுக்கும் பாதிப்பு. நீரைப் பெறும் யாழ் மக்களுக்கும் பாதிப்பு. அப்படியாயின் திட்டம் எதற்காக ?" வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளைப் புறந்தள்ளி கிளிநொச்சி மக்களையும், யாழ். மக்களையும் முரண்பட வைக்கும் செயற்பாட்டிலேயே நீர் வழங்கல் அதிகார சபை இறங்கியுள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனினும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மணி நேரத்தின் பின்னர், அவர்களுக்கு வழங்கப்பட்ட சில உறுதிமொழிகளை அடுத்து அவர்கள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். (ற-18-55)

## கசிப்பு வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.21
வட்டுக்கோட்டை தொல்புரம் பகுதியில் வீட்டில் கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வீட்டில் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ற-14)

## இ.போ.சவுக்கு அதிக வருமானம்

கொழும்பு, ஏப்.21
கடந்த 55 வருட வரலாற்றில் இலங்கைபோக்குவரத்துசபைக்கு அதிக கூடிய வருமானம் ஈட்டித் தந்த நாளாக கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி பதிவாகியுள்ளது. அந்த நாளில் மட்டும் 82 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

# முறையான அழைப்பு விடுக்கப்பட்டால் அரசுக்கு உதவக் காத்திருக்கின்றேன்

## சர்வதேச விசாரணை குறித்து பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.21
இலங்கையின் இறுதிப் போர் குறித்து சர்வதேசத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்யான பரப்புரைகளுக்கு எதிராக உண்மைகளை வெளியிடுமாறு அரசிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டால், அதற்குத் தன்னால்உதவமுடியும்-என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"நாட்டுக்கு சேவையாற்ற - கடமையின்அடிப்படையில்அதனை மேற்கொள்ள - நான் கட்டுப்பட்டுள்ளேன். அவ்வாறான சட்டரீதியானதேவைஏற்பட்டால்அதற்காக நான் முன்வருவேன்.

சர்வதேச இணக்கப்பாடுகளின் அடிப்படையில் அவ்வாறான விடயங்களை நாம் எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். போர் எப்படி மேற்கொள்ளப்பட்டது என்பது அரசுக்குத் தெரியாது. போர் முனைக்கு செல்லாமல் ஜனாதிபதியும், பாதுகாப்புச் செயலாளரும் போரை வழிநடத்தியதாகக் கூறுகின்ற னர். அதன் காரணமாகவே எனது பெயரை சகல இடங்களிலும் இருந்து நீக்கினர். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் எமது உதவி கட்டாயம் அரசுக்குத் தேவைப்படும்.

போர் குற்றங்கள் பற்றி விசாரணை நடத்தவும், 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை வழங்குவதாகவும் ஓர் உடன்படிக்கையில் ஐ.நா செயலாளர் பான் கீ மூனுடன் இணைந்து ஜனாதிபதியே கையெழுத்திட்டார். வீண் பேச்சுக்களை பேசி, உளவு சேவை, இரகசிய பொலிஸாரை கொண்டு அச்சுறுத்தி, பொய்யான வழக்குகளை தாக்கல் செய்து இவற்றை செய்ய முடியுமா? - என்று தெரிவித்துள்ளார். (ற)

# தொண்டமானாறு மண் அணை விரைவில் அகற்றப்படுமென உறுதி

## வடமாகாண விவசாய அமைச்சர் வழங்கினார்

யாழ்ப்பாணம்,ஏப்.21
தொண்டமானாற்றில் புதிய பாலம் அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மண் அணையை அகற்றுவதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன். தொண்டமானாற்றுப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சின் திணைக்கள அதிகாரிகள் சென்றிருந்தனர். அப்போது அந்தப் பகுதியிலுள்ள மீனவர்களுடன் அமைச்சர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

அதன் போது மீனவர்கள், தொண்டமனாற்றில் அமைக்கப்பட்டுள்ள நன்னீர் தடுப்புக் கதவுகளைத் திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர், "அவ்வாறு திறந்து விடுவதனால் கடல் நீர் நன்னீருடன் கலந்துவிடும். நன்னீர் உவராகி விடும். யாழ்.குடா நாட்டின் குடிதண்ணீர் ஏற்கனவே மாசமடைந்துள்ளதால் இது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்."- என்று தெரிவித்தார்.

எனினும் தொண்டமனாற்றில் புதிய பாலம் அமைக்கும் போது ஏற்படுத்தப்பட்ட மண் அணையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மீனவர்கள் சுட்டிக்காட்டியபோது அதனை அமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

"அணைக் கட்டு நிர்மாணிப்பின்போது ஏற்படுத்தப்பட்ட மண் அணை மற்றும் அதனோடு இணைந்துள்ள கழிவுக் கற்கள் என்பன அகற்றித் தரப்படும். அதற்கு முன்னதாக, குறித்த பாலத்தை அமைத்த ஒப்பந்தகாரருடன் பேசிய பின்னர், அவற்றை எனது அமைச்சின் நிதியில் செய்து தர முடியும்" என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ற-5)

## கூட்டுறவு சங்கக் கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் சனியன்று

### தெரிவு இடம்பெறாத 13 சங்கங்களுக்கு

கொழும்புத்துறை, ஏப்.21
யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற போது அங்கத்தவர்களின் வரவு கோரமின்மையால் தெரிவு நடைபெறாத 13 கிளைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட தவிசாளர்கள் முன்னிலையில் பின்வரும் கிளைகளுக்கு குறிப்பிடப்படும் இடங்களில் கிளைக்குத் தெரிவு இடம்பெறவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் தெரு (3சி) யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியிலும், யாழ்.பாடி(10), யாழ். சன்மார்க்க வித்தியாலயத்திலும், நல்லூர் வடக்கு (11), வன்னியசிங்கம் மண்டபத் திலும், நல்லூர் மத்தி (12) கிளைக் கட்டடத்திலும், கைலாசபிள்ளையார் (13) பேக்கரி உரிமையாளர் சங்கத்திலும், ஆனைப்பந்தி (14) ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், ஆரியகுளம் (15) கிளைக் கட்டடத்திலும், நீராவியடி (16) யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையிலும்- அரியாலை (20) கிளைக் கட்டடத்திலும், மூத்த விநாயகர் (26) கிளைக் கட்டடத்திலும், ஸ்ரேசன் சந்தி (28) புனித மரியாள் பாடசாலையிலும், மவுண்கார்மல் (31) பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயம் பாங்சால் வீதியிலும், சின்னக்கடை (35) புனித யாகப்பர் ஆலய மண்டபத்திலும் இளைஞர் குழுத் தெரிவு தெரிவு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஔ-135)



## கச்சாய், தனங்களப்பு வீதிகளுக்கு தன்னியக்க ரயில் கடவை

தென்மராட்சி, ஏப்.21
சாவகச்சேரி நகரின் இரு பிரதான வீதிகளான கச்சாய் வீதி, தனங்களப்பு வீதி ஆகியவற்றுக்கு தன்னியக்க ரயில் கடவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகரை அண்டிய பகுதியில் இவை காணப்படுவதால் ரயில் வரும் வேளைகளில் வாகன மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த இந்தத் தன்னியக்க கடவைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரயில் பாதை செல்லும் ஏனைய ஒழுங்கைகள், வீதிகளுக்குகடவைக் காப்பாளர்களை நியமிக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.(வ-9)

## கைதடி இல்ல முதியோரை வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் செல்லல்

தென்மராட்சி,ஏப்.21
கைதடிச் சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள முதியோர்களை மாதாந்தம் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கு தல வழிபாட்டுக்காக அழைத்துச் செல்லும் செயற்றிட்டம் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் (மார்ச்) நிலைய முதியோர்கள் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் திருவிழாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அனுசரணையுடன் வெள்ளிக்கிழமை பெரிய வெள்ளியை முன்னிட்டு 40 முதியோர்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுக் கோவில் மற்றும் திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களுடன் இல்லப் பணியாளர்கள் 15 பேரும் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பாஷையூரில் கடல் நீர் புகுவதை தடுக்க கிரவல் மண் அணை



*கிரவல் மண் அணையைக் காணலாம்*

யாழ்ப்பாணம், ஏப்.21
பாஷையூர் கடற்கரைப் பகுதியில் மக்களின் குடியிருப்புப் பகுதிக்குள் கடல் நீர் உட்புகுவதனைத் தவிர்க்கு முகமாக கிரவல் மண் கொட்டப்பட்டு வருகின்றது.

வெதுப்பகத்தை அண்டிய பிரதேசத்துக்கே இந்த மண் கொட்டப்பட்டு நிரப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-17)

# மாறுபட்ட விலையில் பசுப்பால் கொள்வனவு

### பெரும் பாதிப்பு பண்ணையாளர்களுக்கு

அச்சுவேலி, ஏப்.21
யாழ்.மாவட்டத்தில் பசுப்பாலின் கொள்வனவு விலையில் இடத்துக்கு இடம் நிறுவனத்துக்கு நிறுவனம் மாறுபட்ட விலை நடைமுறை காணப்படுவதால் மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பெரும் பாதிப்புக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பாலின் கொள்வனவு விலை மற்றும் கொள்வனவு நடைமுறையில் மாவட்ட ரீதியில் ஒருநிலைப்படுத்தப்பட்ட நடைமுறை மேற்கொள்வதற்கு வசதியாக இன்று நடைபெறும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துரையாடப்படலாம் என்று அறியப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பசுப்பாலின் கொள்வனவு விலை 58 ரூபாவில் இருந்து 40 ரூபா வரை லீற்ற ர் ஒன்று இடத்துக்கிடம் மாறுபட்ட நிலையில் கொள்வனவு செய்யப்படுவதோடு கூட்டுறவு அமைப்புக்கள் லீற்றர் அளவு அடிப்படையில் கொள்வனவு செய்யும் அதே வேளையில் தனியார் துறை நிறுவனங்கள் கொழுப்பு திண்ம அடிப்படை கிலோகிராம் நிறுத்தல் அளவை அடிப்படையில் கொள்வனவு செய்வதால் விலை பெருமளவில் ஏற்ற இறக்கம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாலின் கொள்வனவு விலை ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து லீற்றருக்கு பத்து ரூபா அதிகரிப்புச் செய்து 58 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 70 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் பாலின் கொள்வனவு விலையில் பொருத்தமான அளவு அதிகரிப்புச் செய்யாமல் பழைய விலை அளவிலேயே கொள்வனவு செய்வதாகக் கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்ட பால் கொள்வனவில் ஈடுபட்டு பெருமளவில் பாலைக் கொள்வனவு செய்து பால்மா தயாரிப்புக்கு வெளிமாவட்டத்துக்கு எடுத்துச் செல்லும் "நெஸ்லே" நிறுவனம் பழைய விலை நடைமுறையிலே கொள்வனவு செய்கின்றது.

அத்துடன் தற்போது "காகில்ஸ் வூட் சிற்றி" நிறுவனமும் வேறு சில தனியார் துறையினரும் பால் கொள்வனவில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளன.

கொள்வனவு நடைமுறையில் விலையைவிட அளவையில் மாறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. கூட்டுறவு அமைப்புகள் பாலை லீற்றர் அளவு அடிப்படை "முகத்தல் அளவையில்" கொள்வனவு செய்கின்றன. ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் கொழுப்பு திண்ம அடிப்படையில் பாலை நிறுத்து கிலோ கிராம் அடிப்படை "நிறுத்தல் அளவையில்" கொள்வனவு செய்கின்றன. இந்த நடைமுறை முரண்பாடும் பண்ணையாளர்கள் மற்றும் மாடு வளர்ப்போரை குழப்பத்துக்கு உள்ளாக்குவதாகவும் கூறப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் பால் கொள்வனவு விலை மற்றும் கொள்வனவு நடைமுறையில் ஒருமுகப்படுத்தப்பட்ட பொது இயல்பை ஏற்படுத்துவதில் "யார்? மணி கட்டுவது" என்ற நிலையில் இருந்து வருவதால் இன்று மாவட்ட செயலகத்தில் நடைபெறும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் கூட்டத்தில் இது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டு மாவட்ட ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட முடிவு எட்டப்படலாம் என்று கூறப்படுகின்றது.(வ-11)

# பளை ரயில் நிலையத்துக்கான தொலையேசி வசதியை செய்யுங்கள்

### மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஏப்.21
பளை ரயில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கத் தொடங்கி இரண்டு மாதங்களாகியும் இன்னமும் தொலைபேசி இணைப்பு வழங்கப்படாததால் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் ரயில் சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் முற்பதிவுகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மக்கள் ரயில் சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் முற்பதிவுகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

ரயில் நிலையத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் என 02532 45525 குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதனுடன் இணைப்பை ஏற்படுத்தினால் அநுராதபுரத்திலிருந்து சிங்களத்தில் பதில் கூறப்படுகிறது. இதனால் யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நிலைய உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமது தொலைபேசிக்கு பயணிகள் தொடர்ந்து அழைப்புகளை ஏற்படுத்துவதால் தமது கடமைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதால் இணைப்புகளை இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும் தேவையானோர் அநுராதபுரத்தில் உள்ள பிரதான அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதற்கென அதன் தொலைபேசி இலக்கம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (வ-9)

## பட்டி மாடுகளால் பிரதான வீதி போக்குவரத்துக்கு இடைஞ்சல்

யாழ்ப்பாணம்,ஏப்.21
கோப்பாய், நீர்வேலி, பகுதிகளைச் சேர்ந்த பட்டி மாடுகள் பருத்தித்துறை பிரதான வீதியோரமாக ஓட்டிச்செல்லப்படுவதனால் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



*வீதியில் செல்லும் பட்டி மாடுகள்*

பட்டிமாடுகளை பிரதான வீதியூடாகக் கொண்டு செல்லக்கூடாது என்று ஏற்கெனவே வலி.கிழக்கு பிரதேச சபையும் அறிவித்திருந்தது.

எனினும் வளர்ப்பு பட்டி மாடுகள் பிரதான வீதியைக் கடந்து தரவை நிலங்களுக்கு தினமும் மேய்ச்சலுக்காக கொண்டு செல்லப்படுகின்றன. (வ-17)

## விபத்தில் இருவர் சாவு

கொழும்பு. ஏப்.21

நாரம்மல. ஓஹல்பொல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் மரணமடைந்ததுடன். 5 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியொன்று ஜீப் வாகனத்துடன் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கிரிந்தான மற்றும் அனுக்கனே பகுதிகளைச் சேர்ந்த 90 மற்றும் 50 வயதுடையவர்களே மரணமடைந்துள்ளனர்.

இதேவேளை. ஜீப் வண்டியின் சாரதியை கைதுசெய்துள்ள நிலையில். அவரை இன்றைய தினம் குளியாப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.(ற)

# இலங்கை மீது பிரிட்டன் தடை விதிக்கவும் கூடும்

## கொழும்பு வார இதழ் கூறுகின்றது

கொழும்பு. ஏப்.21

இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகளை பிரிட்டன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கோரும் புதியதொரு போராட்டத்துக்கு அங்குள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு தமிழ் அமைப்புகள் தயாராகி வருகின்றன என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையைக் காரணம் காட்டி. இலங்கையில் இருந்து இறக்குமதிசெய்யப்படும்பொருள்களை வாங்கக் கூடாது என்பது தொடர்பாக. ஏற்கனவே பிரிட்டனின்உயர்மட்ட அரசியல்வாதிகளுடன் இந்த அமைப்புகள் பேச்சு நடத்தியுள்ளன.

அமெரிக்காவுக்கு அடுத்ததாக. பிரிட்டன் இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடாக விளங்குகிறது. தேயிலை. ஆடைகள். மீன். மிதிவண்டி. இறப்பர். மாணிக்கம் மற்றும் நகைகள். தும்பு உற்பத்திகள். மட்பாண்டப் பொருள்கள். பழங்கள். காய்கறிகள். விளையாட்டுப் பொருள்கள் என்பன இலங்கையில் இருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அடுத்த ஆண்டு பிரிட்டனில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில். அங்குள்ள தமிழ் வாக்காளர்கள். பல இடங்களில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையில் உள்ளனர். இந்தநிலையில் இலங்கை மீது வர்த்தகத் தடை விதிக்கப்பட்டால் ஆச்சரியப்படமாட்டேன் என்று அங்குள்ள சிங்கள அமைப்பின் தலைவர் டக்ளஸ் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் அங்குள்ள இலங்கையர்களுடன் பேசி ஒருங்கிணைக்கத் தவறியதால். விடுதலைப் புலிகள் ஆதரவு தமிழர்களின் கை ஓங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். இலங்கை அரசு ஒரு ஆதரவு தேடும் பொறிமுறையை உருவாக்காது போனால். நிலைமைகள் இன்னும் மோசமடையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.- என்றுள்ளது.

அதேவேளை இலங்கை மீது வர்த்தகத் தடைவிதிக்கப்பட்டால். தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதி கடுமையான பாதிப்பைச் சந்திக்கும் என்று வர்த்தகவட்டாரங்கள்கூறுகின்றன.(ற)




யாழ்.நகரின் பிரதான வீதிகளில் உள்ள சுவர்களில் நேற்று இந்தச் சுவரொட்டியைக் காணமுடிந்தது. 'யாருக்கு எதிராக இந்த வாள்" என்ற வாசகத்துடன் காணப்பட்ட இந்தச் சுவரொட்டியில் வேறு எவையும் எழுதப்பட்டிருக்கவில்லை. இந்தச் சுவரொட்டி மக்கள் மத்தியில் அசௌகரிய நிலையை ஏற்படுத்தியிருந்தைக் காணக் கூடியதாக இருந்தது. வடபகுதியில் தற் போது "சுவரொட்டி" தொடர்பான பிரச்சினைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. அது தொடர்பில் தற்போது மக்கள் அச்சத்துடனேயே உள்ளனர். இந்த நிலையில். வன்முறையைத் தூண்டும் வகையில் வாளுடன். முகவரியின்றி அநாமதேயமாக காணப்பட்ட இந்தச் சுவரொட்டியை மக்கள் அச்சத்துடனே நோக்கினர்.(ற-135)



"க்கிளிக்கர்" குழுமத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் யாழ். இந்து கல்லூரியில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வீ. கணேசராசாவும் சிறப்பு விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் சிறந்த புகைப்படவியலாளர்களாக இந்தியாவைச் சேர்ந்த பிரபு குருநாதன் முதலாவது இடத்தையும் குகறூபன் இரண்டாவது இடத்தையும் திலக்சன் முன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கான விருதுகளை வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வழங்கினார்.

# மூதாதையரின் கலாசார பண்புகளை பாதுகாக்க வேண்டியது கட்டாயம்

## பேராசிரியர் பசுபதி சிவநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.21

எமது மூதாதையர்கள் விட்டுச்சென்ற வாழ்க்கைமுறையை கலாசாரப்பண்புகளை அழிந்து விடாது பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்த அழிவுக்குக் காரணமாக எமது அன்றாட செயற்பாடுகளே அமைந்துள்ளன என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பசுபதி சிவநாதன் தெரிவித்தார்.

சைவ நெறிக்கூடம். சைவ மகாசபை. தெய்வத்தமிழ் அறக்கட்டளை ஆகியன இணைந்து நடத்திய தமிழ் அருட்சுனைஞர் பயிற்சி நிறைவு விழா நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சைவ மகா சபை பெருந் தலைவர் க.கலியுகவரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

எங்களுடைய கலை, கலாசாரம் எமது மூதாதையர்கள் எமக்காக விட்டுச்சென்ற சொத்து. இந்த பண்பாடு, வாழ்க்கை நெறி தனித்துவமானது. இவை இன்றைய காலத்தில் மாற்றம் அடைந்து செல்கிறது. ஆனால் அதனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. அடுத்த சந்ததியினர் எமக்கான கலாசாரப் பண்பாடுகளை பின்பற்றுவதற்கு ஏற்ப அவற்றைக் கொண்டு செல்ல வேண்டும்.

எம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு ஏற்ப ஆத்மீக சிந்தனைகளையும், அறிவையும் பின்பற்றவேண்டும். வாழ்வின் அர்த்தத்தை அதன் உண்மை நிலையை அறிய வேண்டியவர்களாக உள்ளோம். என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் நாடு தெய்வத்தமிழ் அறக்கட்டளையைச் சேர்ந்த மு.பெ.சத்தியவேல் முருகனார் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்திய சாலையின் இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் பூ.லக்ஸ்மன், சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சைவத் தமிழ் பதிப்பாசிரியர் க.சச்சிதானந்தன், சிவத்தமிழ் மானிட விடியற்கழக ஆலோசகர் அ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 'அன்பே சிவம்' பருவ இதழ் வெளியீடும், சைவமகா சபையின் இணையத்தள ஆரம்ப நிகழ்வும், தமிழ் அருட்சுனைஞருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், ஆசிரியர் கௌரவிப்பும், சிவத்தமிழ் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. (வ-4)



*தமிழ் அருட்சுனைஞருக்கு சான்றிதழ் வழங்கியபோது*

**ஆங்கில வகுப்பு**

ஆங்கிலம் குறூப் மற்றும் தனிப்பட்ட வகுப்பு யாழ். மற்றும் கிளிநொச்சியில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரால் O/L இல் "A" சித்தி பெற

தொடர்பு - ஆசிரியர் "கரன்" T.P: 077 6114068

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி ஸ்ரீகரன் (பரன்)

(முன்னாள் கணக்கு லிகிதர் தென்னை அபிவிருத்திச்சபை, பளை ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் - கோண்டாவில்)



21 A, சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், குப்பிழானை புகுந்த இடமாகவும் கொண்ட கனகசபாபதி ஸ்ரீகரன் (பரன்) நேற்று 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனசபாபதி (விதானையார்) - அம்பிகை (ஆசிரியை) தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற நிர்மலாவின் (முன்னாள் கணக்கு லிகிதர் தென்னைஅபிவிருத்திச்சபை, பளை) அன்புக்கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் (அருள்), வாணி (சோதி), தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு செ. நடராசா (இளைப்பாறிய அதிபர்) காலஞ்சென்ற திருமதி நாகேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்புமருமகனும் மனோகரி, மகேஸ்வரன், சிவநேசன், கிருஷ்ணன், கோபு, முருகன், குமார், நித்தியா, கலா, ராணி, லக்கி, ஜனனி ஆகியோரின் அன்புமைத்துனரும் பிரசன்னா, பிரதீப், ஹரி, மேனகா ஆகியோரின் அன்புமாமனாரும் சாம்பவி, நிருபன் ஆகியோரின் சித்தப்பாவும் காந்தலோஜினியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை "அருளகம்" 21A, சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணை இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை.

தகவல்:
மகேஸ்வரன் குடும்பத்தினர்

# ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானங்கள் ஐரோப்பாவுக்குள் நுழைவதற்குத் தடை

கொழும்பு. ஏப்.21

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானச் சேவை நிறுவனத்திடம் இருக்கும் விமானங்கள். பயணிகள் போக்குவரத்துக்கு ஆபத்தானது எனக் கூறி அவற்றில் சில விமானங்கள் ஐரோப்பாவிற்குள் நுழைய ஐரோப்பிய நாடுகள் தடைவிதித்துள்ளன என்று தெரிய வருகிறது.

**சர்வதேச விமான போக்குவரத்து தரத்திற்கு அமையாததாக பழைய விமானங்களை இலங்கை விமானச் சேவை பயன்படுத்தி வருவதே இந்த தீர்மானத் திற்கான காரணம் எனக் கூறப்படுகி றது.**

சர்வதேச விமான போக்குவரத்து தரத்திற்கு அமையாததான பழைய விமானங்களை இலங்கை விமானச் சேவை பயன்படுத்தி வருவதே இந்த தீர்மானத்திற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

உதாரணமாக இலங்கை விமான நிறுவனத்திற்கு சொந்தமான 4- ஆர். ஏ.டி.ஏ. என்ற ஏ. 340 ரக விமானம் ஐரோப்பிய வான் பரப்பிற்குள் நுழைய அண்மையில் தடைவிதிக்கப்பட்டது. 24 வருடங்களுக்கு முன்னர் இந்த விமானம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது பயணிகள் போக்குவரத்துக்கு உகந்தல்ல என்பதே இதற்கு காரணம்.

இந்த ரக விமானங்கள் 20 வருடங்கள் வரை மாத்திரமே பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியும். அதன் பின்னர் அந்த விமானங்கள் பொருள்களைஎடுத்துச்செல்லபயன்படுத்தப்படும். சர்வதேச விமான போக்குவரத்து அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி இந்த விமானங்களை இலங்கை போக்குவரத்தில் ஈடுபடுத்தி வந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி விமானம் ஐரோப்பாவிற்குள் நுழைய தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் இந்த தடை காரணமாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்நிறுவனம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரியவருகிறது.

இதனைத் தவிர குறித்த விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவான ஊதியமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ற)


## இளைஞர்கள் மீது தாக்குதல்
### இனந்தெரியாத குழுவினரால்

வலி.வடக்கு, ஏப்.21
இனந்தெரியாத குழுவினரால் மூன்று இளைஞர்கள் தாக்கப்பட்டு படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 11.15 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் பொலிஸாரும் பிரதேச செயலகமும் இணைந்து புத்தாண்டை முன்னிட்டு நடத்திய இசை நிகழ்வில் இரு குழுக்களுக்கு இடையே இடம் பெற்ற வாய்த்தர்க்கம் இறுதியில் பெரிய மோதலாக மாறியது. மல்லாகம் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள விசாலாட்சிப் பாடசாலை முன்றலில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதில் ஊரெழு பொக்கணையைச் சேர்ந்த இந்திரகுமார் கஜீபன் (வயது -19), சின்னராசா கௌதமன் (வயது-21), ஜெயசீலன் மயூரன் (வயது-21) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர்.
குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## இனந்தெரியாதோர் தாக்கியதில் இளைஞன் அவசர சிகிச்சையில்

வலி வடக்கு, ஏப். 21
மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாதோரால் தாக்கப்பட்டும் வெட்டப்பட்டும் மயங்கி ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தில் இரு குழுக்களுக்கு இடையே கற்கள், பொல்லுகள், தடிகள் கொண்டு தாக்குதல் சம்பவம் இடம் பெற்று ஓய்ந்த நிலையில்.
இந்த சம்பவத்தில் சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த தவனேஸ்வரன் நிருபன் (வயது 30) என்பவரே ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.50 மணியளவில் இந்த தாக்குதல் சம்பவம் மல்லாகம் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள விசாலாட்சிப் பாடசாலை முன்றலில் இடம் பெற்றுள்ளது.
மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இசை நிகழ்வில் கலந்து கொண்டு சைக்கிளில் வீடு திரும்பிய வேளையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.
உடனடியாகச் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழைப் பொலிஸார் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சம்பவம் நடைபெற்ற இடத்தில் அநாதரவாக இருந்த சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளார்கள். (வ-86-36)

# மாநகர சுகாதார தொழிலாளர் மீண்டும் சனி முதல் பணியில்


மாநகர சபை வாகனம் மூலம் கழிவுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் 56 பேருக்கான நிரந்தர நியமனங்கள் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்ததை அடுத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த யாழ்.மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பணிக்குத் திரும்பினார்கள்.
மாநகர சபையின் பல்வேறு பகுதிகளுக்குமான தொழிலாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
இதை அடுத்து யாழ்.மாநகரப் பகுதியில் தேங்கிக் கிடந்த கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மாநகர சபையின் தற்காலிக தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் கழிவுப் பொருள்கள் தேங்கியதால் சுகாதாரச் சீர்கேடு நிலவியது.
காலை முதல் இரவுவரை தொடர்ந்து மாநகர சுத்திகரிப்பு வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்படும் என்று சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இதேவேளை நேற்று கழிவுப் பொருள்கள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டும் கூட அவை திறந்த நிலையிலுள்ள மாநகர சபை வாகனத்தில் கொண்டு சென்றதால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசியதுடன் அவை வீதிகளில் கொட்டுண்டு சிதறிக் காணப்பட்டன. (வ-7-17)


கடந்த நான்கு வருடங்களாக திருத்தப்படாது இருந்த அரியாலை பூம்புகார் நாவலடி வீதி தற்போது புனரமைப்புச் செய்யப்படுகின்றது. (வ-20)

## தனங்களப்பு நீர் ஏரிப் பகுதியில் உப்பு விளைகிறது


கோப்புப்படம்

சாவகச்சேரி, ஏப்.21
சாவகச்சேரிப் பகுதியில் உள்ள தனங்களப்பு நீர் ஏரிப் பகுதியில் உப்பு விளையத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.
சாவகச்சேரி நகரில் இருந்து தனங்களப்பு செல்லும் பாதையில் கிழக்குப் புறமாக கடல் நீரேரி காணப்படுகிறது. இதன் மறுபக்கமும் மழை நீர் சேருவதற்கான பெரிய வாய்க்கால்கள் காணப்படுகின்றன.
இந்தப் பகுதியில் கடல் நீர் தற்பொழுது தொடரும் பெரும் வெயில் வெப்பநிலை காரணமாக நீர் வற்றி வருகின்றது.
அதனையடுத்து தனங்களப்பு வீதிக்கும் வயல் வெளிக்கும் இடையில் உள்ள கடல் நீர் ஏரிப் பகுதியில் தேங்கி நிற்கும் கடல் நீர் வற்றி வருவதால் அந்தப் பகுதியில் அதிகமான உப்பு விளைவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனைப் பெருமளவு பாடசாலை மாணவர்கள், மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (வ-131)

# ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் ஆச்சிரமம் திறப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் ஆச்சிரம திறப்பு விழா நிகழ்வு சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் ஆச்சிரமத்தில் ஆசிரியர் குகபரன் தலைமையில் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்), பிரம்மச்சாரி யாக்கிரத சைத்தன்ய சுவாமி வழங்கினர்.
இதனைத் தொடர்ந்து வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் வாழ்த்துரை வழங்கினார்.
எமது பிரதேசத்தில் இன்றுள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றாக வட்டு. இந்துக் கல்லூரி திகழ்கின்றது. பல ஆயிரம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். இன்னும் பல்லாயிரம் மாணவர்கள் பயன் பெற தயாராக உள்ளனர். இவ்வாறான மிகப்பெரிய கைங்கரியத்துக்கு வழிவகுத்தவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர்.


வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் உரையாற்றுகிறார்.

இவரால் நிறுவப்பட்ட கல்வி நிறுவனம் இன்று மிகப் பெரிய சேவையை வழங்கும் ஒரு நிறுவனமாக உயர்ந்துள்ளது.
இன்று நாம் ஒரு பொதுத் தேவைக்காக சிறு துண்டுநிலம் பெறுவது என்பதே இயலாத நிலையில் உள்ளது. மிகப் பெரிய ஓர் பகுதியை கல்விக்காக அதிலும் இந்து மாணவர்களின் கல்விக்காக அர்ப்பணம் செய்தமை என்பது சமூகத்தால் மறக்க முடியாத ஒன்றாகும். இவ்வாறான என்றும் மாறாத நிலைபெறக் கூடிய சேவை செய்தவர்களை போற்றும் அதேவேளை அவர்களது பணிகளை மீளவும் நினைவு படுத்துவதனூடாக அவர்களது பெருமை மட்டுமல்லாது அவர்கள் போல் பணி செய்பவர்களின் அல்லது செய்யத் துடிப்பவர்களை மேலும் தூண்டக் கூடிய வகையில் அமையக் கூடியதாய் அமையும்.
இதேவேளை இவ்வாறாக மிகப் பெரிய பணியை மேற்கொள்வோரை நினைவு கூருவது அதனிலும் மிக முக்கிய அம்சமாகும்.
இன்று எம்மில் பலர் இவ்வாறானமகான்களின் பணியை மறந்த நிலையில் உள்ளமையும் மனதுக்கு வேதனையான விடயம் ஆகும்.
சித்தர்கள் வாழ்ந்த புனித பூமியாகிய சித்தன் கேணியில் சித்தர்கள் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது - என்றார். (வ)

# கெற்பேலி கிராமத்தின் தேவைகளை நிறைவேற்றுமாறு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி ஏப். 21
தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராமத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் உள்ளூர் வீதிகள் புனரமைப்பு மற்றும் பொதுக் கிணறுகள் இன்மை போன்றவற்றை நீக்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அங்குள்ள பெரும்பாலான குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். அவர்கள் தமது அன்றாடத் தேவைக்காக செல்லும் பெரும்பாலான உள்ளூர் வீதிகள் இன்றும் மணல் வீதிகளாகவே காணப்படுகின்றன. இவற்றில் தினமும் கனரக வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் பயன்பாட்டால் சைக்கிள்களைக் குறித்த வீதிகளில் உருட்டிக் கொண்டு செல்லும் அவலநிலை இப்பகுதி பாடசாலை மாணவர்கள் விவசாயிகள் போன்றோருக்கு ஏற்படுகிறது. பெருமளவு விவசாய நிலங்கள் உள்ள பகுதிகள் தோட்ட நிலமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சைக்கிளில் கட்டி நீண்ட தூரம் உருட்டிச் செல்கின்றனர்.
அடுத்து இங்கு நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை செல்லும் அளவுக்கு பொதுமக்கள் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.
இந்தப் பிரதேசத்தில் 3 அடி ஆழத்தில் தண்ணீர் பெறக் கூடிய வாய்ப்புகள் உள்ள போதிலும், பெருமளவு குடும்பங்கள் வறுமை நிலை காரணமாக உறவினர் வீடுகளிலும் தெரிந்தவர்களின் வீடுகளிலும் குடிதண்ணீர் பெற்று வருகின்றனர். சிலர் திடீரென தமது கிணறுகளில் குடிதண்ணீர் எடுக்கவிடாமல் தடுத்து விடுகின்றனர்.
இதனால் குடிதண்ணீருக்காக அலைய வேண்டிய அவல நிலை பல குடும்பங்களுக்கு ஏற்படுகின்றன.
இங்கு கச்சாய் கிராம சபை காலத்தில் சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் அமைக்கப்பட்ட மூன்று பொதுக் கிணறுகளில் இரண்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.
இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இராணுவ தளபதி நியமனம் தேர்தலின் பின்னரே முடிவு

*மத்திய அரசை வலியுறுத்துகின்றது பா.ஜ.க.*


விக்ரம் சிங்


தல்பீர் சிங்

புதுடில்லி, ஏப்.21
நாடாளுமன்றத் தேர்தல் முடிவு வெளியாகும் மே 16 ஆம் திகதிக்கு முன்னர் புதிய இராணுவ தளபதி நியமனம் தொடர்பான முடிவை எடுக்கக் கூடாது என்று மத்திய காங்கிரஸ்தலைமையிலான அரசை எச்சரித்துள்ளது பாரதீய ஜனதாக் கட்சி.
தற்போதைய இராணுவத் தலைமை தளபதியான விக்ரம் சிங், எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெற உள்ளார்.
அதனையடுத்து புதிய இராணுவத் தளபதியை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தொடங்கி உள்ளதாகவும், இராணுவத் துணைத் தளபதியான தல்பீர் சிங்கை அப்பதவிக்கு நியமிப்பதற் கான நடவடிக்கைகளை அமைச்சகம் மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியானது.
இந்த நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நிலையில், பதவி விலகும் அரசு இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்றும், தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ள மே 16 ஆம் திகதிக்கு முன்னதாக இது தொடர்பாக எத்தகைய நடவடிக்கைகளையும் மத்திய காங்கிரஸ் அரசு மேற்கொள்ளக் கூடாது என்றும் பாரதீய ஜனதா கட்சி எச்சரித்துள்ளது.
புதுடில்லியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்த பா.ஜனதா செய்தி தொடர்பாளர் ரவி சங்கர் பிரசாத், இராணுவ தளபதி நியமனம் விடயத்தில் அவசரம் கூடாது என்று வலியுறுத்தினார். (ற)



நாடாளுமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக திருச்சிக்கு கூடுதலாக துணை இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பெங்களூரில் இருந்து ரயில் மூலம் திருச்சியை வந்தடைந்தனர். (ற)

## ஆட்சிக்கு வந்தவுடன் பழி வாங்க மாட்டேன்


*நரேந்திர மோடி கூறுகின்றார்*


நரேந்திர மோடி

புதுடில்லி, ஏப்.21
மத்தியில் ஆட்சிக்கு வந்தால் மற்ற கட்சிகள் ஆட்சி செய்யும் மாநில அரசுகளை பழிவாங்க மாட்டேன் என்று கூறியுள்ளார் நரேந்திர மோடி.
மேற்கு வங்க பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"மேற்கு வங்க மாநிலத்தின் தொழில்துறை வளர்ச்சி, சிங்கூர் நிலப் பிரச்சினை ஆகியவற்றில் மத்திய அரசுக்கு மேற்கு வங்க மாநில அரசு உதவும் என்று நம்புகிறேன்.
மாநில வளர்ச்சி விவகாரத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி வாக்கு வங்கி அரசியலில் ஈடுபடாது என்றும் நம்புகிறேன். மேலும், மக்களவைத் தேர்தல் பரப்புரையில் பா.ஜ.கவும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியும் குற்றம்சாட்டி வருவது வழக்கமான ஒன்றுதான்.
ஆனால் மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு மாற்றுக் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநில அரசுகளை பழிவாங்கும் செயலில் ஈடுபடமாட்டேன்"- என்று தெரிவித்துள்ளார் நரேந்திரமோடி. (ற)

## ஆபத்தான கட்டத்துக்கு செல்கின்றது இந்தியா

*எச்சரிக்கின்றார் ராஜ்நாத் சிங்*


ராஜ்நாத் சிங்.

லக்னோ, ஏப்.21
இந்தியா ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று எச்சரித்துள்ளார் லக்னோ தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. மூத்த தலைவர் ராஜ்நாத் சிங்.
லக்னோவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"பொருளாதாரத் துறையாக இருந்தாலும் சரி, விவசாயிகளின் நிலையாக இருந்தாலும் சரி அல்லது நாட்டில் உள்ள இளைஞர்களின் பிரச்சினையாக இருந்தாலும் சரி அனைத்து துறைகளிலும் நாடு, கடினமான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.
தற்போது மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியும், உத்தர பிரதேசத்தில் ஆளும் சமாஜ்வாதி கட்சியுமே இதற்கு காரணம். உத்தர பிரதேச மாநிலத்தை நீண்ட காலமாக ஆட்சி செய்து வரும் இரண்டு கட்சிகளும் மக்களை ஏமாற்றி விட்டது.
மோடி தலைமையில் மத்தியில் பா.ஜ.க. அடுத்து ஆட்சியை அமைக்கும். அப்போது நாட்டின் வளர்ச்சியில் பா.ஜ.க. முக்கிய பங்கு வகிக்கும்"- என்று தெரிவித்தார். (ற)

## மந்தர மலை கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஏப். 21
குஜராத்தின் கடல் பகுதியில், பாற்கடலை கடைந்து அமிர்தம் எடுக்க தேவர்கள் மத்தாக பயன்படுத்திய மந்தர மலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
புராணக் கதைகளில், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்க, மந்தர மலையை மத்தாகப் பயன்படுத்தினர் என்று கூறப்படுகிறது.
அந்த மந்தர மலை தற் போது குஜராத் பகுதியில் அமைந்துள்ளதாக கடல்சார் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தலைமையிலான கடல்சார் துறை விஞ்ஞானிகள், குஜராத்தின் தென் பகுதியில் உள்ள கடல் பகுதியில், மேற்கொண்ட ஆய்வின் போது, வித்தியாசமான தோற்றத்தில், கடலில் மூழ்கியிருந்த மந்தர மலையை கண்டுபிடித்து உள்ளதாக தெரிவித்துள்ளனர். (ற)

## மோடியை விமர்சிப்பவர்களுக்கு இந்தியாவில் இனி இடமில்லை

*பீகார் மாநில பா.ஜ.க. தலைவர் கிரிராஜ் சிங் கூறுகின்றார்*


கிரிராஜ் சிங்

கோடா, ஏப்.21
நரேந்திர மோடியை விமர்சிப்பவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை. அவர்கள் பாகிஸ்தானுக்கு போகலாம் என்று தெரிவித்துள்ளார் பீகார் மாநில பா.ஜ.க. தலைவர் கிரிராஜ் சிங். அவரின் இந்தக் கருத்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
ஜார்கண்ட் மாநிலத்தில் கோட்டா மாவட்டத்தில் பாரதீய ஜனதா கட்சி மூத்த தலைவர் நிதின் கட்கரி தலைமையில் நடைபெற்ற பீகார் மாநில பா.ஜ.க. தலைவர் கிரிராஜ் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றினார்.
அப்போது அவர், "நரேந்திர மோடி பிரதமர் ஆவதை தடுக்க யார் நினைக்கிறார்களோ அவர்கள் பாகிஸ்தானுக்கு போகலாம்.
எதிர்காலத்தில் அவர்களுக்கு இந்தியாவில் இடம் கிடையாது. அவர்களுக்கு பாகிஸ்தானில்மட்டுமே இடம்உண்டு" - என்று தெரிவித்தார்.

**"நரேந்திர மோடி பிரதமர் ஆவதை தடுக்க யார் நினைக்கிறார்களோ அவர்கள் பாகிஸ்தானுக்கு போகலாம். எதிர்காலத்தில் அவர்களுக்கு இந்தியாவில் இடம் கிடையாது. அவர்களுக்கு பாகிஸ்தானில் மட்டுமே இடம் உண்டு"**


கிரிராஜ் சிங்கின் இந்தக் கருத்துக்கு பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன், காங்கிரஸ் உட்படப் பல்வேறு கட்சியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.(ற)

## மக்களை குடிக்கு அடிமையாக்கியவை தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகளே

*பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் காட்டம்*


ராமதாஸ்

வேலூர்,ஏப்.21
தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளே தமிழக மக்களை குடிக்குள் மூழ்குவதற்கு வழி செய்த கட்சிகள் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.
அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் பா.ம.க. வேட்பாளர் முன்னாள் மத்திய அமைச்சர் ஆர்.வேலுவை ஆதரித்து ராமதாஸ் பரப்புரை மேற்கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"விவசாயிகளுக்காக என் தலைமையில் பா.ம.க. நடத்திய போராட்டங்கள் ஏராளம். 1980ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை நடத்திய போராட்டங்களினால் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு கிடைத்தது தமிழக மக்கள் குடிக்க வழி செய்த கட்சிகள் தி.மு.கவும், அ.தி.மு.கவும்தான். இதனால், தமிழ்நாட்டில் குடிமகன்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. சுமார் 5 ஆயிரம் கணவனை இழந்த இளம் பெண்களை சென்னைக்கு அழைத்துச் சென்று குடியின் தீமையை விளக்கி பா.ம.க. போராட்டம் நடத்தியது.
முன்பு முதல்வராக இருந்த கருணாநிதியை கோட்டையில் சந்தித்து சாராயத்தின் தீமையை விளக்கி அரசு மதுபானக் கடையை மூடுமாறு கேட்டுக் கொண்டோம். படிப்படியாக குறைக்கிறேன் என கூறிய கருணாநிதி, அரசு மதுபானக்கடைகளை மூடும் நேரம் இரவு 11 மணி என்றிருந்ததை 10 மணியாக மட்டுமே குறைத்தார்.
படிக்க வேண்டும் என சொல்கிறது பா.ம.க. ஆனால் குடிக்க வேண்டும் என்கின்றனர் சிலர். பெண்கள் நினைத்தால் இந்த குடியை ஒழிக்க முடியும். குடியினால் குடும்பமே அழிகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு உரம் இலவசமாக வழங்கப்படும். அனைத்து உயர் மருத்துவ வசதிகள், உயர்கல்விகள் சாதாரண மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். வேறு இலவசங்களை வழங்கமாட்டோம்"-என்று தெரிவித்தார்.(ற)



விமானத்தைத் தேடும் பணியில்

## காணாமற் போன விமானம் முக்கிய கட்டத்தில் தேடுதல்

கோலாலம்பூர், ஏப். 21
காணாமற்போன மலேசிய விமானத்தைத் தேடும் பணிகள் முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளன என்றும், இன்னும் இரு நாள்களில் உபயோகமான தகவல் கிடைக்கக் கூடும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் மலேசிய போக்குவரத்துத்துறை அமைச்சர் ஹிசாமுதின் ஹுசேன்.
கோலாலம்பூரில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த அவர், ஆளில்லா நீர்மூழ்கிக் கருவி மூலம் நடந்து வரும் தேடுதல் பணி இன்னும் ஒரு வாரத்துக்குள் நிறைவு பெறும். புளூஃபின் 21 என்ற ஆளில்லா நீர்மூழ்கிக் கருவி தற்போது கடலுக்கடியில் சுமார் 15 ஆயிரம் அடிக்குக் கீழே தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இரு தினங்களில் தேடுதல் பரப்பு மேலும் குறையும் - என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஜெனிவா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள்

*ரஷ்யாவை நெருக்குகின்றது அமெரிக்கா*

நியூயோர்க், ஏப். 21
உக்ரைன் விவகாரத்தில் தீர்வு காணும் விதமாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் பேச்சு ஒப்பந்தத்தில் ரஷ்யா கையெழுத்திட வேண்டும் என்று நெருக்கடி கொடுத்து வருகின்றது அமெரிக்கா. அதற்கு ரஷ்யா உடன்படாது விட்டால் அந்நாட்டின் மீது மேலும் பொருளாதாரத் தடை விதிக்கவும் அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.



சூசன் ரைஸ்

இது குறித்து வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், ஜெனிவா பேச்சின் முடிவில் ரஷ்யா ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம். அதே வேளையில், அந்நாடு அதனை செய்யுமா? அல்லது செய்யாதா என்பதைப் பற்றிக் கவலையில்லை. உக்ரைனில் கைப்பற்றப்பட்டுள்ள அரசுக் கட்டடங்களில் இருந்து ரஷ்ய ஆதரவாளர்களை வெளியேற்ற வேண்டிய பொறுப்பு அந்நாட்டுக்கு உள்ளது.
ரஷ்யா மேலும் சிக்கலை ஏற்படுத்தினால், ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்புக் குழுவைச் சம்பந்தப்பட்ட உக்ரைன் பகுதிகளுக்குக் கண்காணிப்புப்பணிக்காக அனுப்புவோம். ஏனெனில், உக்ரைனில் நிலவும் பிரச்னைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கு அந்நாட்டு அரசுக்கு இதுபோன்ற உதவி தேவைப்படுகிறது.
உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கையில் ரஷ்யாவோ அல்லது அதன் பிற அமைப்புகளோ ஈடுபட்டால் அந்தநாட்டின் மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதிப்பதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி ஒபாமா பெற்றுள்ளார் என்று தெரிவித்தார். (ற)

## மர்ம உறுப்பை வெட்டி சாக முயன்ற பாடகர்

வொஷிங்டன், ஏப். 21
உலகில் இன்று பல்வேறு விதங்களில் உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்கப் பாடகர் ஒருவர் தனது மர்ம உறுப்பை வெட்டிக் கொண்டு, மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.
அமெரிக்காவின் வடக்கு ஹொலிவூட் பகுதியில் வசித்து வரும் ஆண்ட்ரே ஜோன்சன் (வயது-40) என்ற பொப் பாடகர் 'கிறிஸ்ட் பேரர்' என்ற பெயரில் இசைக்குழு ஒன்றில் பாடி வந்தார். இவர் கடந்த புதன்கிழமையன்று அதிகாலையில் தனது மர்ம உறுப்பை வெட்டிக்கொண்டு தான் வசிக்கும் இரண்டாவது மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்க்க முயன்றுள்ளார். படுகாயத்துடன் நடைபாதையில் கிடந்த ஜோன்சனைப் பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.
இந்தத் தற்கொலை முயற்சிக்கான காரணம் தெரியவில்லை. அதே குடியிருப்பில் இந்த இசைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் வசித்து வருகின்றனர். மர்ம உறுப்பை வெட்டிக்கொண்ட ஜோன்சன் யாரும் எதிர்பார்க்காத விதமாக வெளியே குதித்தார் என்று அவர்கள் கூறினர். அவர்கள் கீழே இறங்கிப் போவதற்குள் அவர் கத்திக்கொண்டே ஓடினார் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
ஜோன்சனின் புதிய அல்பமான 'ஊஹு' வெளியான 24 மணி நேரத்திற்குள் அவர் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார். (ற)

## தென்கொரியக் கப்பல் விபத்தில் அதிகரிக்கும் சாவு எண்ணிக்கை

சியோல், ஏப். 21
விபத்துக்குள்ளான தென் கொரியக் கப்பலுக்குள் இருந்து மீட்புப் பணியாளர்களால் முதன்முறையாக சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் கப்பலின் ஜன்னல் ஒன்று உடைக்கப்பட்டு அதனூடாக மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதையடுத்து சாவு எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.
தென் கொரியாவிற்கு அருகே உள்ள ஜீஜு என்ற சுற்றுலா தீவை நோக்கி மிகப் பெரிய சொகுசு கப்பல் ஒன்று கடந்த 15 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்தது. அதில் 325 மாணவர்கள் உட்பட 475 பேர் பயணம் செய்தனர். எனினும் புறப்பட்ட மூன்று மணி நேரத்தில் அந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகி நீரில் மூழ்கியது.
அதையடுத்து மீட்புப் பணிகளில் 169 படகுகளும், 29 ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டுள்ள நிலையில், இதுவரை 179 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 266 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. கடல் சீற்றம், மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருந்தது. எனினும் 500 நீச்சல் வீரர்கள் காணாமற் போனவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.
இந்த நிலையில், மீட்புப் பணியில் குறிப்பிடத்தக்க வகையில், கப்பல் உள்ளே ஜன்னலை உடைத்து பயணிகள் பகுதியில் இருந்து முதன் முதலாக மூன்று சடலங்களைக் கண்டெடுத்துள்ளனர். அதையடுத்து கப்பல் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்த மூவரும் லைப் ஜாக்கெட்டை அணிந்திருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.
அதேவேளை, கப்பல் கவிழ்ந்த போது பயணிகளைக் காப்பாற்றாமல் 68 வயதான கப்பல் தலைவர் லீ ஜுன் சியோக் மற்றும் சில சிப்பந்திகள் கடலுக்குள் குதித்து உயிர் தப்பியிருந்தனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. அவர்களைத் தீவிரமாகத் தேடி வந்த பொலிஸார், நேற்றுமுன் தினம் அதிகாலை அவர்களைக் கைது செய்தனர். (ற)

## எவரெஸ்ட் பனிப் புயல் 12 பேர் உயிரிழந்தனர்

காட்மண்டு, ஏப். 21
எவரெஸ்ட் சிகரத்தை நோக்கிச் செல்லும் இமயமலைப் பாதையில் நேற்றுத் திடீரென்று வீசிய பனிப்புயலில் சிக்கி நேபாள நாட்டை சேர்ந்த வழிகாட்டிகள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு சுற்றுலாத் துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.
இது குறித்து நேபாளத்தின் சுற்றுலாத் துறை அமைச்சர் கூறுகையில்,
நேபாளத்தில் இன்று எதிர்ப்பாராத விதமாக பனிப்புயல் ஏற்பட்டது. பனிச்சரிவு ஏற்பட்டதில் எவரெஸ்ட் சிகரத்தின் மேலே ஏற பயன்படுத்தப்படும் பாதையும் அடித்து செல்லப்பட்டுள்ளது. இதுவரையில் வீரர்கள் மற்றும் வழிகாட்டிகள் உட்பட 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பனிச்சரிவில் சிக்கிய மேலும் இருவரைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப் பனிச்சரிவில் ஐந்து மலையேறும் பயிற்சி நிறுவனங்களின் பயிற்சியாளர்கள் சிக்கினர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.
குறித்த பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக மூன்று ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் இராணுவ வீரர்களும், மருத்துவர்களும் மீட்கப்பட்டோரைக் காப்பாற்ற தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.
எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறும் முயற்சிகளுக்கு உகந்த காலநிலையாக இந்தப் பருவம் கருதப்படுகிறது. இதனால் அப்பகுதியில் மலையேறிகளும், சுற்றுலா பயணிகளும் அதிகம் வருகின்றனர். இந்த நிலையில் உயிரிழந்தவர்கள் கடந்த இரண்டு வாரங்களாக மலை அடிவாரத்தில் முகாம்கள் அமைத்து, மலையேறும் முயற்சியில் ஈடுப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது. (ற)



கேப்ரியல் கார்ஸியா மார்குவேஸ்

## நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் சாவு

இலக்கியத்தில் மிக உயரியதாகக் கருதப்படும் நோபல் பரிசு பெற்ற கொலம்பியா நாட்டைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் கேப்ரியல் கார்ஸியா மார்குவேஸ் (வயது-87) கடந்த வியாழக்கிழமை காலமானார்.
கேபா என்று அழைக்கப்படும் இவர், தனது இலக்கியப் படைப்புக்களில் தென் அமெரிக்கக் கண்டத்தில் சர்வாதிகார ஆட்சியாளர்களின் கொடுமையான அடக்குமுறைக்கு ஆளான லத்தீன் மொழி பேசும் மக்களின் துயரங்களை விரிவாகச் சித்திரித்தவர். அவரது மேஜிகல் ரியாலிஸம்' என்ற புதுமையான படைப்பிலக்கிய முறை உலகப் புகழ் பெற்றதாகும்.
கேபா, நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். (ற)



கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி ஈஸ்டர் தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படும் புனித தீ விழா சடங்குக்காக ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஜெருசலேமின் பழைய நகரில் நேற்றுமுன்தினம் திரண்டனர். கிறிஸ்தவ நாள்காட்டியில் உயர் விழாவாகக் குறிப்பிடப்படும் இந்த சடங்கில் உலகம் முழுவதிலுமிருந்து வந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். இங்குள்ள புனித கல்லறையிலேயே சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட யேசுபிரான் வானத்திலிருந்து வந்த தெய்வீகத் தீயினால் உயிர்ப்பிக்கப்பட்டார் என்று புராண சம்பவங்கள் கூறுகின்றன. (ற)

# மக்கள் கோரிக்கையை அலட்சியம் செய்கிறது மன்னார் பிரதேச சபை

## உப தலைவர் குற்றச்சாட்டு

மன்னார்,ஏப்.21

மன்னார் பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் வந்தும் இன்று வரை மக்களின் சிறிய அபிலா சைகள் கூட நிறை வேற்றப் படவில்லை.

இவ்வாறு மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந் தோனி சகாயம் தெரிவித்தார்.

இதுதொடர்பான அவர் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்களின் கோரிக்கைகளும் விண்ணப்பங்களும் அலட் சியமாக நோக்கப்படுகின்றன.

மன்னார் பிரதேச சபையின் உபதலைவர் என்ற வகை யில் சபையில் மக்களின் உரி மைகள் பற்றியும் சில கிரா மங்களில் இருந்து வருகின்ற கோரிக்கைகளையும் வெளிப் படுத்துகின்ற போது அவை கள் இன்று வரை நடை முறைப் படுத்தப்படாத கோரிக்கை களாகவே அமைந்துள்ளன.

மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென உறு திப்படுத்தப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் மன்னார் பிரதேச சபை யின் தலைமைப்பீடம் காலம் தாழ்த்தி வருகின்றது .



அந்தோனி சகாயம்

சில கிராமங்களில் இருந்து பாதை விடயமாக சம்பந்தப் பட்ட மக்களிடமிருந்தும் ஆல யங்களின் மூலமாகவும் பள்ளி வாசல் நிர்வாகத்தினர் மூல மாகவும் அனுப்பப்பட்ட கடிதங் களுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தலைமைப் பீடம் ஏன் காலம் தாழ்த்துகின்றது என்று புரியவில்லை.

சில கிராமங்களில் வீதி விளக் குகள் பொருத்தப்படாத நிலை யிலும் சில கிராமங்கள் முன் னிலைப்படுத்தப்பட்டு வேலை கள் பூர்த்தியாக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது .

பிரதேசசபையின்பொதுவேலை தொடர்பாக முன் வைக்கும் கோரிக்கைகளுக்கும்தலைமைப் பீடம் ஆதரவு தருவதில்லை.

இவ்வாறான நிலையில் ஒட்டு மொத்தமாக நான் 3 சபை கூட்டங்களில் இருந்து வெளி நடப்பு செய்துள்ளேன். மக்க ளின் தேவைகள் பிரச்சினை கள் தீர்க்கப்படாத போதும் மக்களுக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத போதும் பிரதேச சபையில் பதவியில் இருப்பதும் அர்த்த மற்றதாகிவிடும் .

எமது பிரதேச சபை எல்லைக் குள் காணி அபகரிப்புக்கள் பெருமளவில் நடைபெற்று வரு கின்றன .

இதனை தட்டி கேட்க கூட முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது. சபையில் உபதலைவர் என்ற வகையில் என்னால் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப் படும் தீர்மானங்கள் மிக விரை வில் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும்.

அவ்வாறு முடியாத பட்சத் தில் மக்களை ஒன்றுதிரட்டி பிர தேச சபைக்கு அழைத்து மக்கள் தரப்பில் இருந்து நேரடியாக கேள்விகள் எழுப்பப்படும் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

# 100 பஜனை பாடசாலைத் திட்டம் சுழிபுரம் பெரியபுலோவில் ஆரம்பம்



*வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மாணவர்களுக்கு சுவாமி விவேகானந் தரின் நூல்களை வழங்கியபோது.*

வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளரால் முன்னெடுக்கப் படும் 100 பஜனை பாடசா லைத் திட்டம் வெள்ளிக்கிழமை மாலை சுழிபுரம் பெரிய புலோ பகுதியில் அமைந்துள்ள பெரிய தம்பிரான் ஆலயத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஆலய பரிபாலன சபையினர் உள்ளடங்கலாக பல் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திரு மதி நாகரஞ்சினி ஐங்கரன் சுமார் 50 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு யாழ்ப்பா ணம் கரிகணன் அச்சகத்தால் இலவசமாக வெளியீடு செய் யப்பட்ட சுவாமி விவேகானந் தரின் நூல்களை அன்பளிப்பு செய்து பஜனை பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். (வ)

# மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தால் உணவுப் பொருள்கள்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு மானிப்பாய் அந்தோனியார் திருத்தலத்தில் உணவுப்பொருள் களும் குளிர்பானமும் நேற்றுக் காலை வழங்கப்பட்டன.



காலை ஈஸ்டர் விசேட ஆராத னைகள் நிறைவடைந்த பின் னர் ஆலய குரு வண. பிதா ஜேம்ஸின் ஆசியுடன் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஆயி ரக்கணக்கானவர்களுக்கு உணவுப் பொருள்களும் குளிர் பானமும் வழங்கப்பட்டன.

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஆலோசகர் மற்றும் லியோக் கழக அங்கத்தவர்களி டம் இருந்து சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்தே இவை வழங் கப்பட்டதாக மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினர் தெரி வித்தனர்.

இந்த நிகழ்வில் மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஆலோசகர் பேராசிரியர் லயன். சாந்தன், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன். ராதா கிருஷ்ணன், மானிப் பாய் பரிஷ் லியோக் கழகத்தின் தலைவர் லியோ அ.ஜெபநே சன், உட்பட லியோக் கழக அங்கத்தவர்கள் பலர் கலந்து கொண் டனர். (ஓ)

# நேற்றும் மருத்துவ முகாம்



யாழ்ப்பாணம், ஏப்.21

நல்லூர் சங்கிலியன் மன்றத் தின் இந்த ஆண்டின் நான் காவது மக்கள் நலத்திட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை சங்கிலியன் மன்றத்தில் கொலஸ்ரோல் பரிசோதனை இடம் பெற்றது. காலை 8 மணி முதல் இடம் பெற்ற மேற்படி பரிசோதனை யில் இரு நூறுக்கும் அதிகமான வர்கள் கலந்து கொண்டனர். நோயாளர்களுக்கு பரிசோ தனை குறித்த அறிக்கைகளும் உரிய மருந்து வகைகளும் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் ஆர்.சந் திரகுமார் தலைமையில் நடந்த இலவச மருத்துவ முகாமில் நோய் குறித்த விவரங்கள் நோய் களைக் குறைக்க அல்லது தவிர்க்கக் கூடிய அறிவுரைகள் மட்டுமன்றி இலவசமாகச் சிறந்த மருந்து வகைகளைப் பெற முடிந்ததாகவும் அதில் கலந்து கொண்ட மக்கள் நேற்றுத் தெரிவித்தனர். சங்கிலியன் மன்றத்துடன் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியும் இணைந்து இந்த இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இந்த மருத் துவ முகாம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## உலக புவி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.21

நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் உலக புவி தின நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக இடர் முகா மைத்துவ உதவிப் பணிப்பா ளர் ச.ரவியும் சிறப்பு விருந்தின ராக டயானா பிளாஸ்ரிக் மீள் சூழற்சி நிறுவன உரிமையா ளர் த.தவராசா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

நகர மீட்சி திறனை உருவாக்கு வதற்கான உபாயம் பிளாஸ் ரிக் மீள் சுழற்சி குறித்த உரை களும் புவி தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் பங்கு பற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் பிளாஸ் ரிக் மீள் சுழற் சிக்காக பிளாஸ் ரிக் கழிவுகள் கையளிப்பு என்பன இடம்பெறும். (வ-7)


**துளிர்கள் நிறுவனத்தின்**
**உள ஆற்றுப்படுத்தல் (Counseling) கற்கைநெறி**

- பிரிவு - 12
- கற்கை காலம் - 06 மாதங்கள்
- விரிவுரைகள் - சனி, ஞாயிறு, போயா தினங்கள்
- தகைமை - O/L, சமூக சேவையில் ஆர்வம்
- கட்டணம் - இலவசம்
- ஆர்வமுள்ள இருபாலாரும் 05.05.2014 இற்கு முன்பு தொலைபேசி இலக்கத்துடன் சுயவிவரங்களை அனுப்பி வைக்கலாம்.

இல. 30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.

பணிப்பாளர் துளிர்கள் நிறுவனம் (47039) (7.6.3)

**Village 2 City Club**
Thevaraiyali Alvai West, Alvai, Jaffna.

**அதிர்ஷ்ட வினாச் சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு - இல. 1072
இரண்டாம் பரிசு - இல. 11073
மூன்றாம் பரிசு - இல. 2061

ஐந்து ஆறுதல் பரிசு இலக்கங்கள்.

5663, 11725, 923, 5064, 3826

மேற்படி இலக்கங்களை உடைய அதிர்ஷ்டசாலிகள் 077 833 1202 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி வளர்மதி சனசமூக நிலையத்தில் தங்களது அதிர்ஷ்டத்தை உறுதிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நிர்வாகம்.

**KEY BOARD விற்பனைக்கு**

ஒரு கைப்பாவனையிலுள்ள YAMAHA P.S.R 700 KEY BOARD (ஓகன்) விற்பனைக்குள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொ.பே: 077 698 0573 (47042) (7.6.3)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு மணியகாரன் (ஒழுங்கை) லேனில் கிணற்றுடன் சுற்றுமதில் கட்டப்பட்ட 3¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 554 6523 (46794) (12.3.6)

**விற்பனைக்கு**

Damro புதிய வரவேற்பு மேசை (பிளேற்றிஸ்), புதிய சுழல் கதிரை, கடை முன் கண்ணாடி செற் 12 அடி X 8 உயரம் (பவுடர் போட்-வெள்ளை), Damro பிளாஸ் ரிக் கதிரைகள், Damro Table Chas Box.T.P : 077 738 7344
யாழ் வீதி மானிப்பாய்
காகில்ஸ் பூட் சிற்றி (அருகில்) (46966) (7.6.3)

உங்கள் ஆலய திருவிழாக்களில்.....
கனடாவில் இருந்து வருகை தந்துள்ள......

அகில உலக புகழ் நல்லூர்
**ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை**
அழைக்க விரும்புகிறீர்களா?

தொடர்பு: வில்லிசை சக்கரவர்த்தி கலைமாமணி டாக்டர் S.S. சர்மா (குருஜீ)
077 706 4247 (49975) (10)
(சங்கானை - முருக மூர்த்தி கோயிலடி)

**பேக்கரி உரிமையாளர்கள் கேக் தயாரிப்பாளர்கள் பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!**

காலம், காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது 1kg பைக்கற்றில்!!
மிருதுவான கேக் தயாரிப்பதற்கும், அனைத்து வகையான பேக்கரி மற்றும் பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள்.
தரத்திற் சிறந்த, விலையில் குறைந்த
**"றோயல் பேக்கிங் பவுடர்"**

Specially made for Bakery uses

Manufactured By:
Royal Industries
No.22,1/1, Adamally Buiding
Wolfendhal Street,
Colombo-13.

ஏக விநியோகஸ்தர்:
சீவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 2567 (சி.13401)



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நாவற்குழி ரயில் நிலையத்தில் ரயில் மேடையுடன் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். (வ-51)

# மொழி விருத்தி களச் செயற்பாடுகள் முன்பள்ளியிலேயே ஆரம்பிக்க வேண்டும்

## பேராசிரியர் சிவலிங்கராசா தெரிவிப்பு

சங்கானை, ஏப்.21

சுவையுணர்வு என்பது மனிதனிடையே காணப்படும் ஓர் உயரிய திறன் ஆகும். புலன்களால் புற உலகை அறிந்து சுவைத்தல் மட்டுமல்லாது, அகவுணர்வால் சுவைக்கும்போது அழகு மெய்யாகின்றது. இதனால் ஆக்கத்திறன்- படைப்பாற்றல் விருத்தியாகின்றது. இதற்கு மொழிவளம் துணை செய்கின்றது. எனவே மொழி விருத்திக் களச் செயற்பாடுகள் முன்பள்ளியிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தெரிவித்தார்.

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் அண்மையில் நடைபெற்ற சிறார்களுக்கான மொழி விருத்தி ஆக்கத்திறன் களக் கற்கை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்பள்ளியின் பணிப்பாளர் திருமதி தனபாலன் கர்ணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சியின் முழுமைக்கும், மனிதப் பண்புகளின் உயர் விருத்திக்கும் மொழி-கணித விருத்திச் செயற்பாடுகள் மேம்பாட்டை அளிக்கின்றன. இவை அழகியல் உணர்வுகளான ஆடல், பாடல், சித்திரம் மூலமாக வழங்கப்படும்போது, சிறார்களின் உளநலம் மேம்பாடடைகின்றது. அழகியல் உணர்வின் ஊடாக உண்மை, நன்மை, அழகு என்பனவற்றைச் சிறார்களுக்கு விதைக்க முடியும். இது கல்வியில் உயர் அடைவை ஏற்படுத்தும். இவையே அறிவின் பயன்கள்.

கல்வி உளவியலாளர்கள் மனிதனது கற்பனை வளம், ஆக்கத் திறன், படைப்பாற்றல் என்பவற்றின் ஊடாக ஆளுமையை வளர்ப்பதற்குக் கலைகள் ஊடாக அழகிய உணர்வுகள் உதவுவதாகக் கூறுகின்றார்கள்.

அழகை ரசிப்பது என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செயன்முறை. இதன் ஊடாகவே கற்றலைச் சிறார்களுக்கு மகிழ்ச்சிகரமாக வழங்க முடியும். இம்முறை இந்த முன்பள்ளியில் பின்பற்றப்பட்டு இக்களக் கற்கை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர் தனது உரையில், சாதாரண மனிதன் அழகான பொருள்களை விரும்புகின்றான். உண்மையை உணர்ந்த ஒருவன் அழகை விரும்புகின்றான். அழகு என்பது புற உலகத்தில் காணப்படும் அழித்துவிடக் கூடிய ஒன்றல்ல. ஒவ்வொரு மனிதனும் தனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய, புற உலகத்தில் காணப்படும் அழகான பொருள்களை நாடுகின்றான். மிகையான எண்ணங்களை வளர்த்து சிக்கல்களில் மாட்டிக் கொள்கின்றான். உண்மையை உணர்ந்தவன் அழகான பொருள்களை நாடுவதில்லை.

அழகையே நாடுகின்றான். அழகு என்பது உள்ளத்தில் எழும் ஓர் உயர்வான உண்மை பற்றிய மெய் உணர்வாகும். இவ் அழகை சிறார்களின் செயலாற்றுகைகளை ரசிப்பதன் மூலம் பெற முடியும். பெற்றோர்களும், முதியோர்களும் இவ் அழகை நயந்து, முழு நிறைவை அடைய வேண்டும்.

அழகை நயப்பது என்பது ஒரு வகைக் கலையேயாகும். கலைஞனும் உண்மையை நாடும் ஒருவனே ஆவான். விஞ்ஞானியைப் போல, எழுத்தாளனைப் போல, வைத்தியனைப் போல, இந்தச் சிறார்களைப் போல கலைஞனும் உண்மையைத் தேடும் ஆய்வில் ஆழ்ந்து ஈடுபடுகின்றான். கலைஞன் தனது பெரிய உள்ளார்ந்த அனுபவங்களைத் தனது படைப்பின் ஊடாக வெளியிடுகின்றான். இவ்வாறே முன்பள்ளிச் சிறார்களுக்கும், பொருத்தமான களப் பயிற்சிகளை மொழி, கணித விருத்தி, எண்ணக் கருக்களை வழங்குவதனூடாக அவர்களைக் கலைஞன் ஆக்கலாம். அழகை ஆக்குபவர்களாக்கலாம். அழகை ரசிப்பவர்களாக்கலாம். முழுநிறை ஆர்வமுள்ளவர்களாக்கலாம்.

இங்கு ஆடல், பாடல், நாடகம் என்பனவற்றை யதார்த்தக் கற்றல் கருக்களான வீடு, பாடசாலை, சந்தை, பிராணிகள், சூழல், மழைக் காலம் என எமக்கு உதவுவோர் ஆகியவற்றைக் களப் பயிற்சிகளின் ஊடாக வழங்கும்போது மிகுந்த பயனை ஏற்படுத்தும்-என்றார். (வ-29)

# பஸ் நிலையம் இல்லை

## பூநகரி மக்கள் திண்டாட்டம்



கோப்புப்படம்

கிளிநொச்சி, ஏப்.21

கிளிநொச்சி பூநகரி நகரத்தில் பஸ் நிலையம் இல்லாததால் பயணிகள் நீண்ட தூரம் கால் கடுக்க வீதியில், வெயிலில் நிற்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது மீள்குடியேற்றம் நடைபெற்ற பிரதேசமாக பூநகரி விளங்கும் நிலையில் பூநகரி வாடியடிச் சந்தியில் பஸ் நிலையம் இல்லாமையால் பயணிகள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை ஏ-32 மன்னார் பூநகரி சாலையில் பயணிக்கும் பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை என்று பெற்றோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக பூநகரி மகா வித்தியாலயம், பூநகரி சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (வ-18)

# பொதுக் கிணறை துப்புரவு செய்யுமாறு கோரிக்கை



பற்றைகள் வளர்ந்து காணப்படும் பொதுக்கிணறு

குருநகர், ஏப்.21

யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு தெற்குப் புறத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொதுக்கிணறைச் சூழவுள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்ய யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கிணற்றில் இளம் பெண் ஒருவர் அண்மையில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இதற்கு முன்னரும் ஒரு வயோதிபப் பெண் ஒருவர் இக்கிணற்றில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இக்கிணறு ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளதுடன் அதனைச் சூழ சம்புப் புற்பற்றைகள் அடர்ந்து வளர்ந்து மறைவிடமாக உள்ளது. (வ-51)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **கமலஜோதி தெய்வேந்திரன்**



தோற்றம் 13.07.1968 — மறைவு 08.03.2014

கடந்த 08.03.2014 இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (21.04.2014) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கணவர்: செ.தெய்வேந்திரன்
பிள்ளைகள்:தெ.கமலேந்திரா
தெ.ரூபேந்திரா, தெ.சர்வேந்திரா
தெ.மிகிந்தா, தெ.மிதுனா
077 894 3865

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
(45509)(3.6.4)

## விசர் நாயால் இருவர் கடியுண்டனர்

தென்மராட்சி, ஏப். 21

வீதியில் சென்றவர்கள் விசர் நாயால் கடியுண்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் வடக்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் தினோபா ( வயது- 24 ), கந்தையா தெய்வேந்திரன் ( வயது -46 ) ஆகியோர் விசர் நாயால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதே வேளை பூநகரியைச் சேர்ந்த ரங்கநாதன் குகப்பிரியா (வயது -11) என்னும் மாணவி பூனையால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(வ-9)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தினகரம்பிள்ளை செல்வகுமார்**



தோற்றம் 28★05★1975 — மறைவு 16★04★2009

திதி: சப்தமி 21.04.2014

ஆண்டுகள் ஐந்து ஆயிற்றோ
ஆருயிர் விட்டுப் பிரிந்து
மீண்டு மொரு முறை வாரீரோ
நாம் பார்த்து மகிழ
மாண்டு நீ போனதெங்கே
மனம் கிடந்து துடிக்கிறதே!

என்றும் உம் நினைவுடன்
தாய், உடன் பிறப்புக்கள், ம.மாலினி
மகன்: நேருஜன் (43260)(3.6.4)
வேப்பங்குளம், வவுனியா.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் உயர்திரு. **தம்பு நடேசு**

(RETIRED SENIOR TAX OFFICER, DEPARTMENT OF INLAND REVENUE)



தோற்றம் 04★11★1935 — மறைவு 22★03★2014

அன்பிற்கு இலக்கணமாய்
பண்புக்குச் சிகரமாய்
குடும்பத்துக்கு ஒளிவிளக்காய்
வாழ்ந்து கற்றவர் மத்தியில் எம்மைக்
காலூன்ற வைத்து அபரபக்க சஷ்டி
திதியதனில் இறைவனின் பாதார
விந்தங்களில் சரணடைந்த
எமது அன்புத் தந்தையின்
ஆத்மாசாந்தியடைய
இறைவனைப்
பிராரத்திக்கின்றோம். (47028) (3.6.4)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
381, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை யோகேஸ்வரன் (ஈசன்)



கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், பலாலியை புகுந்த இடமாகவும் தற்போது சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை யோகேஸ்வரன் (ஈசன்) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், கணாதரன் (கணா- இலங்கை வங்கி, கிளிநொச்சி), கேசிகா (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சிகாவின் (இலங்கை வங்கி, சாவகச்சேரி) அன்பு மாமனும், மீசாலை மேற்கைச் சேர்ந்த திரு.திருமதி சூரியகுமாரனின் (தொழில்நுட்ப அலுவலர் நகர சபை, சாவகச்சேரி) சம்பந்தியும், சர்வேஸ்வரன் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் சறோஜினிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்துரை மற்றும் கந்தையா, செல்வராணி, குகராசா (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலணி, சுன்னாகம். (சி/13890) (7.6) தகவல் : குடும்பத்தினர்.

## திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா) மயில்வாகனம் 19.04.2014 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற (முன்னாள் ஆசிரியர்) பொன்னம்பலம் மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செகராசசிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லம்மா சிவப்பிரகாசம் அவர்களின் அன்புச் சகோதரியும், ஜனநாயகம், (முன்னாள் பொறியியலாளர், லங்கா சிமெந்து நிறுவனம்- ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற செல்வநாயகம் (ஆசிரியர்), இராஜநாயகம் (Partner M.Rajanayagam& Co.Chartered Accountants, Thirunelvely), காலஞ்சென்ற கலாநிதி கதிர்காமநாயகம், (முன்னாள் விரிவுரையாளர், கணித புள்ளிவிபரவியல்துறை,யாழ்பல்கலைக்கழகம்) மற்றும் வேதநாயகி, ஜெகசோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,திருச்செல்வகுமாரி (ஆஸ்திரேலியா), றஞ்சிதகுமாரி(கனடா), சிவறாஜினி(நரம்பியல் வைத்தியநிபுணர்- ஆஸ்திரேலியா), சாமினி(கனடா),சிவராஜா(விரிவுரையாளர்-சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், இணைப்பாளர் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகு,யாழ் பல்கலைக்கழகம்), பால்ராஜ்(கனடா) ஆகியோரின் அன்புமாமியாரும், ராகுலன் (பொறியியலாளர் -ஆஸ்திரேலியா), ஆதவன், வி_ாசன்,கபிலன்(ஆஸ்திரேலியா),திருபரன்(கனடா), மாதங்கி (பட்டயக் கணக்காளர்- ஆஸ்திரேலியா), Dr.சுபாங்கி(ஆஸ்திரேலியா), மாதுர்யா, பாரதன்(பொறியியலாளர்-DAIMEI SLK (Pvt) Ltd, கொழும்பு), வைஸ்ணவி (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), சுவேதா, பிருந்தன் (கனடா) ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், ஆர்யன் , அஜய்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.04.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'அமைதி'
45,சுதுமலை தெற்கு,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
(47003)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
பாலா -077 953 0496
சிவராஜா 077 553 2402, 071 8818624, 021 225 5829

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கச்சியம்மா நல்லதம்பி

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சியம்மா நல்லதம்பி நேற்றுமுன்தினம் (19.04.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நல்லதம்பியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, பூலோகம், காலஞ்சென்ற சோதிலிங்கம் (சோமு) மற்றும் பரமேஸ்வரி அருணகிரிநாதன் (நாதன் - கனடா), சந்திரபாலசிங்கம் (சந்திரன்), தனபாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயபாலகிருஸ்ணா் (பிரான்ஸ்) மற்றும் சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாலிங்கம், நடராஜா, சிவானந்தன், உதயமலர் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி, ரத்தினேஸ்வரி, ராசமலர் (சுவிஸ்), தயாநிதி (பிரான்ஸ்), சிவரஞ்சினி (தவம் -பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற வர்களான தர்மலிங்கம், பவளம், குமாரசாமி மற்றும் பொன்னம்பலம் (பொன்னுச் சாமி), கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (47029) (45.3.6)

தகவல் : குடும்பத்தினர்.
021 205 3955

## வறட்சி, வெப்பத்தினால் வாடுகின்றனர் மக்கள்

### 4 வருடங்களாக தற்காலிக வீடுகளில் வசிக்கும் அவலம்

கிளிநொச்சி, ஏப்.21
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் குடும்பங்கள் வறட்சி, கடும் வெப்பத்தால் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்று நான்கு ஆண்டுகளாக தற்காலிக வீடுகளில் மக்கள் வசித்து வருகின்றனர்.

6 மாதங்கள் மட்டும் தற்காலிக வீட்டில் வசியுங்கள். பின்னர் நிரந்தர வீடுகள் வழங்கப்படும் என்று மக்களுக்கு கூறப்பட்டிருந்தது. எனினும் நான்கு ஆண்டுகளாக தற்காலிக வீடுகளில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் தகர வீடுகள் உடைந்து வீழ்கின்ற நிலை காணப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

தற்காலிக வீடுகளில் வாழ்கின்ற மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றன என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். (ச-18)



உயிர்ப்பு பெருவிழா ஆராதனை நேற்று ஞாயிற்றுக்கிழமை புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு இறை ஆசியைப் பெற்றுக் கொண்டனர்.

# உண்மைகளை ஏற்றால் நல்லிணக்கம் ஏற்படும்

### நீதி சமாதாணம் இன்றி தவித்து வருகின்றனர் இலங்கையர்; உயிர்த்த ஞாயிறு திருப்பலியில் மன்னார் ஆயர்

மன்னார், ஏப்.21
உண்மைகள் இல்லாத இடத்தில் அமைதி பிறக்காது. நீதி இல்லாத இடத்தில் குழப்பமான சூழ்நிலை ஏற்படும். உண்மை ஏற்கப் பட்டு நடந்த விடயங்களுக்கு எல்லாம் பொறுப்புக் கூறப்படும் பட்சத்திலே உண்மையான சமாதானம் பிறக்கும்; நல்லிணக்கம் ஏற்படும். இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று இரவு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு திருப்பலியை ஒப்புக் கொடுத்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றுமை, நல்லிணக்கம் தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதில் எவ்வித பயனும் இல்லை. எமது நாட்டுக்கு மாற்றம் தேவை. அதனை உலக நாடுகள் அறிந்துள்ளன. ஆனால் எமக்கு உதவி செய்ய வேண்டும் என்று அந்த நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன.

ஆனால் அவற்றை இலங்கை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இதனால் பல ஆண்டுகளுக்கு பின் நீதி இல்லாமல், உண்மை இல்லாமல் சமாதானம் இன்றி தவிக்கும் மக்களாக எமது இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை நீதியுடன் கூடிய சமாதானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வீதி அமைக்கப்படலாம்; கட்டடங்கள் கட்டப்படலாம்; ஆனால் அவை அல்ல எங்களுக்குத் தேவை.

எங்களுக்கு உண்மையான தேவை உலகத்தில் உள்ள மனிதர்கள் எல்லாம் உண்மையான சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதாகும்.

கவலைகள், கஷ்டங்கள், வறுமைகள் இருக்கலாம். ஆனால் உண்மையான நீதியுடன் கூடிய சமாதானமே மக்களுக்குத் தேவையான ஒன்று.

1920 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இப்படியான ஒரு போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு உரிய பதிலை கொடுப்பதற்காக சர்வதேச நாடுகள் எங்களுடன் சேர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. சமாதானம் என்பது கடவுளின் உண்மையான கொடை. இந்த நாட்டின் சமாதானத்துக்காகவும், எங்களுக்காகவும் கேட்கப்படுகின்ற இந்த மன்றாட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்-என்றார்.

இதேவேளை சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்காகவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-56)

## நெடுங்கேணி பகுதியில் யானை அட்டகாசம்

### அச்சத்தில் மக்கள்

வவுனியா, ஏப்.21
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நெடுங்கேணிப் பகுதியில் யானை அட்டகாசம் அதிகரித்துள்ளது. நெடுங்கேணி பிரதேசத்தில் யானை ஒன்று குடிமனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருகிறது. மக்கள் செல்லும் பிரதான வீதிகளிலும் யானைகள் வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே இந்தப் பகுதியில் இருந்து யானையை விரட்டியடிக்க வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும், வவுனியா மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்று வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்தார். (ச-421)

## பொதுமைதானம் இன்றி மாணவர்கள் நெருக்கடி

### அபிவிருத்தியில் பின் தங்கியது பூநகரி

கிளிநொச்சி, ஏப்.21
கிளிநொச்சி, பூநகரியில் பொது மைதானம் இல்லாததால் மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரிப் பிரதேசம் அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர். பூநகரிப் பிரதேச செயலகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் கூட்டங்களில் பொது மைதானம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் எந்தப் பயனும் இதுவரை கிடைக்கவில்லை என்று விளையாட்டு வீரர்கள் விசனம் தெரிவித்தனர்.

பூநகரிப் பிரதேச விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலைகளின் மைதானங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அதனால் பாடசாலைகளின் நிர்வாகங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

## மாணவர்கள் கணித பாடத்தில் 100 வீதம் சித்தி

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் நடந்து முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளனர். தோற்றிய 17 மாணவர்களுமே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

அதேசமயம் 77 வீத மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த வருடம் 69 வீத மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் இவ்வருடம் 77 வீத சித்தியைப் பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் விஞ்ஞான பாடத்தில் 82 வீத சித்தியைப் பெற்று கிளிநொச்சி வலயத்தில் முதலாம் நிலையைப் பெற்ற இந்தப் பாடசாலை இந்த ஆண்டு கணித பாடத்தில் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலையின் அதிபர் த.பிரபாகரன், ஆசிரியர் எஸ்.சர்வேஸ்வரன் இருவருமே மாணவர்களுக்கு கணித பாடத்தைக் கற்பித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-18)



பாதீனியம் அழிப்பில் இளைஞர், யுவதிகள்.

## இறம்பைக்குளத்தில் பாதீனியம் அழிப்பு

### மாற்றுவலுவுள்ளோர்களும் பங்கேற்பு

வவுனியா, ஏப்.21
உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியாவில் பாதீனியம் ஒழிக்கும் விசேட வேலைத்திட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிரமதானம் வவுனியா மாவட்ட மாற்று வலுவுள்ளோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா, இறம்பைக்குளத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாற்று வலுவுள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதோடு இளைஞர் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பாதீனியத்தை ஒழிக்கும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ச-56)

## மாதிரி வீடுகளால் மக்கள் பாதிப்பில்

### கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.21
கிளிநொச்சி மாவட்டத்தில் உதவி அமைப்புகளால் அமைத்துக் கொடுக்கப்படும் மாதிரி வீடுகள் சுகாதார ரீதியாக மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அதனால் மக்களுக்கு நோய்கள் ஏற்படுகின்றன என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற வீட்டுத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில உதவி நிறுவனங்கள் மாதிரி வீடுகள் என்ற பெயரில் வீடுகளை அமைத்து வழங்கி வருகின்றன. இவ்வாறு வழங்கப்படும் வீடுகள் பூச்சு வேலைகள் இன்றி அமைக்கப்படுவதால் வெப்பத்தை அதிகளவில் உறிஞ்சுகின்றன.

பகலில் வீடுகள் கூடுதல் வெப்பத்தை உறிஞ்சி வருவதால் தோல் தொடர்பான நோய்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன.

எனவே, இவ்வாறான வீடுகளை அமைத்துக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும் நிரந்தர வீடுகளுக்கு கூரைத் தகரம் பாவிக்க அனுமதி வழங்கப்படவில்லை. எனவே தற்காலிக வீடுகளுக்கும் பூச்சு வேலைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொடுப்பதனால் மக்களுக்கு தோல் நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்- என்றார். (ச-18)



ஜப்பான் நாட்டின் ஜய்கா பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்குச் சென்று அங்கு நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தைப் பார்வையிட்டனர். (ச-10)

# கல்விக்கு வறுமை தடையாகக் கூடாது

## சம்மாந்துறைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

சம்மாந்துறை,ஏப்.21

கல்விக்கு வறுமை தடையாக ஒரு போதும் இருக்கக் கூடாத வகையில் கல்வித் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு இலவசமாக சீருடை, பாடப்புத்தகங்கள், போஷாக்கான உணவுகள், கல்விக்கான புலமைப் பரிசில்கள் என்பவற்றை அரசு வழங்கி வருகின்றது.

அதனை நாம் சரியாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும்.

இவ்வாறு சம்மாந்துறைப் பிரதேச செயலர் ஏ.மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை, சென்னல் கிராமத்தின் 20 வீட்டுத் திட்ட மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அல் அமானத் முன் பள்ளி பாடசாலைக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு எந்தத் தடைகளும் இருக்க முடியாது. ஏனெனில் அரசு கல்விக்காக கூடுதலான பணங்களைச் செலவு செய்து வருகின்றது.- என்றார். (ச)

# பிக்குவின் தலையீட்டால் பணிகள் இடைநிறுத்தம்

## அகஸ்தியர் ஸ்தாபனத்தை நேரில் சென்று பார்வையிட்டது கூட்டமைப்பு



அகஸ்தியர் ஸ்தாபனத்தை பார்வையிட்டனர் கூட்டமைப்பு உறுப்பினர்கள்

திருகோணமலை,ஏப்.21

திருகோணமலை, மூதூர் கங்குவேலி பகுதியில் அமைந்துள்ள அகஸ்தியர் ஸ்தாபனத்தின் கட்டுமானப் பணிகள் அந்தப் பகுதியில் இருக்கும் புத்த பிக்குவின் தலைமையில் வந்த குழுவினரின் தலையீட்டையடுத்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜெ.ஜெனார்த்தனன், கு.நாகேஸ்வரன் ஆகியோர் அங்கு சென்று நிலைமையைப் பார்வையிட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் தற்போது பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)

**திருகோணமலை, மூதூர், சங்குவேலி பகுதியில் அமைந்துள்ள அகஸ்தியர் ஸ்தாபன பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

# கிழக்கு தமிழருக்கே கூடுதல் பாதிப்புகள்

## மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு



இரா.துரைரெட்ணம்

**"வடமாகாணத்தில் பொருளாதார முதலீடுகள் அதிகரித்துக் காணப் படுகின்றன. இராஜதந்திரிகளின் பார்வையும் அதிகமாக வடக்கு நோக்கி நகர்ந்துள்ளன.**

மட்டக்களப்பு,ஏப்.21

கிழக்கு தமிழ் மக்கள் ஏனைய இனங்களின் ஆதிக்கத்துக்குள் முடக் கப்படுகின்றனர். அதனால் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்களையே எதிர்நோக்கி வருகின்றனர். கிழக்கு மாகாண சபையில் உள்ள ஒருசில இனவாதிகளினூடாகத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கின்ற முயற்சிகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்மொழியப்பட்ட பிரேரணை தொடர்பான தீர்மானம் அதிகப்படியான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அதிகாரப் பகிர்வை இலங்கை அரசிடம் இருந்து பெற்றுத்தர வேண்டிய கடப்பாடு சர்வதேச நாடுகளுக்கு உண்டு. வட மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ் அரசியல் தலைமைகளே தங்கள் பிரதேசத்தின் திட்டமிடலை நடைமுறைப்படுத்துகின்றன. வடமாகாணத் தமிழர்களில் அதிகளவானோர் மேலைத்தேய நாடுகளில் தொழில்புரிவதால் வடமாகாணத்தில் பொருளாதார முதலீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இராஜதந்திரிகளின் பார்வையும் அதிகமாக வடக்கு நோக்கி நகர்ந்துள்ளன. ஆனால் கிழக்கைப்பொறுத்தவரையில் தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் மேற்படி விடயங்களுக்கும் எவ்வித வாய்ப்புகளும் வசதிகளும், சந்தர்ப்பங்களும் இல்லை என்பதை எமது தமிழ்த் தேசியத் தலைமைகள் நன்கு புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

எமது உரிமைகள் தொடர்பாக எந்தவித விட்டுக் கொடுப்புக்களுக்கும் நாம் தயார் இல்லை. இந்த விடயத்தில் அறுபது ஆண்டுகால வலியைச் சுமந்து நிற்பவர்கள் தமிழர்கள்.

ஆயுதப் போராட்ட காலத்தில் ஒவ்வொரு குடும்பங்களும் ஏதோ ஒரு வகையில் ஈடு கொடுக்கமுடியாத இழப்புக்களைச் சந்தித்து இன்றுவரை நிர்க்கதி நிலையில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பரிதவிக்கின்றன.

தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பாக தீர்க்கமான முடிவெடுக்கும் பொறுப்பு இந்தியாவுக்கும் உள்ளது. காரணம் விரும்பியோ, விரும்பாமலோ நிர்ப்பந்தம் காரணமாக இலங்கை- இந்திய ஒப்பந்தமூடாக உருவாக்கப்பட்ட மாகாணசபையின் கீழ் தேர்தலில் போட்டியிட்டு வடக்கு, கிழக்கு மக்கள் அதிகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன்மூலம் வடமாகாணத்தில் ஆளும் தரப்பினராகவும், கிழக்கில் எதிர்தரப்பினராகவும் செயற்பட்டு வருகின்றோம்.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பெறுவது தொடங்கி சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவது வரைக்கும் எமது அரசியல் போராட்டம் நீண்டுகொண்டே போகும். எனவே இலங்கை அரசு, மாற்றான்தாய் மனப்பான்மையுடன் தமிழ் மக்களை நடத்தாது இதய சுத்தியுடன் காலம்தாழ்த்தாது நியாயமான தமிழர்களுடைய அபிலாசைகளையும், உரிமைகளையும், வடக்கு, கிழக்கை இணைத்து வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கிழக்குப் பல்கலையில் கட்டடங்களை திறந்துவைத்தார் மஹிந்த



நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்கிறார் ஜனாதிபதி

**மஹிந்த ராஜபக்ஷ, அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள 555 மில்லியன் ரூபா பெறுமதியான பல்வேறு கட்டடத் தொகுதிகளையும் திறந்து வைத்தார்.**

மட்டக்களப்பு,ஏப்.21

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள 555 மில்லியன் ரூபா பெறுமதியான பல்வேறு கட்டடத் தொகுதிகளையும் திறந்து வைத்தார்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில், 230 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வர்த்தக முகாமைத்துவ பீட கட்டடத் தொகுதி, 171 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பிரதான நூலக கட்டடத் தொகுதி, 121 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கலை ,கலாசார பீட கட்டடத் தொகுதி, 25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உள்ளக உடற் பயிற்சி அரங்கு, 7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய நுழைவாயில் என்பனவற்றை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் கிட்ணண் கோபிந்தராஜா ,உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க,உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் உட்பட பலர் கலந்துகொண்டனர் . (ச)

## ஐ.நா. பொதுச்சபைத் தலைவர் இளைஞர் மாநாட்டில் பங்கேற்பு

கொழும்பு,ஏப்.21
ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரின் தலைவர் ஜோன் வில்லியம் யெஷி, எதிர்வரும் மே மாதம் இலங்கையில் நடைபெறும் உலக இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

என்டிகுவா, பாபுடா ஆகிய நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி வில்லியம் யெஷி 2015 ஆம் ஆண்டின் அபிவிருத்திப் பணிகளில் இளைஞர்கள் முக்கியத்தும் அளிக்க வேண்டும் என்ற கருத்தை முன்னெடுக்கும் ஒரு சர்வதேச இராஜதந்திரியாக விளங்குகிறார்.

இவருடன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இளைஞர் விவகாரங்களுக்கு பொறுப்பான விஷேட தூதரான அஹமட் ஹல்ஹெண்டாவியும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு பிரிவுகளின் தலைவர்களும் இந்த உலக இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதாக உறுதியாக அறிவித்துள்ளார்கள்.

உலக இளைஞர் மாநாடு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சர்வதேச சங்கத்திடம் முறையிட்டது ஐ.தே.க.

## 24 இல் நாடாளுமன்றில் விவாதம் நடத்தவும் தீர்மானம்

கொழும்பு,ஏப்.21
தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாந்தோட்டையில் தாக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி, சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திடம் முறையிட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை எதிர்க் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க செய்துள்ளார்.

இலங்கை அரசும் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தை வைத்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த கோருவது என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. இந்தச் சம்பவத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினருக்கு இரண்டு அமைச்சர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

> “ அம்பாந்தோட்டை தாக்குதல் குறித்து இலங்கை அரசு உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

எனினும் ஒருவருக்கு ஒருவர் அடிப்படையில் பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சு பாதுகாப்பு பிரிவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ச)


## பொலித்தீன் உற்பத்தி தொழிற்சாலையில் தீ

கொழும்பு,ஏப்.21
ஹோமாகம, கடுவன பிரதேசத்திலுள்ள பொலித்தீன் உற்பத்தி தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தத் தீ விபத்தால் தொழிற்சாலை உபகரணங்கள் பலவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. ஹோமாகம பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



பொல்கஹாவலையில் அமைந்துள்ள நாட்டின் முதலாவது தன்னியக்கக் கார் உற்பத்தித் தொழிற்சாலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். (ச)

## மண்ணெண்ணெய் மானியம் வழங்குவது குறித்து ஆராய்வு

### கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.21
மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் மானியத்தை பெற்றுக் கொள்வதா அல்லது அதற்கு பதிலாக மாற்று நடவடிக்கையை பயன்படுத்துவதா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக மீனவர் சங்கங்களை ஒன்றிணைத்து ஆராயப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

> “ மானியக் கூப்பன்களை ஏனையோருக்கு விற்பனை செய்தால் நடவடிக்கை.

இந்த விடயம் தொடர்பில் மீனவர் சங்கங்கள் மற்றும் மீன்பிடி கிராமங்களை அண்மித்த பகுதிகளில் உள்ள வழிபாட்டுத் த்லங்களின் மதகுருமார்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று பிரதி கடற்றொழில் அமைச்சர் சரத் குமார குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

தேவையான மானியங்கள் தொடர்பில் உரிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை, மானிய கூப்பன்களை ஏனையவர்களுக்கு விற்பனை செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்கு மீனவ சங்கங்களின் ஊடாக ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

## ஹம்பாந்தோட்டை தாக்குதல்; அரச உயர் மட்டம் மௌனம்

### ஆங்கிலப் பத்திரிகைகள் தகவல்

கொழும்பு,ஏப்.21
ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஹம்பாந்தோட்டை மேயர் இராஜ் பெர்ணான்டோ தொடர்பில் அரச உயர்மட்டம் இதுவரை கருத்து எதனையும் வெளியிடவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இலங்கையில் வெளிவருகின்ற ஆங்கிலப் பத்திரிகைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

மேயர் இராஜ். சம்பவத்தின் போது கைத்துப்பாக்கியுடன் இருந்தமை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று வரை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உயர் தலைவர்கள் இந்த சம்பவம் குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேனா ஹம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பில் தாம் பதில் வழங்கமுடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தல விமான நிலையத்தை பார்வையிட அழைப்பு விடுத்த விமானத்துறை அமைச்சர் பிரியங்கர ஜெயரத்ன, இந்தச் சம்பவம் மத்தல விமான நிலையத்தின் பயணிகள் பாதுகாப்பு விடயத்தில் பிரச்சினையை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்டார்.

எனினும் பிரச்சினை விமான நிலையத்துக்கு வெளியிலேயே இடம்பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே இந்த விடயத்தில் விமான நிலைய அதிகாரிகளையே குற்றம் சுமத்த வேண்டியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார் என்று ஆங்கிலப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன. (ச)

## நிறைவேற்று அதிகாரிக்கு கொலை அச்சுறுத்தல்

### பொதுபல சேனா முறைப்பாடு

கொழும்பு,ஏப்.21
பொதுபல சேனா இயக்கத்தின் நிறைவேற்று அதிகாரிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை பொதுபல சேனா இயக்கத்தின் நிறைவேற்று அதிகாரி தில்ந்த விதானகே. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் செய்துள்ளார்.

பல்வேறு தரப்பினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் என்று அவர் கூறினார்.

அரசுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக தம் மீது சிலர் பழி சுமத்தி வருகின்றனர் என்று அவர் கூறினார்.

நாட்டின் பொறுப்புணர்ச்சி மிக்க நபர் என்ற காரணத்தால் நாம் நாட்டை விட்டு வெளியேறிச் செல்லவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா இயக்கம் நாட்டு மக்களின் நலனுக்காக பாடுபட்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார். (ச)

## யாழ்ப்பாணத்தில் எம்.பிக்கள் எண்ணிக்கை குறைக்கப்படாது

### தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.21
எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படும் என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை. இந்தத் தகவலை தேர்தல்கள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வெளியான தகவல்களின்படி யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 9 இல் இருந்து 6ஆக குறையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதனை மறுத்த மொஹமட், வவுனியா, நுவரெலியா, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தப் படவுள்ளன என்று கூறினார்.

வவுனியாவிலும் நுவரெலியாவிலும் ஒரு நாடாளுமன்ற ஆசனம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதேநேரம் மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருந்து தலா ஓர் ஆசனம் குறைக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த மாற்றங்கள் சனத்தொகை சுட்டியின் அடிப்படையிலேயே நிகழ்கிறது என்று அவர் தெரிவித்தார். (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேச்சை மீள ஆரம்பியுங்கள்

சுயாட்சி பற்றிய பேச்சு மீண்டும் எழுந்திருக்கிறது. இந்த முறை அந்தப் பேச்சு வடக்கில் இருந்தல்லாமல், தெற்கில் இருந்தே முதலில் எழுந்திருக்கிறது.

இலங்கையில் நீடித்துச் செல்லும் இனப்பிரச் சினைக்கான தீர்வாக சுயாட்சி மட்டுமே இருக்க முடி யும் என்பதை தந்தை செல்வா காலத்தில் இருந்தே தமிழர் கள் சொல்லி வருகிறார்கள். என்றாலும், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் தெற்குச் சிங்கள மக்களின் எண் ணிக்கை மிகமிகக் குறைவே!

இப்போது தெற்கைத் தளமாகக் கொண்ட தேசிய சமாதானப் பேரவை சுயாட்சிக்கான அழைப்பை முன் வைத்து, அதனை மீண்டும் பேசு பொருளாக்கியுள்ளது.

பேரவையின் இந்த அழைப்பு வரவேற்புக்குரியது. இலங்கையில் மீண்டும் ஒரு வன்முறை முகிழ்ந்து விடக் கூடாது என்ற அக்கறைக்குரியது. இலங்கை துண்டாடப் பட்டு விடக்கூடாது என்ற தூரநோக்குச் சிந்தனைக்குரியது.

சுயாட்சி அளவுக்கான அதிகாரத்தைக் கொடுக்கக் கூடிய அமைப்பு ஒன்றை உருவாக்குமாறே தேசிய சமா தானப் பேரவை இலங்கை அரசிடமும் ஏனைய அரசி யல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்திருக்கிறது. மீண்டும் முகிழ்ந்துவரும் களநிலைமையை ஆராய்ந்து பார்த்தபின்னர், அவசரமாக இந்த அழைப்பை பேரவை விடுத்திருக்கிறது.

தமிழர்களுக்குச் சுயாட்சியை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை மீண்டும் ஆரம்பிக்கும் படியும் அது இலங்கை அரசிடம் வற்புறுத்தியிருக்கிறது.

இந்த நிலையில், சமாதானப் பேரவையின் கோரிக் கையை வரவேற்றுள்ள கூட்டமைப்பின் தலைவர், அர சுடனான பேச்சுக்குத் தமது கட்சி தயாராகவே இருக் கிறது என்பதையும் வெளிப்படுத்தி விட்டார். ஆனால் அரசு இதற்கு இன்னும் பதிலளிக்கவில்லை.

அதேநேரத்தில் சர்வதேச நாடு ஒன்றின் நடுவு நிலை மையுடன்தான் அந்தப் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதையும் சம்பந்தன் கோடிகாட்டியிருக்கிறார்.

இலங்கைப் பிரச்சினையில் தென்னாபிரிக்காவின் தலையீடுக்கான நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டி ருக்கும் இந்தத் தருணத்தில், அதன் பங்களிப்பு பேச் சில் நடுவுநிலைமை வகிப்பதாகத்தான் இருக்க முடி யும் என்பதை அவர் கோடிகாட்டியிருப்பதாகவே கொள்ள வேண்டும்.

மூன்றாவது நாடு ஒன்றின் நடுவுநிலைமையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்வதற்கான அறிகுறி கள் எவையும் இதுவரையில் தென்படாத நிலையில், தென் னாபிரிக்காவின் வகிபாகம் தெளிவாகாத நிலையே நீடிக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நோர்வே வகித்தது அனுசரணை என்கிற வகிபாகம் மட்டுமே. பேச்சுக்கான இடங்களை ஏற்பாடு செய் வது, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது, இரு தரப்புகளுக்கும் இடையில் தகவல் பரிமாற்றங்களைச் செய்வது என்பவற்றுடன் அந்தப் பணி நின்றுவிடும். என்ன பேசுவது எப்படிப் பேசுவது என்பதை சம்பந் தப்பட்ட தரப்புகள்தான் தீர்மானிக்க வேண்டும்.

அப்படி நடந்த பேச்சு படுதோல்வியில் முடிந்து, அதன் பின்னர் வன்னியில் குருதி ஆறு பெருக் கெடுத்து ஓடிவிட்ட பின்னர், மூன்றாவது நாடு ஒன்றின் அனுசரணையில் தமிழர்கள் நம்பிக்கை வைப்பதற்கு ஒன்றும் இல்லை. அதனாலேயே நடுவு நிலைமை வகிக் கும் மூன்றாவது நாடு ஒன்று வேண் டும் என்று கூட்ட மைப்புத் தலைவர் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டு மூன் றாவது நாட்டின் நடுவுநிலைமையுடன் பேச்சை மீண் டும் ஆரம்பிப்பது சாலச் சிறந்தது. தன்னுடைய சுய அரசியல் நலன்களைக் கருதி, மூன்றாவது நடுவுநிலை மையை அது உடனடியாக ஏற்காது விட்டாலும்கூட, சுயாட்சியை வழங்கக்கூடிய வகையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடன் உடனடியாக மீண்டும் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கை நாட்டின் மீதும் அதன் மக்கள் மீதும் மஹிந்த அரசு உண்மையான அக்கறையும் பாசமும் இருக்கு மானால், மீண்டும் ஒரு வன்முறைக்குள் மக் களைத் தள்ளிவிடும் கைங்கரியத்தை விடுத்து பேச்சை ஆரம் பிக்கும் பணியை அது துரிதப்படுத்த வேண்டும். அந்தப் பேச்சு, தமிழர்களுக்குச் சுயாட்சியை வழங்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவும் வேண்டும்.

தமிழர்களுக்கு சுயாட்சியை வழங்கினால், அவர் கள் பிரிந்து சென்றுவிடுவார்கள் என்று அரசு அஞ் சுமாக இருந்தால் அது அர்த்தமற்றது; காலாவதியா னது. எல்லோரும் கள யதார்த்தத்தைப் புரிந்து வைத் துள்ளனர் என்பதை மனதில் கொண்டு, அர்த்தமுள்ள பேச்சை இலங்கை அரசு உடன் ஆரம்பிக்கவேண்டும்.

# தென்னாபிரிக்க முயற்சியில் அரசுக்கு சற்று ஆறுதல்

**இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கும் பொருட்டு தென்னாபிரிக்க அதிபர் ஜேக் கொப்சூமா எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அவரால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தூதுவர் கிரில் ரமபோசா அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் முதல் சுற்று ஆலோசனைகளை நடத்தியுள்ளார். தென்னாபிரிக்காவின் எதிர்கால அதிபர் என்று கருதப்படும் அவர் அடுத்த மாதம் அல்லது ஜீன் மாதம் முற்பகுதியில் இலங்கை வந்து ஜனாதிபதி ராஜபக்ஷவோடும் ஏனைய தலைவர்களோடும் பேச்சுக்களை மேற்கொள்ளவிருக்கிறார்.**

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து – கோகுலன்

இலங்கை தேசிய பிரச் சினையில் தென்னாபிரிக்க அரசு எடுத்துவரும் தீர்வு முயற்சிகளுக்கான கால சூழ்நிலை இலங்கை அரசுக்கு ஒரு வரப்பிர சாதமாக அமைந்திருக்கிறது எனலாம். கடந்த மாதம் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்க ஆதரவில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தின் பல அம்சங்களுக்கு இது பதிலளிப்பது போல் அமைந்துள்ளது. தீர்மானத்தின் ஒரு அறிவுறுத்தலின் படி புதிதாக வரவிருக்கும் மனித உரிமை ஆணையாளர் வாய் மூல மான அறிக்கையொன்றை சபையில் வரும் செப்ரெம்பரில் தாக்கல் செய் யும்போது இலங்கையில் நல்லி ணக்கத்துக்கான செயற்பாடுகள் தற் போது முன்னெடுக்கப்பட்டு வருகின் றன என்ற முறையில் அறிக்கை யிடுவார் என்று அரசு எதிர்பார்க்கின் றது. தீர்மானத்தை முற்று முழுதாக நிராகரித்துள்ளதுடன் ஆணையாளர் பணிமனையுடன் எந்த வகையிலும் ஒத்துழைப்பதில்லை என்ற நிலைப் பாட்டை எடுத்துள்ள நிலையிலும் இவ் வாறான ஒரு எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது. அத்துடன் வரப் போகின்ற சர்வதேச விசாரணை தொடர்பான பிரச்சினைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொள் ளும் நிலையிலும் இல்லை. நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக நிலைமையை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்றே வருகின் றன.

சில அரசுகளுடன் தொடர்புகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாம் தரப்பினர் மூலம் இலங்கைக்காக ஆதரவு தேடும் முயற்சிகளும் நடை பெறுகின்றன.

இதேவேளை ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை விசாரணைகளை ஆரம் பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வ திலும் கடுமையாக இறங்கியுள்ளது. விசாரணைக்கான குழுவின் பெயர்ப் பட்டியல் அடுத்த மாதம் எந்தச் சமயத் திலும் அறிவிக்கப்படலாம். இதே சமயம் மனித உரிமைகள் ஆணை யாளர் நவிப்பிள்ளை இலங்கை தொடர்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீமூனை சந்திக்கவிருக்கிறார். இது பற்றி ஜெனிவாவிலுள்ள நிரந்தரப் பிரதிநிதி மூலம் இலங்கைக்கு அறி விக்கப்படவிருக்கிறது.

இதேவேளை இவை தொடர்பான முக்கிய நிகழ்வுகளும் இடம்பெற்றுள் ளன. வெளிநாட்டில் செயற்படும் 16 தமிழ் அமைப்புகளுக்கு அரசு தடை விதித்ததையடுத்து யாழ்.குடாநாட்டில் பளைப் பகுதியில் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளை தலை தூக்க வைப்பதற்கான முயற்சிகள் நடை பெற்றிருப்பதாக அறிவித்து நடவடிக் கைகளில் அரச தரப்பினர் ஈடுபட்டுள் ளனர். இதையடுத்து இலங்கை நெருங்கிய நட்பு நாடான ஆஸ்திரேலியா முதற்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் தமது நாட்டு குடி மக்கள் இலங்கைக்கு பயணம் மேற் கொள்வது தொடர்பாக எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. வேறு பல ஐரோப்பிய நாடுகள் இவைகளை விரைவில் பின் பற்றி செயற்படவிருப்பதாகத் தெரிகிறது. வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்கு செய்வோர் இலங்கை நிலைமைகள் குறித்து விசாரிக்கத் தொடங்கியுள்ளனர். வெளிநாட்டுக் காப்புறுதி நிவனங்களும் அச்சம் கொள்ளத் தொடங்கியிருப்பது தெரிகின்றது. இது வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பாதிக்கலாம் என்று அரசு வட்டாரங்களில் கவலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியிருப்பதான அறிவிப்பு இலங்கையின் பாதுகாப்பு நிலை முதலீடுகளுக்கு உசிதமாக இராது என்று வெளிநாட்டு முதலீட்டுக்காரர்கள் அச்சம் கொள்ளத் தொடங்கியிருப்பதாகக் கவலை தோன்றியுள்ளது.

### அரசு தரப்புக்கு தலைகுனிவு

கடந்த வாரம் ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்றிருந்த சம்பவமும் அரசுக்கு நல்ல சகுனமாக அமையவில்லை. மனித உரிமைகள் நிலவரம் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய் வதற்கான நிபுணர் குழுக்களை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணி மனை நியமிக்கும் பணியில் இறங்கி யுள்ள சூழ்நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று உண்மை அறியும் பயணம் ஒன்றை மேற் கொண்டு ஹம்பாந்தோட்டைக்குப் போயிருந்தார்கள். மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை மகா புற ராஜபக்ஷ துறைமுகம் ஆகியவற்றுக்கு அவர்கள் சென்றிருந்தார்கள். அங்கு வைத்து அரசு சார்ந்த குழுவொன்று அவர்களை அச்சுறுத்தி தாக்குதல் நடத்தியிருந்தது. அதனால் அவர்கள் அங்கிருந்து அவசரமாக பின்வாங்கிவர நேர்ந்தது.

அந்தச் சம்பவம் குறித்து வெள்ளிக் கிழமை தினசரி பத்திரிகைகளில் வெளி யாகியிருந்த படங்கள் அரசுக்கு மிக மோசமான தலைகுனிவை ஏற்படுத்தக் கூடியவையாக இருந்தன. முதல் பக்கத்தில் வெளியாகியிருந்த படம் ஒன்றில் காலி நகர பிதாவான மேயர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோ கையில் சுழல் துப்பாக்கியொன்றுடன் ஐ.தே.க. உறுப்பினர்களை கூட்டத்தினர் துரத்திச் செல்கையில் அவர்களுடன் காணப் படுகிறார். மேயர் தங்களை துப்பாக் கியுடன் துரத்தி வந்ததாகவும் அவர் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தாங்கள் பயந்ததாகவும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின் றனர். அங்கிருந்து அவர்கள் தப்பிச் சென்றதால் அசம்பாவிதம் எதுவும் நேரவில்லை.

இதில் ஒரு நகைச்சுவைத் திருப்பம் என்னவென்றால் மேயர் பெர்னாண்டு தமது கையில் வைத்திருந்தது ஒரு விளையாட்டுத் துப்பாக்கி என்று பின்னர் தெரிவித்திருந்தார். அவர் ஐ.தே.க. எம்.பிக்களை பாதுகாக்கவே முயன்றதாக வும் மேயர் கூறியிருந்தார். இது உண் மையாக இருக்குமானால் நாட்டில் அமைதி ஒழுங்கை நிலைநாட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் விளையாட்டுத் துப்பாக்கிகளைத்தான் பாவிக்கிறார்கள். அதே சமயம் அந்தக் கடமையைச் செய்ய வேண்டிய பொலிஸார் கைகட்டிக் கொண்டு உதவியில்லாமல் பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள் என்ற விசித்திரம் புலனாகின் றது. இது நாட்டில் சட்ட ஒழுங்கு நிலைமை மோசமடைந்து வருவதையும் எடுத்துக் காட்டுகின்றது. ஜனாதிபதி ராஜபக்ஷ மேயர் பெர்னாண்டோவுடன் தொலைபேசி யில் தொடர்பு கொண்டு கடுமையாகக் கண்டித்துள்ளதுடன் குற்றச்சாட்டைத் தமது மகன் நாமல் மீது சுமத்த முயன்றதாகவும் கண்டித்திருக்கிறார்.

ஹம்பாந்தோட்டை இளம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதன் பேரில் ஐ.தே.க. உறுப்பி னர்களை காப்பாற்றத் தாம் அங்கு அவசரமாக சென்றிருந்ததாக மேயர் பெர்னாண்டோ முன்னதாக கூறியிருந் தார். ஆனால் அப்படியானதொரு அறிவு றுத்தலைத் தாம் விடுத்திருக்கவில்லை யென்று நாமல் ராஜபக்ஷ விடுத்த பகிரங்க அறிக்கையில் மறுத்திருந்தார்.

இந்தச் சம்பவமானது அரசு தனது கால்களிலேயே சுட்டுக் கொண்டதைப் போல் ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர் கள் மீது தாக்குதல் நடத்த முயன்றது. மற்றும் நகர மேயர் துப்பாக்கியுடன் காணப்பட்டது முதலியவை இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நிகழ்ந்து வருகின்றன என்ற குற்றச் சாட்டுக்களை உண்மையாக்குவதாக உள்ளன. அதுவும் இலங்கை சாதாரண குடிமக்கள் மீது அல்ல மக்கள் பிரதிநிதிகள் மீது மனித உரிமை மீறல்கள் நடத்தப் பட்டுள்ளன.

### தென்னாபிரிக்க நல்லிணக்க முயற்சி

இலங்கை தேசிய பிரச்சினையில் தென் னாபிரிக்க முன் முயற்சியெடுப்பது தொடர்பான பொதுவான அபிப்பிராயம் என்னவென்றால் ஒரு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உரு வாக்குவதுதான் இதன் பிரதான நோக்கம் என்பதாகும். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷவும், தென்னாபிரிக்க அதிபர் சூமாவும் கொழும்பில் கடந்த நவம் பரில் சந்தித்து உரையாடியிருந்தார்கள்.

தென்னாபிரிக்க முயற்சி முன்னேற்ற கரமாக முடியுமானால் இப்பொழுது செயற்படாமல் இருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும். தமிழர் குறைகளை நிவர்த்தி செய்வதற் கான ஒரு புதிய தீர்வுப் பொதியை முன் வைக்க வேண்டியிருக்கும். தெரிவுக் குழுவின் வரையறைகள் தெளிவுபடுத்தப் பட்டு தீர்வுப் பொதியொன்று முன்வைக் கப்படும்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பகுதிகளும் மாற்றி நிறு வப்பட முடியும்.

இவை இப்படி இருக்க மனித உரிமைகள் சபையில் வாக்களிக்காமல் கடந்த மாதம் ஒதுங்கிக் கொண்ட இந்தியா இப்பொழுது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவதுடன் அதற்கு மேலும் செல்லுமாறு வற்புறுத்துகின்றது. எனவே தென்னாபிரிக்காவால் நியமிக்கப்பட்டுள்ள சிறப்புத் தூதுவர் இந்த விடயங்கள் அனைத்தையும் கவனமாக ஆராய்ந்து பொது நிலைப்பாடு ஒன்றைக் கண்டறிந்து கலந்துரையாடல் ஒன்று வழிவகுத்தாக வேண்டும். இலகுவான வேலையல்ல. கால நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளக்கூடிய பணியாகும் இது. வரவிருக்கும் மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்ற விசாரணையைப் பொறுத்து இலங்கை அரசும் அதைத் தான் விரும்பி நிற்கின்றது.

நடேசு தயாளன்,
யாழ்ப்பாணம்.

# கல்விச் செயன்முறையில் ஆசிரியர் சுயவலுவூட்டல்

ஆசிரியர்களுக்கான சுய வலுவூட்டலானது கல்வி மறுசீரமைப்புகளிலும் பாடசாலை மறுசீரமைப்புக்களிலும் முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது. ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி, பாடசாலை ஒழுங்கமைப்புக் கல்வியில் புதுமைகாணல் என்பவற்றின் நோக்கங்களை அடைய விளையும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆசிரியர் சுய வலுவூட்டல் என்பது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது.

முன்னைய கால ஆய்வுகளில் ஆசிரியர் சுயவலுவூட்டல் என்பது குழுச்செயன்முறை என்றவாறே நோக்கப்பட்டது. ஆசிரியர் வலுவூட்டலின் ஆரம்பகாலச் செயலொழுங்கானது ஆசிரியர்களது உரிமைகளையும் அவர்களது அனுகூலங்களையும் பேணுவதனூடாகச் சிறந்த கல்விக்கான ஆசிரியர் சமூகத்தினை தோற்றுவிப்பதாகவே இருந்தது. முழுநிலைத் தர முகாமைத்துவ எண்ணக்கருவானது நிறுவனமொன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளானது அதன் முன்னரங்க நிலையிலுள்ள ஊழியர் களாலேயே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. இந்த வகையில் கல்விப்புலத்தில் எழும் பிரச்சினைகளானது அதன் முன்னரங்க நிலையிலுள்ள ஆசிரியர்களாலேயே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதற்கான பயிற்சி முன் ஏற்பாடுகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் அந்த வகையில் ஆசிரியர்கள் வலுவூட்டல் என்பது முக்கியத்துவமுடை யதாகும். முழுநிலைத் தரமுகாமைத்துவ எண்ணக்கருவின் படி ஆசிரியர்கள் தமக்கு நேரிடையான வேலையைச் செய்வதற்கு அதிகூடியளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.



ஆசிரியர் வலுவூட்டலானது ஆசிரியர் வாண்மை விருத்திச் செயன்முறையின் முக்கியமான செயலொழுங்காகும். தலைமைத்துவத் திறனைக் கட்டியெழுப்புதலும் அதனது அடிப்படைச் செயலொழுங்காகும். ஆசிரியர்களுக்கான வலுவூட்டலில் தலைமைத்துவம் என்பது முக்கியத்துவமுடை யதாகும். வினைத்திறனான தலைமைத்துவ இயல்பானது ஆசிரியர்களது தொழில்சார் செயற்பாடுகளில் வலுவுடையதாக இருக்கும். சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் அதனூடாக இலக்கை அடைந்துகொள்வதற்கும் வழிசமைப்பதாக இருக்கும் என்பதோடு நிறுவனமானது வினைதிறனுடன் செயற்படுவதற்கான நிறுவனக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவ தாகவும் இருக்கும். நிறுவனத்தினது வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் இனங்காண உதவும்.

ஆசிரியரது அதிகரித்தளவிலான ஈடுபாடானது இன்று கல்விக் கட்டமைப்பு மாற்றத்துக்கு அவசியமானதாகவுள்ளது. 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வியில் ஆசிரியருக்கு அதிகரித்தளவிலான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு பாடசாலை மட்ட முகாமைத்துவச் செயலொழுங்கில் தீர்மானம் மேற்கொள்ளலில் ஆசிரியரின் பங்கு பணியானது இன்றியமையாததாகும். இதற்காகக் கீழிலிருந்து மேலான பங்குபற்றுதல் அவசியமுடையதாயுள்ளது. விமர்சன ரீதியான கோட்பாட்டாளர்கள் தலைவர்களானவர்கள் தமது அங்கத்தவர்களுக்கு நிறுவனத்தின் இலக்கை அடையக் கூடியதான இயலுமையை வளர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். இந்த வகையில் ஆசிரியர்களை வலுவூட்டுதலில் மேல் நிலை முகாமையாளர்கள் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதனூடாக ஆசிரியர்களது இயலு மைகள் அதிகரித்து பாடசாலையில் பயனுடையதாக அமையும். போய் (1994) என்பவரது கருத்துப்படி வலுவூட்டலானது திட்டமிடலுக்கும் சுய வலுவூட்டலுக்கும் வலுச்சேர்ப்பதாக இருக்கும் சுயவலுவூட்டலுக்குள்ளான ஆசிரியரானவர் தனது அனுபவங்களைப் பயன்படுத்தி தமது செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்திச் செல்ல முடியும் என்பதோடு அதனைத் தொடர்ச்சியாகக் கைக்கொள்ளவும் முடியும். சுயவலுவூட்டலுக்குட்பட்ட ஆசிரியரிடம் அர்ப்பணிப்பு மனப்பாங்கு மேலோங்கி இருக்கும். இத்தகையதோர் செயற்பாட்டுக்கான வளங் கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப் படும்போது ஆசிரியர் அதனைச் சரியான தீர்மானத்துக்குட்படுத்தி செயற்படக் கூடியவராக விளங்குவார். சுயவலுவூட்டலுக்குட்பட்ட ஆசிரியரானவர் தன்னில் நம்பிக்கை கொண்டவராகவும் செயற்பாட்டுக்குட்படும் திறன் கொண்டவராகவும் விளங்குவார்.

சுயவலுவூட்டல் என்பது இரண்டு எண்ணப் பாடுடையது. அவையாவன, அதிகாரங்களை வழங்குதலும் அதனை நடைமுறைப் படுத்துதலும் என்பதாக உள்ளது. அதிகாரங்களை உள்வாங்குதலானது வாண்மைத்துவத்தை அதிகரிப்பதாகும். இதன் மூலம் ஆசிரியரது அந்தஸ்து வலியுறுத்தப்படும். இந்த நிலைமையானது அறிவை வழங்குவதோடு தீர்மானம் மேற்கொள்ளும் திறனையும் தொழிலை ஆற்றும் திறனையும் அடைந்து கொள்ளலையும் குறிக்கும். ஆசிரியரிடமுள்ள நடைமுறைப்படுத்தும் திறனானது தொழில்சார் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதோடு அவர்களது வேலை செய்யும் திறனை வளர்ப்பதாகவும் இருக்கும். சுயவலுவூட்டலுக்குட்பட்ட ஆசிரியரானவர் தனது உள்ளார்ந்த பலத்தை உணர்ந்தவராகவும் அதனை ஏனையவர்களிடம் இடைவினையுறவு கொள்ளும்போது பிரயோகிக் கக் கூடியவராகவும விளங்குவார் என்பதோடு தமது எண்ணங்களில் நம்பிக்கை கொண்டவராகவும் எண்ணங்களின் பெறுமானம் உணர்ந்தவராகவும் விளங்குவார்.

ஆசிரியர் வலுவூட்டலானது மூன்று பரிணாமங்களுடையது.

**உளவியல் சார்ந்த பரிமாணம்**
**செயற்பாடு சார்ந்த பரிமாணம்**
**அரசியல் ரீதியான பரிமாணம்**


உளவியல் சார்ந்த பரிமாணமானது சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன் தமது தனியாள் பெறுமதியை உணர்த்துவதாகவும் இருக்கும். இதன் மூலம் வேலை செய்வதற்கான திறன் பெற்றுக் கொள்ளப்படும்.

செயற்பாடு சார்ந்த பரிமாணமானது தகவல்கள் திரட்டுவதாகவும் வளங்களை தமது தேவைகளுக்கேற்ப பயன்படுத்தும் திறனையுடையவரை உருவாக்குவதாகவும் இருக்கும் என்பதோடு நிறுவனத்தின் நோக்கத்திற்கேற்ப வளங்களைத் திரட்டும் திறனுடையோரை உருவாக்குவதாகவும் இருக்கும்.

அரசியல் ரீதியான பரிமாணமானது அதிகாரப் பரிமாற்றம் சார்ந்ததாகும். மீள் ஒதுக்கீடு, மீள் பங்களிப்பு என்பன சார்ந்ததாக இது இருக்கும். இங்கு பங்குபற்றுதல் தொடர்பான நோக்குடையதாக இருக்கும். தனியாள்கள் அறிவைத் திரட்டுவதற்கான தேர்ச்சியை அடைவதற்கான வாய்ப்பும் உருவாகி இருக்கும் என்பதோடு கல்வியை வளர்ப்பதாகவும் இருக்கும்.

ஆசிரியரது வலுவூட்டல் செயன்முறையில் ஆபத்தை எதிர்கொள்ளும் திறனை வளர்த்தல், சுய அபிப்பிராயங்களை எதிர்கொள்ளும் திறனை வளர்த்தல், ஆசிரியர் இடையே கூட் டுணர் வை வளர்த்தல், தலைமைத் துவம்சார் அனு பவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், பிள்ளைகளின் தனியான திறன்களை இனங்கண்டு வழிப்படுத்தும் திறனைப் பெற்றுக் கொள்ளல் என்பன முக்கியமானதாகும்.

சிறப்பான வலுவூட்டல் செயன்முறைக்குள்ளான ஆசிரியர் கல்வித் தர மேம்பாட்டுக்கான தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேலிருந்து கீழான கிடையான கட்டளைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கமாட்டார் என்பதோடு தனது அனுப வங்களை ஏனையோரு டன் பகிர்ந்து கொள்வ தற்கும் தயங்கமாட்டார். அது மட்டுமன்றி கல்வி தொடர்பான எண்ணக்கருக்களை மாணவரிடையே ஊட்டுவதற்கு தன்னோடு இணைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான முறைகளைச் செயற்படுத்துபவராகவும் விளங்குவார்.



சுயவலுவூட்டல் என்பது இரண்டு எண்ணப் பாடுடையது. அவையாவன, அதிகாரங்களை வழங்குதலும் அதனை நடைமுறைப்படுத்துதலும் என்பதாக உள்ளது. அதிகாரங்களை உள்வாங்குதலானது வாண்மைத்துவத்தை அதிகரிப்பதாகும். இதன் மூலம் ஆசிரியரது அந்தஸ்து வலியுறுத்தப்படும். இந்த நிலைமையானது அறிவை வழங்குவதோடு தீர்மானம் மேற்கொள்ளும் திறனையும் தொழிலை ஆற்றும் திறனையும் அடைந்து கொள்ளலையும் குறிக்கும்.

ஆசிரியர் சுயவலுவூட்டலின் உண்மைக்குரிய பெறுமானம் யாதெனில் சிறந்த கல்விச் செயலொழுங்கை ஏற்படுத்துவதும் மாணவர்களுக்கான சிறந்த கல்வி அடைவைப் பெற்றுக் கொடுப்பதுமாகும். எதிர்காலத்துக்குரிய திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு அதற்குப் பொருத்தமான செயலொழுங்குகள் உருவாக்கப்பட்டு அதனூடாக ஆசிரியர்கள் வலுவூட்டப்பட வேண்டும்.

ஆசிரியர்களை வலுவூட்டலுக்குட்படுத்தும் செயன்முறையில் தம்மை வளவாளர்களாக இணைத்துக் கொள்வோர் சிறந்த கல்விப் புலம் சார்ந்த அடைவு மட்டமுடையவர்களாக கள அனுபவமுடையவர்களாக வசதி செய்பவராக விளங்கும் திறனுடையவராயிருத்தல் அவசியமானதாகும். எங்கோ எப்போதோ பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு நிலையுடன் ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் செயன்முறையை முன்னெடுப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

ஆரோக்கியமான கற்றல், கற்பித்தல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதனூடாக ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் செயற்பாட்டை வினைதிறனாக்கி தரமான கல்வியைச் சமூகத்துக்குப் பெற்றுக்கொடுக்க நாம் முன்வர வேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்குப்பின் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகச் செயல்பட்டு பாராட்டுப் பெறுவார்கள்.



**இடபம்**: சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதில் துணிச்சல் ஏற்படும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளைக் கண்டால் ஒதுங்கிச் சென்று விடுவது நல்லது.



**மிதுனம்**: எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நன்மை தரும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர் மூலம் உதவியும் கிடைக்கும்.



**கடகம்**: புதிய கிளைகள் ஆரம்பிக்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சியைத் தள்ளிப் போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களைச் சந்திக்க வேண்டி இருக்கும்.



**சிங்கம்**: குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாகப் பேசுவது நல்லது. உறவினர்கள், குடும்ப நண்பர்களிடம் முக்கிய விடயங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றிப் பேசுவதையும் தவிர்ப்பது நல்லது.



**கன்னி**: எதிர்பார்த்த தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் எந்த விடயத்தையும் சொல்லும்போது கவனம் தேவை. கவனம் சிதறவிடாமல் இருப்பது வெற்றிக்கு உதவும். பல வகையான யோகங்கள் ஏற்படும். மனக் குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை.



**துலாம்**: தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். தொழில் தொடர்பான காரியங்கள் வெற்றி பெறும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். வியாபாரம் தொடர்பான பிரச்சினைகளில் சாதகமான நிலையே உண்டாகும்.



**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நன்மை தீமை பற்றிக் கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியைத் திறம்படச் செய்வார்கள். போட்டிகள் மறையும். குடும்பத்தில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்புக்கூடும்.



**தனுசு**: கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பணவரத்து கூடும். மனக் குழப்பம் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும்.



**மகரம்**: திறமையாகச் செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். சின்ன விடயத்துக்குக்கூட கோபம் வரலாம் நிதானமாக இருப்பது நன்மை தரும். வேற்று மொழி பேசும் நபரால் நன்மை உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். வீண் அலைச்சல் ஏற்படும்.



**கும்பம்**: நீங்கள் நினைப்பது படி மற்றவர்கள் நடந்து கொள்ளாததால் பதற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் தொடர்பான பயணங்களால் அலைச்சல் ஏற்படலாம். வியாபார விரிவாக்கம் தொடர்பான பணிகளில் இடையூறுகள் ஏற்படலாம்.



**மீனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைச் சுமை அதிகரிப்பதுடன் அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை நீங்கும். குடும்ப உறுப்பினர்கள் மூலம் வருமானம் வரும். சொன்ன சொல்லை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள்.

## நாளை

**சித்திரை-09 செவ்வாய்க்கிழமை | 22.04.2014**

திதி:அட்டமி.பி.இ.12.38 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
பி.ப.04.59 வரை

சுபநேரம்: 10.31-12.01 வரை
இராகுகாலம்:.03.01-04.31 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து---




### மற்ற நினைவுகள்

அரசகுமாரன் கூடப் பெண்களுக்கு வழிவிட வேண்டும். கல்வியில் ஆர்வமுள்ள கிரேக்கர்கள் இந்துக்களிடம் கற்றுக் கொள்ள இந்துஸ்தானத்துக்குச் சென்றபோது அவர்களுக்குக் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. ஆனால், வாளேந்திய முகம்மதியனும் துப்பாக்கிப் பிடித்த ஆங்கிலேயனும் அணுகியபோது கதவுகள் மூடப்பட்டன. அத்தகைய விருந்தினரை வரவேற்பார்களா? 'புலி வந்தால் அது சென்றுவிடும் வரை நாங்கள் கதவை அடைத்திருப்போம்' என்னும் வார்த்தைகளை விவேகானந்தர் கையாண்டார்.

ஐக்கிய நாடுகளில் எதிர்கால உயரிய சாதனைகளைச் சாதிக்கலாமெனத் தமக்கு மிகுந்த விருப்பம் இருப்பதாக விவேகானந்தர் கூறுகிறார். ஆனால் நமது கதியும் உலகின் கதியும் இன்றைய சட்டம் இயற்றுபவர்களிடம் இல்லை; பெண்களிடமே அது உள்ளது. "உங்கள் நாட்டின் கதி மோட்சம் அதன் பெண்களைப் பொறுத்ததே" என்கிறார் அவர்.

## பூனைகளுக்கும் உல்லாச ஹோட்டல்



பாரிஸ் நகர மக்கள் அலுவகங்களுக்கும் மற்றும் வெளியே செல்லும்போதும் தங்கள் பூனைகளைப் பார்த்து கொள்ள புதுவழி வந்துள்ளது.

பாரிஸில் உள்ள வடமேற்கு 9ம் வட்டாரத்தில் பூனைகளுக்காக அரிஸ்டைட் என்ற ஆடம்பர ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது. மாநகரத்தின் முதலாவது பூனை ஹோட்டலான இதில், ஓர் இரவுக்கு 65 யூரோ வரை விலை நிர்ணயித்துள்ளது.

மொத்தம் இந்த ஹோட்டலில் 20 அறைகள் உள்ளன. இதில் சுவையான உணவுகள் மற்றும் விளையாட்டு அறைகளும் அடங்கும்.

இதுகுறித்து ஹோட்டலின் மேலாளர் கூறுகையில், நான்கு சதுர மீற்றர் அறைகள், பூனைகள் ஓடி, ஆடி விளையாடுவதற்கு ஏதுவான இடங்கள், மென்மையான தலையணைகள் மற்றும் மாடிப் படுக்கைகள், தளங்கள் போன்றவை உள்ளன - என்றார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | | 3 | 8 |
| | 2 | 8 | 1 | | | 6 | | 4 |
| 9 | | 3 | 7 | 4 | | | | |
| | | | 8 | 7 | | 3 | | |
| | | 9 | 4 | | 1 | 5 | | |
| | | 7 | | 5 | 9 | | | |
| | | | | 2 | 4 | 7 | | 9 |
| 4 | | 6 | | | 7 | 2 | 1 | |
| 3 | 7 | | | | | 8 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 2 | 4 | 3 | 9 | 1 | 5 | 8 |
| 5 | 9 | 3 | 1 | 2 | 8 | 7 | 6 | 4 |
| 4 | 1 | 8 | 5 | 7 | 6 | 3 | 9 | 2 |
| 6 | 8 | 9 | 7 | 1 | 2 | 4 | 3 | 5 |
| 3 | 2 | 4 | 8 | 9 | 5 | 6 | 1 | 7 |
| 1 | 5 | 7 | 6 | 4 | 3 | 2 | 8 | 9 |
| 8 | 7 | 1 | 3 | 5 | 4 | 9 | 2 | 6 |
| 2 | 4 | 6 | 9 | 8 | 1 | 5 | 7 | 3 |
| 9 | 3 | 5 | 2 | 6 | 7 | 8 | 4 | 1 |

# ஆண்களுக்கு ஏற்றாற்போல் பெண்கள் செயற்பட்டால்

## வாழ்வில் எப்போதும் மகிழ்ச்சியே

தட்சா. ஜோ

எங்கே பெண்கள் முன்னுக்கு வந்து விடுவார்களோ? என்று நினைக்கும் ஒரு சில ஆண்கள்தான் ஆணாதிக்கம் என்ற சொல் உயிர் பெற்று நிற்கின்றது. உரிமைக்காக குரல் கொடுத்தலில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் தினமும் இவர்களாலேயே வலுப் பெறுகின்றது.

இவற்றுக்காக ஆண்களை ஒட்டுமொத்தமாக குறை சொல்ல முடியாது. அவர்களுக்கும் அன்பு, பாசம் என எல்லா உணர்வுகளும் உள்ளன. அவர்கள் பெண்களை நேசிக்கும் போது குறித்த பெண் சந்தோசமாக இருக்கவேண்டும். மன நிம்மதியோடு வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்தப் பெண் அதற்கு ஏற்றாற் போல் நடக்காத பட்சத்திலேயே ஆண் கொடூரமாக நடக்க முற்படுகின்றான் என்பதையும் பெண்கள் இன்றிலிருந்தாவது புரிந்து கொள்ள வேண்டும்.



தற்போதைய சூழலில் பெண்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை. வைத்தியத்துறை, சட்டத்துறை, ஊடகத்துறை, நிர்வாக முகாமைத்துவம் எனஎல்லாவற்றிலும்உயர் நிலையில் பெண்கள் உள்ளனர். அவர்கள் அடக்கி வைக்கப்படவில்லை. பெண்களால் ஆண்கள் தான் அடக்கப்படுகின்றார்கள் என்று பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும்பெண்களின் போராட்டம் இன்றும் முடிவுறவில்லை. ஏதோ ஒரு தேவைக்காக பெண் ஆனவள் போராடிக் கொண்டு தான் வாழ்கின்றாள்.

ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் அவளுக்கே ஆன ஆசைகள், பாசம், பந்தம், சந்தோசம், துக்கம் என பலதிருக்கும். இதைப் புரிந்து நடந்து கொள்ளும் ஆண்களுக்கு எப்போதும் பெண்கள் மனதின் உச்சத்தில் இடம் இருக்கும். இவ்வளவு ஏன்? பெண்ணுக்கும் உயிர் உண்டு என்று கூட எண்ண மறுக்கும் ஒரு சில ஆண்கள் பற்றி என்ன சொல்வது?

அண்மைக் காலங்களில் கேள்விப்பட்டிருப்போம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெண்கள் மதிக்கப்படும் சமூகத்தில் இந்தநிலை ஏற்படக் கூடாது. பெண்கள் கேட்பது ஆண்களை விட உயர்வு இல்லை. சமவுரிமை மட்டுமே. இந்த மண்ணில் ஓர் உயிர் பிறப்பதற்கு காரணம் ஓர் பெண் என்றோ அல்லது ஒரு ஆண் என்றோ கூறிவிடமுடியாது. அங்கு இருவர் பங்கும் உள்ளது. அதையே ஏன் எல்லாவற்றிலும் பின்பற்ற முடியாமல் உள்ளது? என்பது குறித்து இரு தரப்பினரும் சிந்திக்க வேண்டும்.

பெண்களுக்கு சுதந்திரம் இல்லாத ஒரு நாட்டில் சுதந்திர தினம் என்பதைக் கொண்டாட முடியாது. இந்நிலையில் நாம் உண்மையான சுதந்திர தினத்தை எப்போது கொண்டாடப் போகிறோம் என்று முடிவு செய்வது பெண்கள் கையில் மட்டும் அல்ல ஆண்கள் கையிலும் உள்ளது....!

எமது சமுதாயத்தில் கூட ஆண்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் வாழ்ந்து கொண்டு தான் உள்ளார்கள். அவர்கள் குரலாக ஒலிப்பது ஆண்கள் எங்களை மதிக்கக் கூட வேண்டாம். எங்களைச் சிதைக்காமல் இருந்தாலே போதும் என்பது தான்.

பெரும்பாலான பெண்கள் தங்கள் திறமையைத் தாமே உணராதவர்களாக உள்ளனர். அன்பைத் தமக்குள்ளே புதைத்து விட்டு அதை வெளியே யாரிடமாவது தேடுபவர்களாகவே உள்ளனர். தனது இளமைப் பருவத்தில் பெற்றோரிடமும் திருமணத்துக்குப் பிறகு கணவனிடமும் தாயான பிறகு குழந்தைகளிடமுமாக எப்போதும் யாரையாவது அண்டியே இருப்பவளாகவே அறிகின்றோம்.

இதைப் பலர் குறையாக கூறினாலும் அது குறை அல்ல. பிறரிடம் எப்போதும் அன்பை எதிர்பார்த்து அதை அவர்கள் தந்தாலும் தராவிட்டாலும் எப்போதும் தந்து கொண்டேயிருக்கும் பெண் ஒரு போதும் குறையாக முடியாது. அவள் நிறைவாகவே உள்ளாள்.

ஒரு சராசரி பெண் என்பவள், வீட்டில் மகாராணியாகவும், அலுவலகத்தில் ராணியாகவும் இருப்பாள். இது மட்டும்அல்லாமல் பொது விடயங்களில் சேவகியாகவும், தவறைத் தட்டிக் கேட்பவளாகவும் இருப்பாள். அவளது கடமையைச் செய்துவிட்டு உரிமையைத் தட்டிக் கேட்கும் பெண்தான் தற்காலத்துக்கு ஏற்றவள் என்று சொல்லும் பெண்கள் கூட்டமும் உள்ளது.

பெண்கள் நினைக்கும் அளவுக்கு ஆண்கள் சமுதாயம் கொடூரமானதில்லை. பஸ்ஸில் கர்ப்பிணிகளை அடித்துத் தள்ளிக் கொண்டு ஏறுவதும் சில பெண்கள்தான். அதே பஸ்ஸில் கர்ப்பிணிகளுக்கு எழுந்து இடம்கொடுப்பது கொடூரமானவர்கள் எனச் சித்திரிக்கும் ஆண்கள்தான்.

எந்தவொரு ஆணாலும் முழுதாய் ஒரு பெண்ணை வெறுக்க முடியாத போதே அங்கு அவளின் வெற்றி பதிவாகின்றது.

என்னதான் நாம் ஆண்கள் என்ற உணர்வு இருந்தாலும் எல்லோர் வாழ்விலும் வானவில்லாய் வண்ணமிழைத்த பெண் இருக்கவே செய்கிறாள். என் இதயம் வளையக் கூடியது. நீ எவ்வளவு முயன்றாலும் நொறுக்க முடியாது எனக் கூறும் பெண் சில தருணங்களில் ஆண்களுக்கு வெறும் பட்சியாகவே தெரிகிறாள். ஆனால் உண்மையில் அவள் சிறகு விரித்த பறவை. இதைத் தெரிந்து வைத்திருக்கும் ஆண்களுக்கு தலை வணங்கத்தான் வேண்டும்.

பெரும்பாலும் ஆணின் முதல் காதலியாக தாயோ அல்லது ஒரு பெண் ஆசிரியரோ தான் இருக்க முடியும். பிறப்பிலிருந்து இறக்கும்வரை பெண் துணை அனைவருக்கும் தேவை. அது பெண்களுக்கும் கூடத் தேவை.

> ஆண்களை ஒட்டு மொத்தமாக குறை சொல்ல முடியாது. அவர்களுக்கும் அன்பு, பாசம் என எல்லா உணர்வுகளும் உள்ளன. அவர்கள் பெண்களை நேசிக்கும் போது குறித்த பெண் சந்தோசமாக இருக்கவேண்டும். மன நிம்மதியோடுவாழ வேண் டும் என்று நினைக்கி றார்கள்.

---

# புதிதாக திருமணம் செய்து மாமியார் வீட்டுக்குச் செல்லும் பெண்களுக்கு சில தகவல்கள்

மிது

உரலுக்கு ஒரு பக்கம் அடி என்றால் மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடி என்று பழமொழி சொல்வார்கள். பெண்களுக்கு இந்த சொல்வாடை நிச்சயம் பொருந்தும்.

புதிதாக மணம் முடித்து கணவன் வீட்டில் காலெடுத்து வைக்கும் ஒவ்வொரு பெண்ணும் சந்திக்கும் படிகள், ஏச்சு பேச்சுகள் அவர்களின் மனதை மிகவும் துடிக்க வைத்துவிடும். அப்படிப்பட்ட நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதற்கு இங்கே சில தகவல்கள்.

இந்த வீட்டில் நான்தான் எல்லா வேலையும் பார்க்க வேண்டி இருக்கின்றது. வேலைக்குப் போனால் வீட்டு வேலையைப் பார்க்கக் கூடாதா? பார்த்தா குறைஞ்சு போகுமோ வேலைக்குப் போகும் மருமகள் ஏதோ அலங்காரம் சினிமாவுக்குச் சென்று வருவதைப் போல் நினைத்து இப்படிப் பேசும் மாமிமார்கள் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழலை நீங்கள் சந்தித்தால் நான் தினமும் அலுவலகம் போய்விட்டு இத்தனை மணிக்குத்தான் திரும்புவேன். நான் வந்தபிறகு இந்தெந்த வேலைகளை கவனித்துக் கொள்கிறேன் என்று முன்கூட்டியே சொல்லி விடுங்கள்.

'உங்கப்பா நல்லா இருக்கும் போதே உனக்கு வேணும் என்பதைக் கேட்டு வாங்கிட்டு வரவேண்டும். பின்னர் உங்கள் அண்ணன் மாரிடம் எதிர்பார்த்துக்கிட்டு நிற்க முடியாது பாரு...

இந்த வார்த்தைச் சாட்டைக்கு இப்படி பதிலளியுங்கள். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எங்கள் அப்பா,அம்மாவுக்குத் தெரியும். நான் போய் கேட்க வேண்டியதில்லை. கேட்கவும் மாட்டேன். எனக்கு தேவை என்று தெரிந்தால் அவர்களே தேடி வந்து செய்வார்கள்.

உன் பெண்டாட்டி வரவர என்னை மதிக்கிறதே இல்லை. நான் சொன்னா காதிலேயே வாங்காமல் போறா. அலுவலகத்துக்கு மிக அலங்காரம் செய்து போகின்றாள்?

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆரம்பத்திலேயே அங்களின் உண்மை நிலையைக் கணவரிடம் விளக்கி விடுவதுதான் சிறந்த வழி. மாமியாரின் கோபத்துக்கான காரணத்தை தெரிந்து பேசித் தீர்க்க முடியுமா? என்றும் முயற்சி செய்யுங்கள்.

இவள் காசை கன்னாபின்னான்னு செலவழிச்சு கரியாக்கின்றாள். திள் என்று ஆயிரம் இரண்டாயிரத்துக்கு புதுப்புடைவை எடுத்துக்கிறா. நகைநட்டு வாங்கிக் குவிக்கிறா. என் மகன் பாவம் வாயில்லாப்பூச்சி. எதையும் கேட்கிறதில்லை எல்லோர் வீட்டு மாமிமார்களும் கூறும் பொதுவான முறைப்பாடு இது.

சிக்கனம் தேவைதான். அதற்காக ஆடையில் சிக்கனம் பிடிக்கலாமா? தேவைக்குத்தான் வாங்கி இருக்கிறேன். என்று சொல்லுங்கள். அடுத்து விசேட நாள்களில் மாமியார், மச்சாளும் (கடமைக்காக அல்லாமல் அன்புடன்) ஒரு புடைவை எடுத்துக் கொடுங்கள். பிரச்சினை வந்தவழி தெரியாமல் ஓடிப் போய்விடும்.

பெரிய இடத்து வீட்டிலே இருந்து வந்தவளே பாத்திரம் கழுவுறாள். எல்லா வேலையும் பார்க்கின்றாள்? இவளுக்கென்ன? மூத்த மருமகள் கேட்ட அடுத்த மாசமே என் மகனுக்காக பைக் வாங்கித் தந்துட்டா. உன்கிட்ட கேட்டாலும் கிடைக்குமா, உங்கப்பா நிலமைதான் ஊருக்கே தெரியுமே?

இப்படிப் பேசுவது சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதை கணவனிடம் நேரடியாகச் சொல்லி விடுங்கள். அதன்பிறகு ஓரளவாவது இந்த மாதிரியான ஒப்பீடு குறையும்.

எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் எங்கம்மாவை அப்படிப் பேசாதே' என்று சொல்ல வாரிசு வளரும் வரை நீங்களாகத்தான் சமாளிக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்ளுங்கள் புதுப்பெண்களே!



## குடும்பப் பெண் காயம்

தென்மராட்சி, ஏப். 21.

வீடு புகுந்து தாக்கியதில் குடும்பப் பெண் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவில் மேற்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீஆனந்தன் இராஜேஸ்வரி (வயது- 46) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

## சமரசம் செய்ய முற்பட்ட மைத்துனி தாக்கப்பட்டார்

அளவெட்டி, ஏப்.21

மது போதையில் வந்த கணவன் தனது மனைவியுடன் தகராறில் ஈடுபட்டிருந்த வேளையில் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத மனைவியின் சகோதரி (அக்கா) சமரசம் செய்ய முற்பட்ட போது சகோதரியின் கணவன் அவரை நீப்பைக் கட்டையால் தாக்கியுள்ளார்.

இதனால் அக்கா தலையில் பலத்த காயங்களுக்குள்ளாகினார். அதை அடுத்து அக்காவை தாக்கிய தனது கணவனை தொடர்ந்தும் தாக்க விடாது தடுத்த மனைவியின் கையில் கடித்துக் காயத்தை ஏற்படுத்தியுள்ளார் கணவன்.

இது தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸில் முறையிட்ட சகோதரிகள் இருவரையும் கணவனையும் பொலிஸார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்களான இராசரத்தினம் தயாபரன் கணவன் (வயது- 35). இவரின் மனைவியான தயாபரன் ஜெசிகலா (வயது- 33). சகோதரியான புவனேந்திரன் சசிகலா (வயது-36) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் மதவடி அரசடி காங்கேசன் துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சகோதரியான சசிகலா சகோதரி மானிப்பாயில் வசிப்பதாகவும் இவர்கள் மீள்குடியேற்றம் காரணமாக காங்கேசன்துறை மதவடிப் பகுதியில்தமதுகாணியை துப்புரவு செய் வதற்காகவந்திருந்தவேளையிலே குடும்பத் தகராறு ஏற்பட்டது என்றும் சகோதரிக்கு உதவி செய்ய வந்து இந்த நிலைக்கு உள்ளானேன் எனத் தெரிவித்தார்.

கணவனான தயாபரன் சிகிச்சையின் பின் விசாரணைக்காக தெல்லிப்பழை பொலிஸார் அழைத்துச் சென்றனர் எனவும் அவரின் மனைவி கூறினார். (வ-36)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும்

சேமிப்புக் கணக்கின் உறுப்பினருமான

### கதிர்காமு உமாமகேஸ்வரன்

[உரிமையாளர்-கதிர் கராஜ், சாவகச்சேரி]

அவர்கள் 18.04.2014ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் (சி/7872) (7.8.3)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் மணிவாசகம் (செட்டி)



புங்குடுதீவு, 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் யோகர்சுவாமி வீதியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் மணிவாசகம் 17.04.2014 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-பரமேஸ்வரி தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரியின் அன்புக்கணவரும் பத்மாவதி(கனடா), பவளாம்பாள், மகேஸ்வரி (கனடா), தியாகராசா(சட்டத்தரணி), காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் மாயாவதி, பேரின்பமூர்த்தி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான வரலட்சுமி, சடாச்சரதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் தனபாலசிங்கம், சிவராசமதி, செல்வராணி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரகாஷன்(பிரகாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- ஆறுகால்மடம்), பிரியந்தினி(கனடா), கீர்த்தீபா(ஆசிரியை-யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), சதீஸன்(பிரகாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்-ஆறுகால்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன் (கனடா), ராஜபாலசிங்கம்(ஆசிரியர்-கிளி.செல்லியாதீவு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சானுஜனின் (கனடா) பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை யோகர் சுவாமிகள் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

131/2, பருத்தித்துறை வீதி, நல்லூர். 077 071 1238 (47035)(3.8.4)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம்

(ஆனந்தா மோட்டர் வேக்ஸ் உரிமையாளர்-உயிலங்குளம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம்(ஆனந்தன்) 16.04.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

04, சின்னாலங்கண்டு லேன், அரியாலை. (47030)(3.6.4)

## இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.21

முதலாம் தவணை விடுமுறை முடிந்து இரண்டாம்தவணைக்காக நாட்டிலுள்ள பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் தவணைக்கான பாடசாலைக் காலம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 8 ஆம் திகதியுடன் முதலாம் தவணைக்காலம் முடிவடைந்து விடுமுறை விடப்பட்டிருந்தது. இதனையடுத்து இன்று திங்கட்கிழமை நாட்டிலுள்ளபாடசாலைகள் அனைத்தும் இரண்டாம்தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-426)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

திருமதி சாந்தி சிவஞானசுந்தரம்



கடந்த 22.03.2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்னை **திருமதி சாந்தி சிவஞானசுந்தரம்** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தியாகி அறக்கொடை மண்டபத்தில்** (TCT Hall) நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து, அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்னையின் மறைவுச்செய்தி கேட்டு எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

681/2, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

அன்புடன் நந்தி குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் இராசதுரை சரஸ்வதி



தோற்றம் 15★06★1938 மறைவு 22★03★2014

கடந்த 22.03.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவிஅமரர் இராசதுரை சரஸ்வதி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
201, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர்

திதி : சப்தமி (21.04.2014)

அன்னை மடியில் 09.11.1920

ஆண்டவன் அடியில் 09.05.1988

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

தந்தையே! உந்தன் பாதங்களில் வாழ்ந்ததற்கு
பெருந்தவம் செய்தோம் நாங்கள் – இன்றுடன்
இருபத்தாறு ஆண்டுகள் தாங்களும்
வருடம் ஒன்றாய் அம்மாவும் வானுறையும் தெய்வங்களாய்
எம்மை ஆசீர்வதித்து வரங்கள் தந்தீர்கள்
எம் மூச்சோடு கலந்த உயிர்கள் நீங்கள்!
தந்தையே! எமக்கு ஒளிதந்த சூரியனே!
தந்தையே! உங்கள் மடியினில் நாங்கள்
சிந்தை குளிர கற்ற பாடங்களும் – உயர்
பந்த பாசங்களின் பரம்பரைக்கு – உயரிய
வழியெல்லாம் ஒளிகாட்டி வெற்றியெனும்
வழித்தடங்களாய் பாடம் புகட்டுகின்றன!

பாலாவோடை, இணுவில்.
(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(47031)(7.6)

# வெளிநாட்டு செய்தியாளருக்கான நுழைவிசைவுக்குக் கால எல்லை

## ஆராய்கிறது அரசு என்கிறார் கெஹலிய

கொழும்பு,ஏப்.21
வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கையில் தங்கியிருப்பதற்கான கால எல்லையை வரையறுப்பது குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருகிறது என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



கெஹலிய
ரம்புக்வெல

எந்தவொரு வெளிநாட்டவரையும் ஊடகவியலாளர் என்பதற்காக இலங்கையில் நீண்ட காலம் தங்க அனுமதிப்பது நியாயமற்றது என்று அவர் தெரிவித்தார்.

பிபிசி செய்தியாளர் சாள்ஸ் ஹவிலன்ட், இலங்கையில் ஐந்து ஆண்டுகள் தங்கியுள்ளார். அவருக்கு நாம் மேலும் 3 மாதங்கள் நுழைவிசைவு விசா நீடிப்பு வழங்கியுள்ளோம் என்று அவர் தெரிவித்தார். அவருக்கு மேலும் நுழை விசைவு நீடிப்பு வழங்குவது நியாயமில்லை.

இந்த விடயத்தில் இலங்கை அரசு இன்னமும் இறுதியான முடிவை எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

மூன்று மாதங்களுக்குப் பின்னர், அவரது நுழைவிசைவு நீடிக்கப்பட வாய்ப்பில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கடும் காற்றால் 60 வீடுகள் சேதம்

கொழும்பு,ஏப்.21
அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல பிரதேசங்களை ஊடறுத்து வீசிய காற்றினால் 60 வீடுகள் சேதமடைந்துள்ளன.

சூரியவெவ, அகுனுகொல, பெலஸ்ஸ மற்றும் தங்காலை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 9 கிராம சேவகர் பிரிவுகளுக்கூடாக காற்று ஊடறுத்து வீசியுள்ளது என்று அம்பாந்தோட்டை மாவட்டத்தின் இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஹர்ஷ ரவீந்திர குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை வீசிய காற்றினால் சேதமடைந்த வீடுகளின் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)



உயிர்ப்பு ஞாயிறு தினமாகிய நேற்று கிறிஸ்தவ மக்கள் அனைவரும் கிறிஸ்துவின் உயிர்ப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலயங்களில் திருப்பலி பூசைகளும் உயிர்த்த இயேசுவின் திருச்சொரூப பவனிகளும் இடம்பெற்றன. பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த இயேசுவின் பவனி. (ஒ-135)

## திருட்டில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு,ஏப்.21
வீடுகளில் நுழைந்து திருடிய சந்தேகத்தில் ஒருவர் நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 2012 ஆம் ஆண்டு வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒருவர் என்று தெரியவந்துள்ளது. இந்த நபரிடம் இருந்து குளிர் சாதனப் பெட்டி உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## மும்மொழிக் கொள்கை பஸ்களில் புறக்கணிப்பு

### அரச மொழிகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.21
போக்குவரத்துச் சபை பஸ்களில் மும்மொழிக் கொள்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று அரச மொழிகள் ஆணைக்குழு குற்றச்சாட்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நீதிபதியின் ஊடாக தெளிவூட்டப்பட்டுள்ளதை அடுத்து அதற்கான அறிக்கையை வழங்குவதற்கு போக்குவரத்து சபைக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்தார்.

அரச மொழிக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்த தவறும் பட்சத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (ச)

## கொஞ்சக் கதையும் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### பழக்கம் வழக்கமாகிவிடலாம்

மனிதன் பேச்சினாலும், எழுத்தினாலும் தனது கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் ஒரு கருவியே மொழியாகும். கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வின் வெளிப்பாடுகளே மொழி வடிவமாயின எனப்படுகிறது. ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அந்த மொழியின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டே பெரும்பாலும் அளவிடப்படுகிறது. மொழியானது எந்த அளவுக்கு சமுதாயப் பணிகளில் பங்கு பெறுகிறது என்பதைப் பொறுத்தே அதன் உண்மையான வளர்ச்சி வெளிப்படுகிறது. ஒரு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலப்பது என்பது இயல்பானது. ஓர் இனத்தவரது மொழியை அழிப்பதென்பது உரியவர்கள் இடம் கொடுத்தாலன்றி ஆகாது.

இலங்கையின் தேசிய மொழிகளில் தமிழும் ஒன்று. பேச்சிலும், எழுத்திலும் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் உரிமை தமிழருக்கு உள்ளது. ஆயினும் தமிழ் மொழிப் பிரயோகத்தில் தமிழர் தம் பங்கு என்பது சிந்தனைக்குரியதே. ஆங்கிலம் சர்வதேச மொழி என்பதுடன் உலகியலைத் தெரிந்து கொள்ளவும் இந்த மொழியறிவு மிகமிக அவசியமாகிறது. இதற்காக தமிழ்மொழி ஓரங்கட்டப்படுவதுதான் வருத்தமளிக்கிறது. படிவங்கள் முன்மொழிகளிலிருப்பினும் எம்மவர்கள் ஆங்கிலத்திலே பூர்த்தி செய்வார்கள். இவற்றைப் பரிசீலிப்பவர்கள் தமிழ் தெரியாதவர்களாயின் தாம் பாதிக்கப்படலாம் எனும் நியாயபூர்வமான பய உணர்வுதான் காரணம்.

ஆங்கிலத்தில் கையொப்பமிட்டு வந்த தன்னை தாய் மொழியில் ஒப்பமிடத் தூண்டியாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவே எனத் தெரிவித்திருக்கும் அரச அதிகாரி ஒருவர் தமிழ் மாணவர்கள் தமிழில் கையொப்பமிடப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என விழா ஒன்றில் தெரிவித்திருந்தார். இலங்கை ரூபா நோட்டுகளில் நிதி அமைச்சரதும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரதும் கையொப்பப் பதிவுகள், அவர்களது தாய்மொழியிலே உள்ளன. நாங்களும் பழக்கப்படுத்திக் கொண்டதை வழக்கப்படுத்தாது கையொப்பங்களையாவது தாய் மொழியிலிட்டு எம்மைப் பெருமைப்படுத்துவோமே.

## மக்களை வெளியேற்ற விரைவில் நடவடிக்கை

### அரச காணிகளில் தங்கியிருப்போருக்கு எச்சரிக்கை என்கிறது காணி அமைச்சு

அரச காணிகளில் பலவந்தமாக தங்கியிருப்போரை வெளியேற்றுவதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச காணிகளில் பலவந்தமாக தங்கியிருப்போர் தொடர்பில் ஆயிரத்துக்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் குறிப்பிட்டார். பலவந்தமாக தங்கியிருப்போரை அங்கிருந்து வெளியேறுமாறு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இதுவரை குறித்த இடங்களில் இருந்து வெளியேறாதவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அரச காணிகளை கைப்பற்றியிருப்போர் தொடர்பில் கிராமசேவை அதிகாரிகள் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஹெரோயின் வைத்திருந்த இரண்டு பேர் மாட்டினர்

இரண்டு வேறு இடங்களில் ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கிரான்பாஸ் பகுதியில் 2 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான ஒருவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

## கிராம சேவகர்களுக்கு தெளிவூட்டும் செயற்றிட்டம்

### கிராமப்புற மக்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்து

கொழும்பு,ஏப்.21
கிராமிய பிரதேசங்களில் வாழும் அடிமட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அப்பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை காத்திரமானதாக முன்னெடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் 14,000 கிராம சேவை அதிகாரிகளுக்கும் தெளிவூட்டும் செயற்றிட்டங்களை அரசு முன்னெடுக்கவுள்ளது.

அதற்கிணங்க நாட்டின் அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டங்கள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதுடன் பிரதேச செயலகப் பிரிவுகளெங்கும் கிராம சேவகர்கள் ஒன்று கூட்டப்பட்டு திட்டம் பற்றி அவர்களுக்கு தெளிவூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

> கிராம சேவகர்கள் ஒன்று கூட்டப்பட்டு திட்டம் பற்றி அவர்களுக்கு தெளிவூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நாடளாவிய ரீதியில் பெருமளவிலான கிராம சேவகர் வெற்றிடங்கள் கடந்த காலங்களில் நிலவிய போதும் அண்மையில் அரசு 4000 புதிய கிராம சேவகர் நியமனங்களை வழங்கி வெற்றிடங்களை நிரப்பியுள்ளது. புதிய கிராம சேவகர்களுக்கான மூன்று மாத பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து இந்த செயற்றிட்டம் தொடர்பாக அவர்களுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சு கூறியுள்ளது.

கிராமிய பிரதேசங்களை நகர்ப்புறங்களைப் போன்று சகல வசதிகளுடன் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியினது நோக்கமாகும். அதனால் கிராமிய மட்ட மக்களுக்கு தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் அந்தப் பிரதேச உட்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்துவதும் இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



யாழ். நகரில் பண்ணையில் யாழ்.சிறைச்சாலைக்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டட நிர்மாணப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. அதனை விடச் சிறைச்சாலை வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பு மதில்களும் அமைக்கப்பட்டுள்ளன. (வ-17)

# திருத்த வேலைகளுக்கான கொடுப்பனவு இன்னும் இல்லை

## புதுக்குடியிருப்பு மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஏப்.21

புதுக்குடியிருப்புப் பகுதியில் பகுதித்திருத்த வேலைகளை மேற்கொண்டவர்களுக்கு அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லை.

தாங்கள் எந்த பயனாளிகள் பட்டியலிலும் தெரிவு செய்யப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

இறுதிப்போரில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் மீள்குடியேறியுள்ள குறிப்பிட்ட சில குடும்பங்கள் பகுதி சேதம் அடைந் திருந்த தங்களுடைய வீடுகளை அப்போது வங்கிக் கடன் மற்றும் ஏனைய கடன்களைப் பெற்று திருத்தி உள்ளனர்.

வீடுகளின்றி இருந்த குடும்பங்களுக்கு புதிய வீடுகளும் பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு மீள்புனர மைப்புச் செய்வதற்கும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து அவற்றை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் பகுதி சேதமடைந்த தாமாக புனரமைத்த சுமார் 29 பயனாளிகள் குறித்த எந்த வீட்டுத்திட்ட பட்டியலுக்குள்ளும் உள்வாங்கப்படவில்லை என்றும் தாங்கள் வீடுகள் உடனடியாகத் தேவையாக இருந்தமையாலும் தங்க ளுடைய ஏற்கனவே இருந்த வீடுகளை பகுதியளவில் குறைந்த செலவிலே செய்யக் கூடியதாக இருந்தமையாலும் அவற்றைப் புனரமைத்து இருக்கின் றோம்.

எனவே தங்களையும் குறித்த வீட்டுத் திட்ட பயனாளிகளுக்குள் உள்வாங்கி பகுதி திருத்தக் கொடுப்பனவை பெற்றுத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப் பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ-55)


### வீடு வாடகைக்கு

20 1/6,நாவலர் றோட்டில் கஸ்தூரியார் றோட்டுக்கு அருகில் கற்சுமி கல்வி நிலையம் முன்பாக 3,000 சதுர அடியில் எல்லா வசதிகளுடன் 4 அறை கள் கொண்ட 6 பரப்புடன் வீடு வாடகைக் குண்டு. நிறுவனங்களோ அல்லது குடும்பத்தினரோ விரும்பத்தக்கது.

T.P: 021 222 8748 , 076 669 5770, 076 6041583, 077 3405978, 021 2227893



(46979)(3.6.4)


### மரண அறிவித்தல்

#### ருபரத்தினேஸ்வரி சிவயோகநாதன்



மாதகல் விபுலானந்த வீதியைப் பிறப்பிட மாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ருபரத்தினேஸ்வரி சிவயோகநாதன் (முன்னாள் கணக்காளர் M.P.C.S சங்கானை) 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை இரவு நெதர்லாந்தில் காலமாகி விட்டார்.

அன்னார் இரத்தினசபாபதி (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்)- காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்புமகளும் வரியப்புலம் சுன்னாகத்தைச்சேர்ந்த கைலாயபிள்ளை- பகவதி தம்பதியரின் மருமகளும் நடராஜா (ஓய்வு பெற்ற கிராம உத்தி யோகத்தர் சமாதானநீதிவான்) - புஸ்கலாதேவி தம்பதியரின் அன்புமருமகளும் சிவயோகநாதனின் பாசமிகு மனைவியும் பரமேஸ்வரன் (ஜேர்மனி), விஜயேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரியும் இராமதாஸ் (பிரான்ஸ்), சோமேசன், விமலாதேவி, புஸ்கலாதேவி (லண்டன்), தங்கேஸ்வரி (பிரான்ஸ்), சிறிதரன் (பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி), தனஞ்செயன் (வசாவிளான் கனிஷ்ட வித்தியாலயம் உரும்பிராய்), சுயாதா (ஜேர்மனி), சாந்தகுமார் (கனடா), பவித்திரா (பிரதேச சபை மானிப்பாய்), குகன் (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் மைத்துனியும் வசந்தராணி (பிரான்ஸ்), சுலோசனா, மதியழகன், ஜெயக்குமார் (லண்டன்), கௌரீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயமதி, சுயாதா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

திருவரங்கம், சுன்னாகம் கிழக்கு

தகவல்: குடும்பத்தினர்
S.S.நடராசா (ஓய்வு பெற்ற கிராம சேவகர்)
021 3214365, 077 1298224

### மரண அறிவித்தல்

#### திருமதி சிவக்கொழுந்து பொன்னையா



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கலவெட்டித்திடல் புளியம்பொக்கணையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து பொன்னையா (19.04.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற கந்தசாமியின் சிறிய தாயும், நாகராசா, காலஞ்சென்ற சிவராசா மற் றும் அரசம்மா, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தேவராசா, சுந்தரேஸ்வரி, சந்திரேஸ்வரி, யோகராசா, விஜயராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பாக்கியத்தின் (வவுனியா) பாசமிகு உடன்பிறப்பும், மகேஸ்வரி காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அருந்தவமலர், வேலுப்பிள்ளை, தவமணிதேவி, குணராச சிங்கம் சந்திரமோகன், யோகவதனி, குபேந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக்னக்கிரியைக்காக நெடுமூட்டை கலவெட்டித்திடல் புளியம் பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராசா (மகன்)

# மாணவ சமுதாயத்துக்கு பயனாக நினைவாலயம்

யாழ்ப்பாணம், ஏப். 21

வலி.தென்மேற்கு பிரதேச மாணவ சமுதாயம் பயன் பெறக் கூடியதாக பண்டத்தரிப்பு பிரான்பற்றில் "அன்னபாக்கி யம் நினைவாலயம்" உருவாக்கப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் நடராசா விஜேந் திரனின் நிதி பங்களிப்பில் மிக அழகான நினைவாலயம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தரம் 6 முதல் ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை மாணவர்கள் பயன்பெறக் கூடியதாக கணினி, ஆங்கிலம், சிங்களம் என்பன இலவசமாகக் கற்பிக்கப்படவுள்ளன.

கற்பிக்கப்படும் வளவாளர்களுக்கு மாதாந்தச் செலவு லண்டனில் இருந்து அனுப்பிவைக் கப்படும். சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் அமரர் நட ராஜா அன்னபாக்கியம் நினைவாலயம் நவீன வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நினைவாலயத்தின் முகாமைத்துவப் பணிப்பாள ராக லண்டனில் வசிக்கும் நட ராஜா விஜேந்திரனும், கல்வி இணைப்பாளராக நடராஜா சுரேஸ் இந்திரனும் பணியாற்றுவர்.

அமரர் திருமதி ந.அன்னபாக்கியம் வாழும் காலங்களில் சமய, சமூக பணிகளில் ஈடு பட்டு, பின்னர் வவுனியாவில் அமரரானவர் என்பது குறிப் பிடத்தக்கது. (வ-50)

### மரண அறிவித்தல்

#### திருமதி கனகம்மா செல்வரட்ணம்

(ஓய்வுபெற்ற தாதி)



துரைராசா வீதி, வண்ணார் பண்ணையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா செல்வரட்ணம் 19.04.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை-முத்தம்மா தம்பதியரின் மகளும், செல்வரட்ணத்தின் (பயில்வான்) அன்பு மனைவியும், அநுரா (லண்டன்), மயூரன் (லண்டன்), மீரா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தாயும், சத்திய மூர்த்தி (லண்டன்), உஷா (லண்டன்),விஜயகுமார்(பெல்ஜியம்)ஆகியோரின்மாமியும்,சஜிதா(லண்டன்),சுமித்தா (லண்டன்), சந்தோஷ் (லண்டன்), அர்ச்சயா (லண்டன்), விதுரன் (லண்டன்), ரஜீவன் (பெல்ஜியம்), ராகில் (பெல்ஜியம்), வர்சா (பெல்ஜியம்) ஆகியோரின் பேர்த்தியும், பகவதி (கனடா), மகேஸ்வரி, கமலா சுப்பிரமணியம் (கொலண்ட்) ஆகியோரின் சகோதரியும், லீலாவதி, வாமதேவன், துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2.00 மணியள வில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (47840) (46)

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 021 300 2096

### மரண அறிவித்தல்

#### சூசைப்பிள்ளை ஜோர்ஜ் ஜெயநாதன்



கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும், 119, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை ஜோர்ஜ் ஜெயநாதன் (ராசா) 19.04.2014 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியல் பிள்ளை சூசைப்பிள்ளை (ராஜ்மரினா ரெக்சைல் உரிமையாளர்) மற்றும் இன்னேசியாப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற ஞானபிரகாசம் - ராஜகுமாரி தம்பதி யரின் அன்புமருமகனும் ஞானநந்தினியின் அன்புக்கணவரும் ஜொலிற்றா, ஜெனிஸ்ரனின் பாசமிகு தந்தையும் ரஜ்குமாரின் அன்புமாமனும் அன்ரன், ரஞ்சன் (லண்டன்), சுகந்தி (லண்டன்), செல்வன் (லண்டன்), நிஞ்சன் (கனடா) காலஞ்சென்ற சுவர்ணா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தி, குணா (கனடா), பவா (கனடா), சோனியா (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.04.2014) திங்கட்கிழமை அவரின் இல்லத்திலிருந்து பி.ப. 3 மணியளவில் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நடைபெறும் திருப்பலியை தொடர்ந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

119, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
ராஜ்குமார் (மருமகன்)

# தலபுராண முற்றோதல்

நாகர்கோவில், ஏப். 21

நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆலயத்தின் "தலபுராணம்" முற்றோதல் இடம்பெறும். பௌராணிகர்கள், ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ)



### உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் காட்போட் ஆகியவற்றை உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 077 879 0581 (47944) (6.4)


### மரண அறிவித்தல்

#### சுப்பிரமணியம் வரதகுமார்



அம்பன் குடத்தனையை பிறப்பிடமாகவும், 579, கொக்காவில் வீதி, துனுக்காயை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதகுமார் 18.04.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்-அரியமலர் தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற செல்லப்பா (குஞ்சுராசா) மற்றும் -கமலாதேவி தம்பதியரின் அருமை மருமகனும், சுஜிவாவின் (ஆதார வைத்தியசாலை- மல்லாவி) அன்புக் கணவரும், வைஸ்ணவி, கார்த்திகன், மேகலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தகுமாரி, வசந்தகுமார், வனிதகுமார், வற்சலா, காலஞ்சென்ற வனிதகுரு மற்றும் வரதகுலம், வசந்தகுகன், வசந்தலா ஆகியோரின் அருமை சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட் கிழமை ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆலங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

579, கொக்காவில் வீதி, துனுக்காய். (47036)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## மீளாய்வு நீடிக்கப்படாது

### 25 இற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்கிறார் புஸ்பகுமார

கொழும்பு, ஏப்.21
2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வுக்கு உட்படுத்தும் விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிக்கப்படமாட்டாது என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.என்.எம்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.
எனவே இந்த விண்ணப்பங்களை அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.
பாடசாலைகளின் பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் ஊடாகவும், தனிப்பட்டி பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியிலும் அந்த விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று அவர் கூறினார். (ச-22)

## ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு புதிதாக 13 விமானங்கள்

### *அதி சொகுசு வசதிகளுடன்*

கொழும்பு, ஏப்.21
புதிதாக 13 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தீர்மானித்துள்ளது.
இந்தத் தீர்மானத்துக்கு அமைய 'எயார் பஸ் ஏ.330 -300' ரகத்தைச் சேர்ந்த 6 விமானங்களும், 'எயார் பஸ் ஏ.350-900' வர்க்கத்தைச் சேர்ந்த 7 விமானங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் இந்த ஆண்டின் ஒக்ரோபர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
இந்தப் புதிய விமானங்கள் அதிசொகுசு வசதி களுடனான இருக்கைகள், நவீன தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களைக் கொண்டவைகளாகக் காணப்படும் என்று ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-22)

## எலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை வேண்டும்

### கொழும்பில் மஞ்சள் காமாலை நோயால் 34 பேர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.21
கொழும்பில் எலிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதனால் அதனை கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்பு மாநகர சபையின் சுகாதார தலைமை மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.
எமது கூடியளவான தொழிலாளர்கள் தற்போது டெங்கு ஒழிப்பு திட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் எம்மால் இதனை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.
எனினும் எலிகளை ஒழிப்பதற்கான திட்டத்தை மேற்கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.
கோட்டை, துறைமுகம், பொரளை மற்றும் மருதானை ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுகாதாரமற்ற உணவகம், சரக்கு கப்பல் ஆகிய இடங்களில் எலிகளின் இனப்பெருக்கம் அதிகமாக காணப்படுகின்றது.
எலிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவில்லையாயின் எலிகளினால் ஏற்படும் மஞ்சள் காமாலை, எலிக்காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.
இந்த வருடத்தில் கொழும்பில் மாத்திரம் மஞ்சள் காமாலை நோயால் 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் பதிவாகியுள்ளன.
இந்த நோயினால் நாட்டில் மார்ச் மாதத்தில் 708 பேரும், ஏப்ரல் மாதத்தில் 221 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.
எலிகளால் ஏற்படும் தொற்று நோயினால் 2008 ஆம் ஆண்டில் 6000 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)




கொழும்பில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் தரிப்பிடத்தில் கழிவுப் பொருள்கள் அதிகம் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. மாநகர சபையின் சுகாதார தொழிலாளிகள் பலர் கட்மையில் அமர்த்தப்பட்டும் கொழும்பு பஸ் தரிப்பிடம் குப்பை நிறைந்த இடமாக காணப்படுகின்றது.

# இ.போ.சபைக்கு ரூ.3.5 பில்.நட்டம்

### மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஏப்.21
இலங்கைப் போக்குவரத்து சபைக்கு கடந்த ஆண்டில் 3.5 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;
போக்குவரத்துச் சபை சேவைகளை வழங்குவதில் காட்டும் குறைந்த செயற்றிறனே அதன் நட்ட நிலைமை உச்சமடைவதற்குக் காரணமாகியுள்ளது.
செயற்றிறனற்ற தன்மையை விடும் திட்டமொன்றைக் கட்டமைப்பது குறித்து இலங்கைப் போக்குவரத்துச் சபை உடனடிக் • கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.
2012 ஆம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் 7,756 பஸ்கள் இருந்துள்ளன. 2013 ஆம் ஆண்டில் 7,607 பஸ்கள் இருந்துள்ளன.
2012 ஆம் ஆண்டில் நாளொன்றில் சாதாரணமாக பயணச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 4,314 பஸ் களுடன் ஒப்பிடும்போது அந்த எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டில் 4,37 3 பஸ்களாக அதிகரித்துள்ளன- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)

## சர்வதேச பாராட்டைப் பெற்ற நூல்கள் தமிழ், சிங்கள மொழிகளில் பதிப்பு

### தேசிய மொழிகள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 21
சர்வதேச பாராட்டுக்களைப் பெற்றுள்ள பலதரப்பட்ட துறைகளைச் சார்ந்த ஆக்கங்களைக் கொண்டுள்ள நூல்களை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மாற்றிப் பதிக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குகளை தேசிய மொழிகள் மற்றும் இன ஒருமைப்பாடுகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.
இலக்கிய உலகின் அபூர்வமான அனுபவ ஆக்கங்கள் சம்பந்தமான சிறப்பான அனுபவ நுகர்ச்சியை மற்றும் அறிவை இந்த நாட்டின் வாசகர்களுக்கு பெற்றுத் தருவதே இந்தச் செயற்றிட்டத்தின் பிரதானமான குறிக்கோளாகும். அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் உத்தரவுக்கு அமைய, தேசிய மொழிகள் திணைக்களம் இக்கருமத்தின் முக்கிய பொறுப்பை ஏற்றுள்ளது.
பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், புத்திஜீவிகள், புகழ்பெற்ற எழுத்தாளர்கள் மற்றும் திறனாய்வு மூத்த ஊடகவியலாளர்களைக் கொண்டுள்ள குழு ஒன்றினால் மொழி மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ள நூல்களின் ஆக்கங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.
சிங்கள மற்றும் தமிழ் மொழி களில் ஆக்கப்பட்டுள்ள உயர்வான இலக்கியப் படைப்புக்கள் சிலவற்றையும் ஆங்கிலம் மற்றும் வேறும் சில மொழிகளுக்கு மொழி பெயர்ப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## மழைக்குருவி கூடுகளை உடைத்தவர் கைது

கொழும்பு,ஏப்.21
சிகிரியாவில் 20 இற்கும் மேற்பட்ட மழைக்குருவி கூடுகளை உடைத்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஒரு கிலோகிராம் மழைக் குருவி கூடு மூன்று லட்சம் ரூபாவுக்கு விற்கப்படுவதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று தெரிவித்த பொலிஸார் சந்தேகநபரை தம்புள்ள நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை அமைச்சரவையால் ஏற்றுக்கொண்ட ஒன்று

### அதனால் நாம் கருத்து வெளியிடுவதில் தவறில்லை என்கிறார் ஹக்கீம்

கொழும்பு,ஏப்.21
கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரை, அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. அதன் அடிப்படையில் நாம் கருத்து வெளியிடுவதில் தவறு இல்லை என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
கண்டி, மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கள தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கத் தேரர் ,வண. நாப்பான பெம்சிரி தேரர் ஆகியோர்களை புதன்கிழமை அமைச்சர் சந்தித்தார்.
அவர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



ரவூப் ஹக்கீம்

பௌத்த தேரர்கள் தொடர்பான சட்ட வரைவு ஒன்று விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு கருத்து வெளியிடுவதில் எவ்வித பயனும் இல்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமைச்சரவையே ஏற்றுக் கொண் டுள்ளது. அதிலுள்ள விடயங் களைத் தெளிவுபடுத்துவதில் தவறில்லை. எனவே கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கட்சி என்ற வகையில் நாம் சில விடயங்களை முன் வைத்தமை தவறான ஒன்றல்ல. பொதுபல சேனா பகிரங்க விவாதத்துக்கு அழைத்துள்ளவர்களில் நானும் ஒருவன். நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.
ஏனெனில் பக்குவமான முறையில் நடந்து கொள்ளும் ஒருவருடன்தான் கருத்துப் பரிமாற முடியும்.
அதனால் நடுநிலை தவறாது பொது விவாதத்தை முன் நடத்தும் அமைப்புக்கு மட்டுமே ஒத்துழைப்பு வழங்க முடியும்-என்றார். (ச-10)

# தமிழருக்கு எதிராக செய்தி வெளியிடும் இந்திய ஊடகத்துக்கு செவ்வியளிக்க மறுத்த வைகோ!

சென்னை, ஏப்.21

தமிழர்களுக்கு எதிராக செய்தி வெளியிடும் இந்திய ஊடகம் ஒன்றுக்கு செவ்வி வழங்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மறுத்துள்ளார்.

தமிழகத்தில் விருது நகர் பிரதேசத்தில் வைகோ பரப்புரையில் ஈடுபட்டிருந்த போது 'டைம்ஸ் நவ்' தொலைக் காட்சியின் செய்தியாளர் அவரை செவ்வி காண முயன்றுள்ளார்.



செவ்வி காணச்சென்ற செய்தியாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் வைகோ

வைகோ நேற்று முன்தினம் விருதுநகரில் இருந்து சூரன் பட்டி நோக்கி காரில் சென்று கொண்டிருந்தார். இடையில் வழிமறித்த டைம்ஸ் நவ். பத்திரிகை பெண் செய்தியாளர் வைகோவிடம் செவ்வி எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஆனால் பேட்டியளிக்க வைகோ மறுப்புத் தெரிவித்து விட்டார். தெரலைக்காட்சி உரிமையாளரே வைகோவிடம் செவ்வியெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளதால் தருமாறு செய்தியாளர் கேட்டுக்கொண்டார்.

அதன்பின்னர் காரில் இருந்து இறங்கிய வைகோ,

"உங்கள் தொலைக்காட்சி, தமிழர்களுக்கு எதிராக செய்திகளை ஒளிபரப்புகிறது. ஈழத்தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தி விடுதலைப் புலிகளைத் தீவிரவாதிகளாக சித்தரித்து செய்தி ஒளிபரப்புகிறது.

பா.ஜ.க. கூட்டணி தமிழகத்தில் வெற்றி பெறாது என்றும் சொல்கிறது. இப்படி தமிழினத்துக்கு துரோகம் செய்வதற்காகவே ஊடகம் நடத்திக் கொண்டு இருக்கும் உங்கள் நிறுவனத்துக்கு செவ்வியளிக்க முடியாது.

'டைம்ஸ் நவ்' ஊடகத்தின் நிறுவுநர் வந்து கேட்டாலும் செவ்வியளிக்க முடியாது.

உண்மையான செய்திகளை முதலில் வெளியிடுங்கள் என்று கூறிவிட்டு காரில் ஏறிச் சென்று விட்டதாக வைகோவின் பேஸ்புக் வலைத் தளத்தில் அவரது ஆதரவாளர் ஒருவர் கூறியுள்ளார். (வ)

# இந்திய இளைஞனின் சாவுக்கு காரணம் இருதய செயலிழப்பே

## இலங்கைப் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.21

இந்தியாவின் ஹைதராபாத் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் இருதய செயலிழப்பு காரணமாகவே உயிரிழந்ததாக இலங்கை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

26 வயதான திலீப் மாரு என்ற தனது சகோதரர் சிறுநீரக மோசடி காரணமாக கொழும்பில் உயிரிழந்ததாக அவரது சகோதரரான கணேஷ் ஹைதராபாத் மத்திய குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை இலங்கை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண நிராகரித்துள்ளார்.

திலீப் மாருவின் இரு சிறுநீரகங்களும் சிறந்த முறையில் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மருதானை பொலிஸார் விசாரணை மேற்கொண்டதாகவும், இளைஞனின் இறப்புக்கு சிறுநீரக மோசடி காரணம் இல்லை என்றும் அஜித் ரோஹண கூறினார்.

எனினும் சிறுநீரக உதவி தேவை எனக் கோரி ஒரு குழு முகநூல் மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்களில் விளம்பரம் செய்துள்ளது. அதில் விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு இலங்கை செல்ல இலவச வசதி செய்து கொடுத்து இலங்கையில் சிறுநீரக மாற்று சிகிச்சை செய்யப்பட்டு வந்துள்ளதாக இந்திய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (வ)

## நவுரு தீவின் அகதி முகாமில் டெங்கு

இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுரு தீவின் அகதி முகாமில் டெங்கு நோய் பரவி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைக்ள் ஆர்வலர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்த முகாமில் 3 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேயிலைத் தொழிற்றுறையில் தொழிலாளர் பற்றாக்குறை

கொழும்பு, ஏப்.21

தேயிலை தொழிற்றுறையில் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது எதிர்காலத்தில் மிகப் பெரிய சவாலாக அமையும் என்று, தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ரொசான் ராஜதுரை ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தேயிலைத் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கை முறைமை மாறி வருகின்றமை இதற்கு காரணமாக எடுத்துக் கூறப்படுகிறது.


இலவச கல்வி முறைகள் மற்றும் தொலைதொடர்பு சேவைகளின் விஷ்தீரணம் என்பன தேயிலை தொழிற்துறை சார்ந்த மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

# ராஜீவ் கொலை வழக்கில் நீதிபதியின் அறிவிப்பு நீதிமன்ற மரபுக்கு உகந்ததா?

## கேள்வி எழுப்புகிறார் கருணாநிதி

சென்னை, ஏப்.21

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் அறிவித்திருப்பது, நீதிமன்ற மரபுகளுக்கு உகந்ததுதானா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.



கருணாநிதி

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தலைமை நீதிபதியின் அறிவிப்பு, தமிழகத்தில் அரசியல் ரீதியான விளைவை ஏற்படுத்துமோ என்ற அச்சம் பலருக்கும் எழுந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் வழக்கறிஞர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

வழக்கின் தீர்ப்பு மக்களவைத் தேர்தல் வாக்கெடுப்புக்கு முன்பு வெளியாகும் என்று நீதிபதி கூறியிருப்பது எத்தகைய சாதக பாதகங்களை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கேற்ப முடிவு செய்வது நீதிமன்ற நெறிகளைக் காப்பாற்றப் பயன்படும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## இலங்கை அகதிகளுக்கு ஆஸியில் சட்ட உரிமை மறுப்பு

ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள் தமது அடிப்படை ஜனநாயக மற்றும் சட்டரீதியான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு, ஆஸ்திரேலிய அரசாங்கம் தடை விதித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி அங்குள்ள இலங்கை அகதிகள் தங்களை நேர்மையான அகதிகள் என்பதை நிரூபித்து அகதி அந்தஸ்தை பெற்றுக்கொள்வற்கு சட்டரீதியாக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சோசலிச நிபுணர்களின் இணையத்தளம் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

கடந்த மாதம் அங்குள்ள அகதிகள் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு அரசு தடை விதித்திருந்தது.

இதன் மூலம் அகதிகளின் பாதுகாப்பு விசாவுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அகதிகள் மேற்கொள்ள வேண்டிய சட்டநடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இது சர்வதேச அகதிகள் சட்டத்துக்கு எதிரானது என்று அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. (வ)

கண்ணீர் அஞ்சலி

சரவணமுத்து தில்லையம்பலம்



ஓய்வுபெற்ற அதிபர்,
கணித ஆசான்
(யா/ உடுப்பிட்டி
அமெரிக்கன்
மிஷன் கல்லூரி)



கத்தியும் கதறியும் துன்பம் தீரல
அத்தனை பாசமாய் வளர்த்த ஆசானின்
எத்தகை ஞாபகம் இனிய அந் நாட்களும்
இத்தனை காலமும் எம் மனம் நீங்கல

வண்ணத்தில் வடிவத்தில் வையத்தில் இல்லை - எம்
எண்ணத்தில் எழுத்தில் எதிலும் அவர் உண்டு
விண்ணோடு சென்றாலும் விலை பேச முடியாத
கண்ணோடு மணியாக கருத்தில் அவர் இருப்பார்

அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2000 A/L கணிதப் பிரிவு மாணவர்கள்,
(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி)

கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

காணவில்லை

பால் கறக்கும் கறுப்பு நிற, ஒரு கொம்பு வெட்டப்பட்ட மாடு கடந்த 10 நாள்களாக கொக்குவில் பகுதி யிலிருந்து காணவில்லை.
இது பற்றி அறிந்து தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 6124173, 075 5454410

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் குணரட்ணம்



கொண்டலடி நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணரட்ணம் நேற்று (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - பாய்க்கியம் தம்பதியரின் செல்வப்புதல்வனும் அமராவதியின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான வள்ளிநாயகி, சாந்தநாயகி, ராசலிங்கம் ,ஜெயரட்ணம் மற்றும் விஜயநாயகி, ஜீவநாயகி ஆகியோரின் சகோதரரும் பிரதீபன், கார்த்திகா, ஜீவிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மிலன், தீனதயாளன் ஆகியோரின் மாமனாரும் வைஷ்ணவன், அஸ்மிதா, டனிற்றா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2014) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொண்டலடி, நல்லூர்
077 3473050

தகவல்
குடும்பத்தினர்



யாழ். பண்ணை மீன்சந்தைக்கு அருகில் உள்ள கழிவுப் பொருள் சேகரித்து வைக்கும் கொள்கலன் திறந்த நிலையில் உள்ளதால் அதிலுள்ள கழிவுகளை கால்நடைகள் தமது உணவுக்கு பயன்படுத்தி வருகின்றன.
அவை கழிவுகளை வீதியில் சிதறவிடுவதால் அந்தப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ற-17)

## சோமஸ்கந்தா, விக்னேஸ்வரா கட்டட திறப்பு விழாவில் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மற்றும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாடிக் கட்டடங்களின் திறப்பு விழாவிற்கு மத்திய கல்வி அமைச்சர் வருகைதரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்தோதய திட்டங்களின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட இந்த அடுக்கு மாடிக் கட்டடங்களின் திறப்பு விழா நாளை மறுதினம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொண்டுதிறந்துவைக்கவுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கல்வி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ள மத்திய கல்வி அமைச்சர் அன்றையதினம் மாலையில் இந்தக் கல்லூரிகளின் கட்டடத் திறப்பு விழாவிலும் கலந்து கொள்ளவுள்ளார் என்று வடமாகாண கல்வி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டடங்கள்ஒவ்வொன்றும்சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (ற-101)

## அடிப்படை வசதிகள் இல்லாது மீள்குடியேறிய 47 குடும்பங்கள்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளத்தில் மீள் குடியேறிய 47 குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முலலைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறாட்டிகுளம் பகுதியில் போரின் பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி இப்பகுதியில் 47 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளனர்.

இந்த நிலையில் நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்தப்பகுதி மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் முழுமையாகக் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

அதாவது 24 வீடுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்தக்கிராமத்துக்கான 6 கிலோ மீற்றர் பிரதான வீதி எந்த விதமான புனரமைப்புக்களுமின்றிக்காணப்படுகின்றது. அத்துடன் மின்சார வசதி, போக்குவரத்து வசதி மற்றும் அடிப்படை வசதிகளின்றி மீள் குடியேறிய மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (வ-55)

# திருட்டு வழியில் மீண்டும் கஸினோ: போராட்டத்துக்கு ஜே.வி.பி.அழைப்பு

கொழும்பு, ஏப்.21

கடும் எதிர்ப்பால் வாபஸ் பெறப்பட்ட கஸினோ சட்ட வரைவை சொற்பத மாற்றங்களுடன் மீண்டும் கொண்டு வந்து நாட்டை சூதுக் களமாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது - என்று குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி. அரசின் இந்த சமூக விரோதச் செயலுக்கு எதிராக நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி.மேற்கண்டவாறுகூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

கஸினோ வர்த்தமானியை சொற் பத மாற்றங்களுடன் மீண்டும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. கஸினோ என்பது சாதாரண விடயமல்ல. விபசாரம், குற்றச்செயல்கள், கறுப்புப்பண மோசடி ஆகியவற்றை ஊக்குவிக்கும் சமூக விரோத சூதுவிளையாட்டாகும். இதற்கு அனுமதி வழங்கினால் நாட்டில் பல்வேறு சமூக விரோதச் செயல்கள் தலை தூக்கும். திருட்டு வழியில் - சொற்களை மறைத்து அரசு கொண்டு வந்துள்ள கஸினோ திட்டத்தை தோற்கடிக்க வேண்டும். இதற்கு எதிராக நாம் நாடாளுமன்றில் வாக்களிப்போம். இது விடயத்தில் அரசின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய என்ன செய்யப்போகின்றது? முடிந்தால் இந்த வர்த்தமானி அறிவித்த ல் மூன்றுக்கு எதிராக எதிர்ப்பை வெளியிடுமாறு நாம் அரசுடன் இருப்பவர்களுக்குச் சவால் விடுக்கின்றோம். சாதாரண மக்களிடம் வரி அறவிடும் அரசு, கஸினோ திட்டங்களுக்கு வரி விலக்களித்துள்ளது. இது மாபெரும் சமூக விரோதச் செயலாகும் - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எட்டிய

தகவல்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கெடுக்கவுள்ளது என்று கூறப்பட்டிருந்தது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து மேலும் குறிப்பிட்ட அவர்,

"நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை. நாம் ஒரு போதும் தெரிவுக் குழுவில் பங்கெடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. எமக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சின் போது, இருதரப்பு பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைத்தே தெரிவுக் குழு செயற்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இலங்கை அரசு அதற்கு மாறாகச் செயற்படுகின்றது. எனவே இலங்கை அரசு எம்முடன் பேச்சு நடத்தி அதில் எட்டப்படும் இணக்கப்பாட்டை முன்வைத்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைச் செயற்படுத்தும் என்று உறுதியளித்தால் அதில் பங்கேற்க நாம் தயாராக இருக்கின்றோம்"- என்று தெரிவித்தார். (ற-5)

### விசாரணைக்குழு

இலங்கையில் இடம்பெற்றது என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகளை உருவாக்குவதில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆயினும் விசாரணைக் குழு மற்றும் அதில் இடம்பெறுவோர் பற்றிய விவரங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

எனினும், அடுத்தமாதம் எந்த நேரத்திலும் இது தொடர்பான முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூனைச் சந்திப்பார் என்று ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன், அது தொடர்பாக இலங்கை அரசுக்கு ஜெனிவாவில் உள்ள வதிவிடப் பிரதிநிதி மூலமும் அறிவிக்கப்படும் என்றும் குறித்த கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது. (ற)

### விசாரணை வளை

அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோரே தமது உறவுகள் காணாமற்போனமைக்குக் காரணம் என்று கூறியிருந்தனர். அதையடுத்தே அவர்களிடம் விசாரணை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

தற்போது குறித்த சாட்சியங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றை உரிய முறையில் ஒழுங்குபடுத்திய பின்னர், ஆணைக்குழுவின் அதிகார வரம்புக்குட்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதியால் கடந்த ஆண்டு நியமிக்கப் பட்ட இந்த ஆணைக்குழு வடக்கு-கிழக்கில் தனது அமர்வுகளை நடத்தியுள்ளது. ஜனவரி மாதம் கிளிநொச்சியிலும், பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்திலும், மார்ச் மாதம் மட்டக்களப்பிலும் தனது பகிரங்க மக்கள் அமர்வை நடத்தியிருந்தது. (ற-5)

### மேலதிக

மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆளணி வெற்றிடத்துக்கும் மேலதிகமாக 310 பேர் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளதாலேயே இந்தச் செலவீனம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. மேலதிக செலவீனத்தினால் தற்போது பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை . ஆயினும் வருடத்தின் அரையாண்டின் பின்னர் ஊழியர்களுக்கான வேதனம் வழங்குவதில் நெருக்கடி ஏற்படும், சிலசமயம் வருடத்தின் இறுதிப் பகுதியில் ஊழியர்களுக்கு வேதனம் வழங்க முடியாத நிலை கூட ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை எதிர்வரும் மே மாதம் வடக்கு மாகாணத்தின் ஆளணி மீளாய்வு செய்யப்படவுள்ளது. அதன் போது கல்வித் திணைக்களத் துக்கு மேலதிக ஆளணிக்கு அனுமதி வழங்கப்பட்டால் இந்த நிலைமை சரிசெய்யப்படும் என்று கல்வித் திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-5)

### தமிழ்

தமிழ்க் கைதிகளைப் பார்வையிடுவதற்கு மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை அநுராதபுரம் சென்று, அங்குள்ள ஆயரையும் அழைத்துக் கொண்டு சிறைச் சாலைக்குச் செல்வதற்குத் தயாரானார். அதன் போதே அனுமதி மறுக்கப்பட்ட விடயம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி அழைப்பொன்றின் மூலமே அனுமதி மறுக்கப்பட்டுள்ள விவகாரம் தமக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்ட அதிகாரியொருவரின் கட்டளையின் பிரகாரமே தாம் தடுத்து நிறுத்தப்பட்டனர் என்றும் -

அதிலும், குறிப்பாக மன்னார் ஆயருக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத்தாம் அறிந்தார் என்றும் மன்னார் ஆயர் குறிப்பிட்டார்.

"சமாதானத்தையும், மனித நேயத்தையும் போதிக்கும் இன்றைய புனித நாளில், இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தி யுள்ளது. உண்மையானதொரு நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்கும் விடயத்தில் இத்தகைய சம்பவங்கள்தான் தாக்கத்தை - தடங்கலை ஏற்படுத்துகின்றன. எமக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் தெளிவுபடுத்த வேண்டும்" என்றும் இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார். அதேவேளை,

அனுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதி களைப் பார்வையிடுவதற்கு மன்னார் ஆயர் அனுமதி கோரியிருக்கவில்லை. அனுமதி கோரியிருந்த அருட் தந்தை ஒருவருக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந் திரரத்ன பல்லேகம தெரிவித் தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அனுமதியுடன், அனுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்குச் சென்றிருந்த தனக்கும், அநுராதபுரம் மறை மாவட்ட ஆயருக்கும் திடீரென அனு மதி மறுக்கப்பட்டது என மன்னார் ஆயர்தெரிவித்துள்ளமைதொடர்பில் வின வியபோதே, சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்ட அதிகாரியொருவரின் உத்தரவின் பிரகாரமே, திடீரென அனுமதி மறுக்கப்பட்டது என கூறப்படுகின்றதே என வினவியபோது,

அவ்வாறு இல்லை. மன்னார் ஆயர் அனுமதி கோரியிருந்தால்தானே அவருக்கு அனுமதி வழங்கமுடியும். அவர் இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைக்கவேயில்லை- என்றார். (ற-சி)

### கேபியின்

தது. எனினும் தற்போது இந்திய வெடிபொருள் சட்டத்தை மீறியமை மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குமரன் பத்மநாதன் தேடப்பட்டு வருபவர் என்று கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குடனும் குமரன் பத்மநாதனுக்கு தொடர்பு இருப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளார் என்பதுடன், சர்வதேசப் பொலிஸாரால் தேடப்பட்டு வருபவராக அறிவிக்கப்பட்டுள்ள அவர் தற்போது கிளிநொச்சியிலே வாழ்ந்து வருகின்றார். (ற-5)

### இணைத்

குழுக்கூட்டத்துக்கான இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை யடுத்து இன்றைய ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ற-5)

### இருநாட்டு

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"இலங்கை, இந்திய மீனவர்கள் அத்து மீறல்களில் ஈடுபடுதல் மற்றும் கைதுகள் தொடர்பில் இரு நாடுகளினதும் அமைச்சு ரீதியான பேச்சு நடத்தப்பட வேண்டியது அவசியமானது. அடுத்த மாதத்தில் இவ்வாறானதோர் பேச்சு நடத்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஏற்கனவே இந்திய மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்வரும் மே மாதம் 12, 13 ஆம் திகதிகளில் இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் கொழும்பில் பேச்சு நடத்தப்பட உள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. எனினும், இது குறித்து இலங்கை அரசிற்கு உத்தியோகப்பூர்வமாக எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை எனவும் மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதன் காரணமாக இரண்டாவது சுற்றுப் பேச்சு மீளவும் தடைப்படலாம் என்று கூறப்படுகின்றது. (ற-5)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உதயன் பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம், ஏப்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் இன்று திங்கட்கிழமை பி.ப 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வீண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

# கரவெட்டி விக்னேஸ்வராவை வீழ்த்தி சம்பியனானது உடுப்பிட்டி அ.மி.க.

பருத்தித்துறை, ஏப்.21

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனானது உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணி.

இந்த இறுதியாட்டம் நேற்று குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா அணியினர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியினரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறினர். ஆனால் ஓட்ட எண்ணிக்கையும் மெது மெதுவாகவே உயர்ந்தது. இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை



இழந்து 43 ஓட்டங்களை விக்னேஸ்வரா அணி எடுத்திருந்தது. அதில் சஞ்சீவன் மூன்று ஓட்டங்கள் அடங்கலாக 22 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி சார்பாக பிரணவன், நிறஞ்சன், வனஜன், நிலக்சன், கலைவர்ணன் ஆகியோர் தலா ஓர் இலக்குகளைக் கைப்பற்றினர்.

44 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணிக்கு விக்னேஸ்வரா கல்லூரி அணியின் பந்து வீச்சு சவாலாக விளங்கியது.

இதனால் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியினர் ஓட்டங்களை எடுப்பதில் தடுமாறினர். 8 ஆவது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 21 ஓட்டங்களை மாத்திரம் உடுப்பிட்டி அணியினர் எடுத்திருந்தனர். மிகுதியாக இருந்த இரு பந்துப் பரிமாற்றங்களில் 23 ஓட்டங்களைப் பெறவேண்டிய இக்கட்டான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

எனினும் 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தை எதிர்கொண்ட நிலக்சன் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அந்தப் பந்து பரிமாற்றத்தில் இரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அதையடுத்து வெற்றி வாய்ப்பு உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணி பக்கம் சாய 9.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப்பெற்றுச்சம்பியனாகியது.

இந்த அணி சார்பாக நிலக்சன் இரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டங்களையும், ராஜீ 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் விக்னேஸ்வரா அணி சார்பாக பிரசாந் 2 இலக்குகளையும், திருமால் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற-422)

## நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது கொலின்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்.21

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டதில சமனிலை தவிர்ப்பு உதை மூலம் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியது கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும், கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இரு அணிகளும் மிகவும் பலம் பொருந்திய அணிகளாக விளங்கியமையால் இரு அணி வீரர்களிடமும் பயத்தோடு கலந்த பதட்டம் காணப்பட்டதனை ஆட்டத்தின் போது அவதானிக்க முடிந்தது. இந்தப் பதட்டம் காரணமாக பல கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் இரு அணியினராலும் தவறவிடப்பட்டன.

ஆட்டம் தொடங்கி முடியும் வரை பரபரப்புக்கும் விறுவிறுப்புக்கும் குறைவில்லாத வகையில் ஆட்டம் இடம்பெற்றது.

இடைவேளைக்கு முன்னரும் இடைவேளைக்கு பின்னரும் எதிரணி வீரர்கள் இல்லாத நிலையிலும் கோல் அடிப்பதற்குப் பல சந்தர்ப்பங்கள் இரு அணியின் முன்கள வீரர்களுக்கும் கிடைத்தன. ஆனால் அவர்கள் தம்மிடையே காணப்பட்ட பதற்றம் காரணமாக பந்தினை கோல் கம்பங்களுக்குள் அடிப்பதற்குப் பதிலாக வெளியில் அடித்த வண்ணம் இருந்தனர். இதனால் ஆட்டம் முடியும் வரை இரு அணியினராலும் எவ்வித கோல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட 5 சமனிலை தவிர்ப்பு உதையில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அனுசாந், தர்சன், நிமல் ஆகியோரும், நவஜீவன்ஸ் அணி சார்பாக ஸ்ரீசங்கர், பசீலன் ஆகியோரும் தமது அணி சார்பாக கோல்களைப் போட ஏனைய வீரர்கள் கோட்டை விட்டனர். இதனால் 3 :2 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் வென்று காலிறுதிக்கு முன்னேறியது. (ற-400)

## உடுப்பிட்டி யுத் அணியை வீழ்த்தியது வதிரி டயமன்ஸ்

யாழ்ப்பாணம் ,ஏப். 21

பீமாவின் கலக்கலான ஆட்டம் கை கொடுக்க உடுப்பிட்டி யுத் அணியை 4:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டது வதிரி டயமன்ஸ் அணி.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

அதில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி யுத் அணியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடங்கள் வரை இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபிக்கும் வகையில் விளையாட்டில் ஈடுபட்டனர். இக் காலப்பகுதியில் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கு சந்தர்ப்பங்கள் பல கிடைத்த போதும் இரு அணி வீரர்களும் கோட்டை விட்டனர்.

இத் தருணத்தில் ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் துசிகரன் நேர்த்தியான கோல் ஒன்றைப் போட, மறு நிமிடத்தில் பிறேம்குமார், (பீமா) தன் பங்கிற்கு கோல் ஒன்றினை அடித்து தமது அணியை முன்னிலைப்படுத்தினர். இதனால் 2:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி சற்று நேரத்தில் உடுப்பிட்டி யுத் அணியின் வீரரான பிரசாந் மிக அருமையாக கோல் ஒன்றைப் போட்டார். அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிமிடங்களில் பிறேம்குமார் (பீமா) மற்றும் ரஜீகரன் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டனர்.

இறுதியில் 4:1 என்ற அடிப்படையில் டயமன்ஸ் அணி வென்று காலிறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ற-400)

## நவஜீவன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஏப்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன. அதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## மரதன் ஓட்டத்தில் வெற்றியீட்டியோர்



வலி.வடக்கு, ஏப்.21

புத்தாண்டை முன்னிட்டு சுன்னாகம் பொலிஸாரும், உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து கடந்த சனிக்கிழமை நடத்திய ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவாகளின் விபரம் வருமாறு.

முதலாம் இடம் கி.ஜேந்தன் (பண்டத்தரிப்பு), 2ஆம் இடம் அ.ஜெகதீஸ்வரன் (தெல்லிப்பழை), 3ஆம் இடம் த.தனுஷ் (பண்டத்தரிப்பு), 4ஆம் இடம் ஜெ.யசிந்தன் (தாவடி), 5ஆம் இடம் தே.சிந்துஜன் (கந்தரோடை), 6ஆம் இடம் கோ.சுதாசன் (சங்குவேலி), 7ஆம் இடம் ஜெ.சுஜிந்தன் (சங்குவேலி), 8ஆம் இடம் ம.சசிகரன் (தாவடி). (ற-86)

## தென்மராட்சி கல்வி வலய மட்ட சதுரங்கப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றன.

அதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

15 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி யும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை விடத்தற்பளை கமலாட்சி வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (ற-23)

## வவுனியா தெற்கு, வெண்கல செட்டிகுளம் கபடியில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஏப். 21

வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஆண் ,பெண் இருபாலாருக்குமான கபடி போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பெண்களுக்கான கபடி போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது.

இதில் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக அணி 32:15 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக அணி மோதியது.

அதில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி 30:15 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

# மக்ஸ்வெல், டேவிட் மில்லர் விளாசலில் ராஜஸ்தான் ரோயல்ஸுக்கு பெரு வெற்றி



மக்ஸ்வெல் மற்றும் டேவிட் மில்லர் முழங்கித் தள்ள ஒரு ஓவர் மிச்சம் இருக்கையிலேயே பஞ்சாப் அணியை துவம்சம் செய்து பெரு வெற்றி பெற்றது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரின் மற்றொரு ஆட்டம் சார்ஜா மைதானத்தில் நேற்று நடைபெற்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை எதிர்த்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மோதியது.

துரத்தியடிக்க ஏற்ற மைதானத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆரம்பத் துடுப்பாளர்கள் நாயரும் றஹானேயும் குறைந்த ஓட்டங்களுடன் திரும்பினர். எனினும் பின்னர் சாம்சனும் வட்சனும் நின்றாடி அரைச் சதங்களைப் பூர்த்தி செய்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணி 5 இலக்குகள் இழப்புக்கு 191 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி. முன்னணி வீரர் சேவாக் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து சாகாவும் இரண்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மறுமுனையில் புஜாரா நிதானமாக நின்றாடிக் கொண்டிருந்தார். இரண்டு இலக்கு வீழ்ச்சிக்குப் பின்னர் களமிறங்கிய மக்ஸ்வெல், புஜாராவுடன் இணைந்து அதிரடியாக ஆடினார். அவர் 45 பந்துகளில் 8 பவுண்டரிகள் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 89 ஓட்டங்கள் குவித்தார்.

மக்ஸ்வெல் ஆட்டமிழக்க அந்த இடத்தை நிரப்ப வந்தார் டேவிட் மில்லர், பந்துகளை விளாசியடித்து ஓட்ட வேகத்தை அதிகரித்தார். 19 பந்துகளில் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 51 ஓட்டங்களை முழங்கினார். 18.4 ஓவர்களில் 3 இலக்குகளைப் பறிகொடுத்து 193 ஓட்டங்களைப் பெற்று ராஜஸ்தான் ரோயல்ஸ் வெற்றி பெற்றது. (உ)



## சென்னைக்கு மேலும் ஒரு இடி

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு மேலும் ஒரு இடி விழுந்துள்ளது.

அணி எதிர்பாராத தோல்விகளால் திணறி வரும் நிலையில், சகலதுறை வீரரான பிராவோ இடது தோள்பட்டையில் காயம் அடைந்துள்ளமை மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப் அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் மேக்ஸ்வெல் அடித்த பந்தை, பிடிக்கப் பாய்ந்த பிராவோவின் தோளில் காயம் ஏற்பட்டது.

உடனடியாக களத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட அவர், அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். காயத்தின் தன்மை குறித்து மேலதிக மருத்துவ சோதனைகளின் பின்னரே தெரிவிக்க முடியும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். எப்படி இருந்தாலும் அடுத்து வரும் சில ஆட்டங்களில் பிராவோ பங்கெடுக்க முடியாத நிலை நீடிக்கும் என்று அணி நிர்வாகிகள் கவலைப் படுகின்றனர்.

கடந்த தொடரில் அதிக இலக்குகளை (32) வீழ்த்திய வீரர் என்ற பெருமை பெற்றவர் பிராவோ. பஞ்சாப் அணிக்கு எதிராக இவர் பந்துவீசாததும் சென்னை அணி அந்த ஆட்டத்தில் தோற்றதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (உ)

## இலங்கை அதிர்ச்சி

இலங்கை அணியின் பயிற்சியாளர் போல் பிராட்ரஸ், இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் துணைப் பயிற்றுவிப்பாளராகச் செல்வதற்குக் காட்டும் நாட்டத்தைக் கண்டு இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து அணிக்குப் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக பீற்றர் மூர் நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரத்தில் துணைப் பயிற்றுவிப்பாளராக போல் பிராட்ரஸை நியமிக்க இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகிகள் விரும்புகின்றனர். இது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை அணியுடனான ஒப்பந்தம் பிராட்ரஸுக்கு 2015 டிசெம்பர் 31இலேயே முடிவடைகின்றது. அப்படி இருந்த போதும் இங்கிலாந்து அணியின் துணைப் பயிற்றுவிப்பாளராகச் செல்வதில் அவர் நாட்டங் கொண்டிருக்கிறார்.

இலங்கையில் பணியை உதறிவிட்டு தாய் நாட்டுக்கு ஓடிவிட அவர் காட்டும் ஆர்வம் இலங்கை அதிகாரிகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அதிலும், இலங்கை அணி இன்னும் சில வாரங்களில் இங்கிலாந்துக்குப் பயணம் செய்ய உள்ள நிலையில் இந்த நகர்வு பேரிடியாக இருக்கின்றது என்று கொழும்பில் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

அதேசமயத்தில், பிராட்ரஸின் தற்போதைய ஒப்பந்தம் குறித்து தாம் கரிசனை கொண்டிருப்பதால் அவரது நியமனம் பற்றிய அறிவிப்பை உடனடியாக வெளியிடவில்லை என்றும் அது பற்றிய பேச்சுக்கள் நடந்து வருகின்றன என்றும் இலங்கிலாந்து கிரிக்கெட் அதிகாரிகள் கூறியுள்ளனர். (உ)

## விசாரணைக் குழு நியமனம் ரவிசாஸ்திரியும் அதில் ஒருவர்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நடந்த ஊழல் மற்றும் மோசடிகளைக் கண்டறிவதற்காக இந்திய உச்ச நீதிமன்றத் தின் உத்தரவுப்படி நியமிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவின் பெயர்களை இந்திய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இந்திய மத்திய புலனாய்வுக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் ஆர்.கே.ராகவன் தலைமையில் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட உள்ளது. கல்கத்தா உயர் நீதிமன்ற நீதியரசர் ஜே.என்.பட்டேல் மற்றும் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரும் தற்போதைய வர்ணனையாளருமான ரவிசாஸ்திரி ஆகியோரும் குழுவில் அங்கம் வகிப்பர்.

இந்தியக் கிரிக்கெட் சபையின் கூட்டம் நேற்று மும்பையில் நடைபெற்றது. அதிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஏப்ரல் 16ஆம் திகதி நடந்த விசாரணையின் போது, ஐ.பி.எல். முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சுயாதீனமான சுதந்திரமான ஒரு குழுவை நியமிக்கும்படி இந்தியக் கிரிக்கெட் சபைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

பல்வேறு நபர்களின் பெயர்களும் இந்த விசாரணைக்குழுவுக்குப் பரிந்துரைக் கப்பட்ட நிலையில், நியமிக்கப்பட உள்ளவர்களின் பெயர்களை இந்தியக் கிரிக்கெட் சபை தீர்மானித்து விட்டது என்று அதன் செயலாளர் சஞ்சை பட்டேல் ஊடகங் களுக்குத் தெரிவித்தார். எனினும் அந்த பெயர் விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். (உ)

## பங்களாதேஷ் வீரர்களுக்கு உளநல ஆலோசனைகள்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி வீரர்களின் உளவியலை மேம்படுத்த அவர் களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக துடுப்பாட்டம் மற்றும் சுழல் பந்துவீச்சுத் துறை களில் செயற்படுபவர்களின் உள நலனில் அதிக அக்கறை செலுத்தப்பட உள்ளது.

இதற்காக விசேட உளவியல் நிபுணர் ஒருவர் அணியின் உளவியல் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட உள்ளார். இதற்காக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை உளவியல் நிபுணர் ஒருவரைக் குறுகிய காலத்திற்கு ஒப்பந்தம் செய்ய உள்ளது. இந்த மாத இறுதியில் வீரர்களுக்கான இருவாரகாலப் பயிற்சிகளை வழங்குவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் பங்களாதேஷ் அணி யின் திறமை மோசமான நிலையை அடைந் திருப்பதே இதற்கான காரணம் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கூறுகிறது. 20/20 உலகக் கிண்ணப் போட்டியில் இரு ஆட்டங்களில் மட்டுமே பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருந்தது. அதுவும் ஆப்கானிஸ்தான் மற்றும் கொங்கொங் அணிகளை மட்டுமே வென்றிருந்தது. அதற்கு முன்னர் இலங்கை அணியுடனான போட்டியில் பெருந் தோல்வியை அடைந்திருந்தது.



## எச் சூழ்நிலையிலும் பயமற்றவர் சேவாக்

### *தென்னாபிரிக்க வீரர் மில்லர் புகழாரம்*

இந்திய அணி வீரர் விரேந்திர ஷேவாக், எந்தச் சூழ்நிலையிலும் பயமின்றி, தைரியமாக விளையாடும் வீரர் என்று புகழ்மாலை சூட்டியிருக்கிறார் தென்னாபிரிக்க அணியின் இளம் வீரர் மில்லர்.

ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகிறார் மில்லர். ஷேவாக்கிடம் இருந்து கற்றுக்கொவதற்கு நிறையவே இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் நட்சத்திர வீரராக ஜொலித்து வருகிறார் மில்லர். ஆனால் ஷேவாக் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதற்காகக் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் மில்லர் அண்மையில் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளித்தார்.

தனது கதாநாயகர்களில் விரேந்திர ஷேவாக்கும் ஒருவர் என்று அந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார்.

"அவரிடம் இருந்து நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள முடியும். எந்தவிதமான சூழ்நிலையிலும் பயமின்றி, தைரியமாக விளையாடும் அணுகுமுறையை அவரிடம் இருந்து எனக்குள் கிரகித்துக் கொள்ள விரும்புகிறேன்" என்றார் மில்லர்.

"அவர் தன்நம்பிக்கை மிக்க வீரர், மற்றவர்கள் அவரது ஆட்டம் குறித்து என்ன பேசுகிறார்கள் என்பது பொருட்டல்ல" எனவும் அவர் கூறினார். (உ)

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர், யுவதிகள், அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 26.04.2014 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00 - 05.00 (இடமில்லை)

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

குறிப்பு - பயிற்சிநெறி முடிவில் சர்வதேச தரத்திலான Diploma certificate வழங்கப்படும்.

SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

## வீடு வாடகைக்கு

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் (பூங்கனிச்சோலைக்கு முன்பாக) 4அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(நிறுவனங்களும் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு : 076 7323101

## தேவை

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் வீட்டில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒரு வரையும் வீட்டையும் பராமரிப்பதற்கு நடுத்தர வயதுள்ள பெண் வேலையாள் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொ.பே: 072 494 5906 (47041) (7.6.3)

## - ALLIANCE FRANÇAISE DE JAFFNA -

Only Official FRENCH Centre

af பிரெஞ்சு மொழி கற்பதற்கு af Alliance Française de Jaffna

FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.

புதிய வகுப்புகள; 26.04.2014 8.30 a.m. இன்றே பதிவுசெய்யுங்கள்

61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

நுண்கலைத்துறை ஆதரவில்

# புகைப்படக் காட்சி

சார்னி ஜெயவர்தன

மாலதி டி அல்விஸ்

21 APR 2014

# பெண் தெய்வத்தை எழுந்தருளச் செய்தல்

இலங்கையில் பத்தினி கண்ணகி வழிபாடு

ஏப்ரல் 22 - 26, 2014

காலை 10.00 - மாலை 05.00 மணி

காட்சிக் கூடம்,

நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்,

வடக்கில் 3 காட்சியறைகள்



Wedding Cards

திருமண அழைப்பிதழ்கள்



facebook.com/andradesigns

கிளிநொச்சி — யாழ்ப்பாணம்

ANDRA WEDDING CARDS

இப்பொழுது கிளிநொச்சியிலும் எமது திருமண அழைப்பிதழ் காட்சியறை

இணையதளம் மூலமாகவும் தெரிவு செய்யலாம் www.andradesigns.com

இப்போது கிளிநொச்சியில் புதிய கிளை அலுவலகத்துடன்

## அன்றா பிறிண்டேர்ஸ்

வடக்கில் அச்சுப் பதிப்பின் தனித்துவமான நிறுவனம்

- புத்தக வெளியீடுகள்
- லேபிள்கள்
- போஸ்டர்கள்
- சஞ்சிகைகள்
- துண்டுப் பிரசுரங்கள்
- நினைவு மலர்கள்
- விசிற்றிங்காட்

இப்போது வடக்கில் 3 கிளைகள்

ஓவ்செற் பிறிண்டிங்



ANDRA PRINTERS

| பிரதான அலுவலகம் | கிளை அலுவலகம் 1 | கிளை அலுவலகம் 2 |
|---|---|---|
| 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். | 470/2, ஏ9 வீதி கிளிநொச்சி, (கச்சேரிக்கு அருகாமையில்) |

Tel : 0212228929, 0217200000 Mob : 0776622981, 0777481696.

உங்கள் விளம்பரப் பலகைகள் மங்குகிறதா?

புதிய அழகிய வடிவமைப்புடன் கூடிய தரமான படைப்புக்களைப் பெற்றுக்கொள்ள

ANDRA DIGITAL PRINTING

## டிஜிற்றல் பிறிண்டிங்

6 Colour High Quality Digital Printing



இப்போது கிளிநொச்சியிலும் எமது புதிய கிளை

உங்கள் தேவைகளுக்கேற்ப 3 விலைகளில் டிஜிற்றல் பனர்களை பெற்றுக் கொள்ளுங்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.